

கல்கி
KALKI 6.4.1969 40காசு
அடுத்த இதழில்:
ராமாயணம்

காலைப் புத்துணர்ச்சியை மாலை வரை நீடிக்கச் செய்யுங்கள்!



காலையில் குளித்தபின் பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்கை உடலில் தூவிக் கொண்டால் புத்துணர்ச்சி மணிக்கணக்கில் நீடித்திருக்கும். வியர்வையை விரைவில் உறிஞ்சும் தன்மையுடைய பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் கடுங்கோடையில் கூட உங்களை இதமான உணர்ச்சியுடனும் உல்லாசத்துடனும் இருக்கச்செய்யும். உங்கள் உடலைத்தழுவி நிற்கும் ட்ரீம்ஃப்ளவர் நறுமணம் உங்களைச்சூழ்ந்துள்ளவர்களை மகிழ வைக்கும். எல்லா காலநிலைகளுக்கும் ஏற்றதாகையால் வருடம் பூராவும் தினமும் உபயோகிக்கச் சிறந்தது பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்!

பாண்ட்ஸ்

ட்ரீம்ஃப்ளவர் டால்க்—

மென்மை மிக்க மகோன்னத டால்க்!


சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன்
யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)


கல்கி

கீலக ௵ பங்குனி 24௳
1969 ஏப்ரல் 6

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.





ஆகா, நாம் பிழைத்தோம்!
தொழில் துறையினர்
புது வரிகள்
விவசாயத் துறையினர்
தேசப் பொருளாதாரம்
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

மலர் 28 □ இதழ் 36

பாகிஸ்தான் புகட்டும் பாடம்

ராணுவ வீரரும் தேசபக்தருமான பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான், தாம் பதவியிலிருந்து விலகி, பாகிஸ்தானில் ராணுவ ஆட்சியைப் பிரகடனம் செய்திருக்கிறார். சேனாதிபதி ஜெனரல் யாஹ்யாகான் பாகிஸ்தானில் ராணுவ ஆட்சி புரிவதற்குப் பூரண அதிகாரம் பெற்றிருக்கிறார். இதுவரை அயூப்கானின் முக்கியமான மந்திரிகளாக இருந்தவர்கள் தங்களது இலாகாக்கள் குறித்த ஆலோசகர்களாகப் புதிய ஆட்சியில் பணி புரிவார்கள்.

ராணுவ ஆட்சி தோன்றியபிறகு கிழக்குப் பாகிஸ்தானுக்கு உணவு தானியம் வெகு விரைவில் அனுப்பப்பட்டிருக்கிறது. கிழக்குப் பாகிஸ்தான் மேற்குப் பாகிஸ்தான் இரண்டிலுமே மக்களிடையே மீண்டும் கட்டுப்பாடு நிலைநாட்டப்பட்டு வருகிறது என்று செய்திகள் கூறுகின்றன.

''நிருவாகத்தில் தளர்ச்சியையும், குழப்ப நிலையையும் நாம் வேண்டிய அளவுக்குப் பார்த்து விட்டோம். இது எவ்விதத்திலும், எந்த உருவத்திலும் மீண்டும் நடக்காதிருக்குமாறு பார்த்துக் கொள்வேன். நிருவாகத்தில் ஈடுபட்டுள்ள அனைவரும் இதை ஓர் கடும் எச்சரிக்கையாக எடுத்துக் கொள்வார்களாக'' என்று ஜெனரல் யாஹ்யாகான் கூறியிருக்கிறார். இதைக் கவனிக்குமிடத்து, தில்லி நாடாளுமன்றத்தின் மீது அயூப்கானின் நிழல் விழுந்திருப்பதாகத் தோன்றுகிறது.

❖ ❖ ❖

பாகிஸ்தான் மக்களுக்கு மிகுந்த மதிப்புக்குரிய முறையில் பெரும் சேவை செய்தவர் அயூப்கான். அவரை எதிர்த்தவர்களும் பாகிஸ்தான் எங்கிலும் கிளர்ச்சிகளை உண்டாக்கியவர்களும், அவரிடம் நன்றி இல்லாமல் தாங்கள் செய்த காரியத்துக்கு விரைவிலேயே விசனிக்க நேரிடும்.

பொதுமக்கள் எரிமலை வெடிப்பது போல் வன்செயல்களில் இறங்கிச் சமூக ஒழுங்கைக் குலைத்து விட்டால் அங்கு முடிவில் பூரணமான ராணுவ ஆட்சியே ஏற்பட்டுத் தீரும். இதற்குத் தான் அயூப்கான் அவர்கள் வழி செய்ய வேண்டியதாயிற்று. இந்த ஆட்சி மாற்றம் பாகிஸ்தான் பிரிவினை கோரி லாகூர்த் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட 'தேசிய தின'த்திலேயே நிகழ்ந்திருக்கிறது.

ஒரு தேசத்தின் துர்ப்பாக்கியங்கள் பிற தேசங்களுக்கு எச்சரிக்கையாகும். நாச வேலைகளையும், அச்சுறுத்தல்களையும் களைவதற்குச் சக்தியுடன் நடவடிக்கை எடுக்காமல், நாச வேலையும் அச்சுறுத்தலும் கூட அரசியலில் ஒரு வகையே ஆகும் என்ற கருத்தில் கொள்கையை வகுத்துக் கொண்டால் பாகிஸ்தானில் ஏற்பட்ட போக்கிலேயே நம் நாட்டிலும் விவகாரங்கள் உருவாகும் என்பதை இந்தியா உணர்ந்தேயாக வேண்டும்.

'நாச வேலைகளுக்காக முன்பு கைது செய்யப்பட்ட நக்ஸல்பாரித் தலைவர் கனு ஸன்யாலையும் மற்றும் பதினொரு பேர்களையும் விடுதலை செய்யுமாறு மேற்கு வங்க சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளது. அவர்கள் மீதுள்ள போலீஸ் வழக்குகள் அனைத்தையும் வாபஸ் பெறுமாறு மாவட்ட மாஜிஸ்திரேட்டுகளுக்குக் கட்டளை அனுப்பப்பட்டுள்ளது' என்று மார்ச் 28ந் தேதி கிடைத்துள்ள செய்தியை இங்கு குறிப்பாகக் கவனிக்க வேண்டும்.

பாகிஸ்தானில் ஏற்பட்டது இந்தியாவில் நிகழாமல் இறைவன் தடுத்து நிறுத்துவானாக! 'சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து, சமூகம் ஒழுங்குடன் நடப்பது தான் தேசிய வாழ்வின் அஸ்திவாரம்; தேர்தல்களால் தேசத்தின் நல்வாழ்வை உருவாக்கிவிட முடியாது' என்ற உணர்வைப் பெறுவோமாக!

(ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது)

தெலுங்கானா விவகாரம்

ஆந்திரப் பிரதேச முதன் மந்திரி திரு பிரும்மானந்த ரெட்டி அவர்கள் தெலுங்கானா கிளர்ச்சியைத் தடுக்க 2000 புதிய உத்தியோகங்கள் சிருஷ்டித்துத் தெலுங்கானா மக்களுக்கு வழங்கப் போவதாகவும் அதற்கு மத்திய சர்க்கார் நிதி உதவி அளிக்க வேண்டும் என்றும் கோரியிருக்கிறார்.

ஆந்திர சர்க்கார் தெலுங்கானாவை முந்தைய ஹைதராபாத் ராஜ்யத்திலிருந்து ஸ்வீகரித்துக் கொண்டு, அப்பகுதியில் ஹைதராபாத் நகரை ஆந்திரப் பிரதேசத் தலைநகராக்கிக் கொண்டு விட்டு, அப்பகுதி மக்களுக்குச் சர்க்கார் உத்தியோகங்களிலும் தொழில் துறைகளிலும் நியாயமான அளவு பிரதிநிதித்துவம் அளிக்கவில்லை; நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்றுதான் தெலுங்கானா மக்கள் குறை கூறுகின்றனர்.

இக்கிளர்ச்சிக்குப் பயந்து, வேலையே இல்லாத 2000 வேலைகளை உண்டாக்கிச் சர்க்கார் கஜானாப் பணத்தை விரயம் செய்வது வேறு பலவித விபரீத விளைவுகளை உண்டாக்கலாம்.

எந்தவிதமான பொருள் உற்பத்தியும் விளைவிக்காத சர்க்கார் உத்தியோகம், விலைவாசிகளை உயர்த்தி, பொருளாதார சீர்குலைவையும் ஏற்படுத்திப் பாமர மக்களுக்கு இன்னும் அதிக கஷ்டத்தை விளைவிக்கும்.

அத்துடன் ''கிளர்ச்சி செய்தால் உத்தியோகம் கிடைக்கும்'' என்று தவறான ஓர் எண்ணத்தையும் மற்றப் பகுதி மக்களுக்கு ஏற்படுத்தி விடும்.

ஆகவே, உத்தியோகங்களுக்குப் பதில் ஏதாவது தொழிற்சாலை ஏற்படுத்தத் திட்டம் வகுப்பதுதான் முறை.

பஞ்சமே மேல்

நாம் சொல்லவில்லை. சுபிட்சத்தைவிட வறுமையும் பற்றாக்குறையுமே தேவலையோ என்பதாக திரு சி. சுப்பிரமணியம் கூறியிருக்கிறார். பஞ்ச நிலை ஏற்பட்டால் அமெரிக்காவிடம் பிச்சை கேட்க முடிகிறது. அமெரிக்கா அனுப்பும் கோதுமையை நேரே பற்றாக்குறைப் பகுதிகளுக்கும், பஞ்சநிலை இருக்கும் இடங்களுக்கும் அனுப்பி வைக்கச் சொல்லி விட்டு நிம்மதியாக இருக்க முடிகிறது. ஆனால் சுபிட்ச நிலை ஏற்பட்டால், அதாவது உள்நாட்டில் விளைவு பெருகினால் அதை அரசாங்கம் வாங்க வேண்டியிருக்கிறது. வாங்கியதை நன்கு சேமித்துப் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. அப்புறம் ரயில் வாகன்களைக் கண்டுபிடித்து நாட்டின் பல பகுதிகளுக்கு ஒழுங்காக அனுப்பி வைக்க வேண்டியிருக்கிறது. இப்படிப் பல பொறுப்புக்கள் சேர்ந்து விடுவதைப் பார்க்கும் போது சுபிட்ச நிலையைவிடப் பஞ்ச நிலையே தேவலை என்று சொல்லுகிறார்.

இது சோஷணையை வளர்க்கும் மனோபாவம். சர்க்காரே உணவு தானிய வியாபாரம் செய்யப் புகுந்தால் அதனால் ஒன்றையும் சமாளிக்க முடியாமல் திணறிப் போகிறது. உணவு தான்ய வியாபாரத்தை, இயல்பாகத் தான்ய வியாபாரம் செய்து வந்தவர்களிடத்தில் விட்டால், அறுவடைக் காலத்தில் மக்களுக்குச் சகாயமான விலையில் விற்பார்கள். மிகுந்ததை நன்கு சேமித்து வைத்துப் பிற்காலத்தில் சிறிது விலைகூட்டி விற்பார்கள்—சேமித்து நன்கு பாதுகாத்து வைத்ததற்குக் கூலியாக. ஆனால் சர்க்கார் இதனைத் தனி முதலாளிகள் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள் என்று குறை கூறித் தானே உணவு தான்ய விநியோகம் ஏற்றுக் கொண்டதன் விளைவு — சுபிட்சத்தைவிடப் பஞ்ச நிலையே தேவலை என்ற மன நிலை சர்க்காருக்கு வளர்ந்திருப்பதுதான்.

என்ன சேதி?

புதிய தலைவர்

சென்னை வர்த்தக சங்கத்துக்கு 1969—70ம் ஆண்டுக்குத் தலைவராகப் பிரபல சென்னைத் தொழிலதிபர் திரு ஏ.எம்.எம். அருணாசலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறோம். காலஞ்சென்ற திரு ஏ. எம். எம். முருகப்ப செட்டியார் தமது காலத்தில் இச் சங்கத்தின் தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது ஆங்கிலேயர்களே தலைமை வகிப்பது என்று பல காலமாக வழக்கத்திலிருந்த சம்பிரதாயம் மாற்றப்பட்டது. இன்று அவரது தம்பியும் ''டி. ஐ. குருப்'' கம்பெனிகளின் நிர்வாக டைரக்டரும் தொழில் துறையில் முன்னணியில் நிற்பவருமான திரு அருணாசலம் அந்தப் பதவிக்கு வந்துள்ளது அவருடைய திறமைக்கும் சக தொழிலதிபர்களுடன் பழகும் பண்புக்கும் கட்டியம் கூறுகிறது.



திரு ஏ. எம். எம். அருணாசலம்

தொழில் துறையில் அமைதியின்மை, வரி முறைகளின் கடுமை, பெர்மிட்—லைசென்ஸ்கள், பல ரகக் கட்டுப்பாடுகள் போன்ற பலப்பல பிரச்னைகள் இன்று தொழில் துறைக்குத் தலைவலி அளித்து வருகின்றன. இந்நிலையில் 'தமிழகத்தில் தொழில் துறையில் தேக்கம் ஏற்பட அநுமதியோம்; தொழில் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்போம்' என்று தமிழக முதல்வர் கூறியிருக்கிறார். குறைகளை எடுத்துச் சொல்லவும் வாய்ப்புக்களை நல்ல வகையில் பயன்படுத்திக் கொள்ளவும் திறமையானர்களும் அனுபவம் முதிர்ந்தவர்களும்தான் இன்றைய தேவை. இந்த நோக்கில் கவனிக்கும் போது திரு ஏ. எம். எம். அருணாசலத்தின் சேவை சென்னை வர்த்தக சங்கத்துக்கும் தமிழகத்தின் தொழில் முன்னேற்றத்துக்கும் பலனுள்ளதாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். அவருக்குத் துணையாக உள்ள கமிட்டியில் திரு ஏ. சிவசைலம் போன்ற இதர தொழில் பிரமுகர்கள் இடம் பெற்றிருப்பதையும் மகிழ்ச்சியுடன் குறிப்பிட வேண்டும்.

திரு பாஸ்கர மேனன்

கொலம்பியா, எச். எம். வி. இசைததடடுக்கள் எல்லாருக்கும் தெரியும். இவற்றைத் தயாரிக்கும் ''கிராமபோன் கம்பெனி ஆப் இந்தியா''வின் தலைவராக ஸ்ரீ பாஸ்கர மேனன் நியமிக்கப்பட்டிருப்பது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். திரு பாஸ்கர மேனனுக்கு வயது முப்பத்தைந்துதான் ஆகிறது. இந்த இளம் வயதில் ஒரு பெரிய நிறுவனத்தின் மானேஜிங் டைரக்டராக இருப்பதுடன் சேர்மனாகவும் விளங்குவதென்றால் அது அவரது தகுதிக்கும் திறமைக்கும் அளிக்கப்பட்ட கௌரவமே யாகும்.

டில்லியிலும் ஆக்ஸ்போர்டிலும் கல்வி கற்ற ஸ்ரீ பாஸ்கர மேனன் நிர்வாகத் துறையில் விசேஷப் பயிற்சி பெற்றவர். 1965ல் கிராமபோன் கம்பெனியின் மானேஜிங் டைரக்டராக இவர் நியமிக்கப்பட்ட பிறகு மூன்றே ஆண்டுகளில் இசைத்தட்டுக்களின் விற்பனை மூலம் வருவாய் நூறு சதவிகிதம் அதிகரித்தது! 1968ல் முதல் முறையாக இந்தக் கம்பெனியில் இந்தியர்களும் பங்குதாரர்களாயினர்.

திரு பாஸ்கர மேனனின் திறமை பாரதத்துக்கு அந்நியச் செலாவணி சம்பாதித்துத் தருவதிலும் மிகவும் பயன்பட்டிருக்கிறது. மேனாட்டவர் விரும்பிக் கேட்கக்கூடிய இந்திய இசையைத் தேர்ந்தெடுத்து இசைத்தட்டுக்களில் பதிவு செய்து ஏற்றுமதி செய்வதில் தீவிர ஈடுபாடு காட்டி வந்திருக்கிறார். ஆண்டொன்றுக்குச் சுமார் எண்பத்தைந்து லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள இசைத் தட்டுக்கள் ஏற்றுமதியாகின்றன. இந்த இசைத்தட்டுக்கள் நமது சங்கீதத்தில் அயல் நாட்டவருக்குப் பிரியம் ஏற்படச் செய்ததால் தபேலா, தம்புரா, ஸித்தார் போன்ற வாத்தியங்களும் இன்று ஏராளமாக ஏற்றுமதியாகின்றன.

திரு பாஸ்கர மேனன் தலைமையில் இந்திய கிராமபோன் கம்பெனியின் பணி மேலும் மேலும் சிறக்க வாழ்த்துகிறோம்.



திரு பாஸ்கர மேனன்

சிகாகோ கருத்தரங்கு

கோவைக்குப் பெருமை அளித்து வரும் பி. எஸ். ஜி. பொறி இயல் கல்லூரியின் புகழ் தமிழகத்திலிருந்து அமெரிக்காவுக்குச் செல்லவிருக்கிறது என்பதைக் கேட்கும்போது தமிழகத்தில் யாருக்குத்தான் மகிழ்ச்சி பொங்காது? சிகாகோவில் அண்மையில் நடைபெறவிருக்கும் பொறியியல் துறை கருத்தரங்கின் ஒரு கூட்டத்துக்குத் தலைமை வகிக்க டாக்டர் வி. ராமகிருஷ்ணனுக்கு அழைப்பு வந்துள்ளது. பி. எஸ். ஜி.

பொறியியல் கல்லூரியில் சிவில் என்ஜினீரிங் பகுதிக்குப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் இவர் இந்த அகில உலக மாநாட்டில் பங்குபெறச் செல்கிறார். உலகத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் அனுபவம் மிகுந்த அறிஞர்கள் கலந்து கொண்டு தமது ஆராய்ச்சிகளைப் பற்றிக் கூறிச் சிறப்பிக்கப் போகிறார்கள். பிரிட்டி காங்கிரீட்டினால் பாலங்கள் கட்டும் முறைகள் பற்றிய கருத்தரங்குப் பிரிவுக்குத் தலைமைவகிக்க டாக்டர் ராமகிருஷ்ணன் அழைக்கப்பட்டிருப்பது தமிழகத்துக்குப் பெருமை. கருத்தரங்கில் பலப் பல புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பும் டாக்டர் வி. ராமகிருஷ்ணனுக்குக் கிடைக்கும். இப் புதிய அனுபவமும் அறிவும் பி.எஸ். ஜி. கல்லூரிக்கும் தமிழகத்துக்கும் நற்பலன் விளைவிக்கட்டும்.



டாக்டர் ராமகிருஷ்ணன்

அண்டை ராஜ்ய மொழிகள்

தமிழகச் சட்ட மன்றத்தைச் சேர்ந்த பத்து தெலுங்கு உறுப்பினர்கள் பள்ளிக் கூடங்களில் தெலுங்குப் பயிற்சியளிக்க வசதி செய்துதர வேண்டும் என்று கோரியிருக்கின்றனர். இந்தக் கோரிக்கை மிக நியாயமான கோரிக்கை. தமிழகத்துக்கு அண்டை நாடுகளான ஆந்திரா, மைசூர், கேரளா மக்களின் மொழிகளைத் தெரிந்து கொள்ள வேண்டியது மிக அவசியம். அதே போல் அந்த ராஜ்ய மக்களும் தங்கள் மொழியுடன் தமிழ் முதலிய மொழிகளைப் பயில அந்தந்த ராஜ்ய சர்க்கார்கள் வசதி செய்து தர வேண்டும். உத்தரப் பிரதேசத்திலும் பீகாரிலும் உள்ளவர்கள் தமிழ், தெலுங்கு பயில்வதை விடத் தென்னகத்திலுள்ளவர்கள் தங்கள் அண்டை ராஜ்ய மொழிகள் பயில்வது பல விதத்திலும் பயனுள்ளது. வியாபாரம், போக்குவரத்து முதலிய பல துறைகளில் முன்னேற மிகவும் பயன்படும்.

வருந்துகிறோம்

பாடி வெங்கட்ராம அய்யர் அவர்கள் அண்மையில் காலமானது அறிந்து பெரிதும் வருந்துகிறோம்.

1901ல் தமது பத்தொன்பதாவது வயதில் ரங்கூன் சென்றார் திரு வெங்கடராமன். முன்னாள் பூரி ஆசார்யாளின் வம்சாவளியில் வந்தவர். இவர் ரங்கூன் சென்றதுமே வேலை தயாராகக் காத்திருந்தது. அது ஒரு காலம்!

காரியாலய நேரம் போக மிஞ்சிய பொழுதெல்லாம் சமூக சேவையில் மிகுந்த ஈடுபாடு காட்டி வந்தார் இந்த உத்தமர். பல பள்ளிக் கூடங்கள் உருவாகக் காரணமாக இருந்தார். ஏராளமான கலியாணங்களை முன்னின்று பணச் செலவு செய்து நடத்தி வைத்தார். பிளேக், காலரா போன்ற வியாதிகள் பரவிய காலத்தில் மெய்வருத்தம் பாராது இரவு பகலாய் உழைத்தார். இந்தியா திரும்பிய பின்னர் கலாக்ஷேத்திரத்தின் கௌரவ மானேஜராகப் பணியாற்றினார்.

அண்மையில் தமது எண்பத்தெட்டாவது வயதில் காலமானார் பாடி வெங்கட்ராம அய்யர். இவரது குடும்பம் ஆலம் விழுதுகள்போல் பரவி ஊன்றி உள்ளது. இந்தப் பெரிய குடும்பத்தினர் அனைவருடனும் வருத்தத்தைப் பகிர்ந்து கொள்கிறோம். குறிப்பாக அவரது புதல்வர் புதுதில்லி 'கப்புடு'வுக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



பாடி வெங்கட்ராம அய்யர்

மலேஷியப் பயணம்

சகோதரி சிவ பிருந்தா தேவி மலேஷியாவுக்குச் செல்கிறார் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம். இவர் சைவ சித்தாந்தம் பற்றியும் சமயப் பொருள் பற்றியும் நூறுக்கு மேல் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். ''இறைவனின் திருநாமங்களைப் பற்றிப் பேசுவதென்றால் இன்னும் எத்தனை எத்தனையோ சொற்பொழிவுகளுக்குப் புதுப் புது விஷயங்கள் கிடைக்குமே'' என்று கூறும் சகோதரி பிருந்தாதேவி, அன்பர்கள் அளிக்கும் பட்டங்களை மட்டும் வைத்துக் கொண்டு சொற்பொழிவாற்றி ஈட்டும் பொருளை யெல்லாம் புதுக்கோட்டையில் தாம் நிர்வகிக்கும் முத்துலக்ஷ்மி ரெட்டி மகளிர் இல்லத்துக்குத் தந்து விடுகிறார். இந்தத் தரும ஸ்தாபனத்தின் வளர்ச்சி இவரது பேச்சுத்திறனின் அளவுகோல்.

சிரித்த முகம், மடைதிறந்தது போன்ற பேச்சு, எல்லாருடனும் அன்புடன் பழகும் இனிய சுபாவம். இத்தகையவர் மலேஷியா செல்வது அங்குள்ள தமிழ் அன்பர்களுக்கு அரியதொரு வாய்ப்பு. தமிழுக்கும் சமயத்துக்கும் தொண்டாற்றும் சிவபிருந்தா தேவியை வாழ்த்துகிறோம்.

ராஜாஜியின் கருத்துக்கள்

'ஒரே போன்ற கொள்கையுடைய அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றுசேர வேண்டும்' என்பதன் பொருளை உள்ளபடி உணர்ந்து, இத்தகைய நிலையை விரைவில் தோற்றுவிக்காவிடில், விபரீதமான முறையில் இன்றைய அரசியல் கட்சிகள் அழிய வேண்டியதாகும்.

தொழிலும் உழவும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பதே காங்கிரஸ் கொள்கை. இதனால் மக்கள் உயிரற்ற இயந்திரங்களாகி விடுகின்றனர். மக்கள் தனியாகவும் கூடியும் சுதந்திரமாகத் தொழில் நடத்த வேண்டும் என்பதொன்றே காங்கிரஸுக்கு மாறான கொள்கை.

காங்கிரஸின் சோஷலிஸக் கொள்கையையே பின்பற்றிக் கொண்டு, அக்கட்சியை ஆட்சியிலிருந்து அகற்ற விரும்புவதில் பொருள் இல்லை. இன்று எதிர்க் கட்சிகள் பலவும் சோஷலிஸம் என்ற வார்த்தைக்குக் கப்பம் கட்டுபவையாகவே உள்ளன. சர்க்கார் கட்டுப்பாட்டினால் ஏற்படுத்தப்படும் ஏகாதிபத்தியம் காந்திஜி முற்றிலும் கண்டிக்கும் முறையாகும்.

அமெரிக்காவில் ஏகபோக்கியங்களைக் கட்டுப்படுத்துவது குறித்து யோசனை எழும்பியிருப்பதால் நாமும் சர்க்கார் கட்டுப்பாட்டை அவசியமாக எண்ண வேண்டியதில்லை. இந்தியாவில் ஏகபோக்கியத்தை ஏற்படுத்துவதே பெர்மிட்டும் லைசென்ஸும் தருகிற சர்க்கார்தான்!

சர்க்கார் கட்டுப்பாட்டையும் தொழில் துறைப் போராட்டங்களையும் விரும்புகிறவர்கள் ஒரு தரப்பாகவும், தனி நபர் சுதந்திரத்தையும் தொழில் துறை இணக்கத்தையும் விரும்புகிறவர்கள் ஒரு தரப்பாகவும், ஒன்று சேர்ந்து இந்திய அரசியலை இரு தெளிவான பிரிவுகளாகப் பகுக்க வேண்டும். இவற்றில் எது வேண்டும் என்று வாக்காளர்களைக் கேட்க வேண்டும். 'தொழில் உலகில் போராட்டம் வேண்டுமா? அல்லது நாடு ஓரளவு சுபிட்சம் அடைகிற வரையில் அத்துறையில் ஈடுபட்டுள்ள அனைவரும் போராட்டத்தைத் தவிர்க்க வேண்டுமா? உற்பத்தியில் திறமையைக் காட்டும் சுதந்திர முறை வேண்டுமா? அல்லது பெர்மிட்டாலும் லைசென்ஸாலும் சிலருக்கு மட்டும் ஏகபோக்கியம் தந்து, மற்றவர்களை நெரிக்கும் முறை வேண்டுமா?' என்ற கேள்விகளை தேர்தலின் அடிப்படையாக வேண்டும்.

★

இன்னல்களுக்கு ஆளாகியுள்ள இந்தப் பூமியிலிருந்து மற்றுமொரு மகத்தான, மக்களின் பேராதரவு பெற்ற வியக்தி அமைதியாக மறைந்து விட்டது. ஐஸன்ஹோவர் காலமாகி விட்டார்.

மனிதர்கள் பிறக்கிறார்கள்; மரிக்கிறார்கள். ஆனால் பிரச்னைகள் தீர்க்கப்படாமல் இருந்து கொண்டே இருக்கின்றன.



ஐஸன்ஹோவர்

ஐஸன்ஹோவரின் ஆதரிச வாழ்வு அமெரிக்க இளைஞர்களைத் தூண்டி, எல்லா விதத்திலும் அமெரிக்காவை மகத்தான நாடாக்கட்டும்.

உலகின் இரு பெரும் பிரச்னைகள் தீர்க்கப்படாமலே உள்ளன: அணு ஆயுதங்களைப் பூரணமாக அகற்றுவது ஒன்று. உலகச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு உலக அரசாங்கம் அமைப்பது இன்னொன்று. இவ்விரு பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் எல்லாத் தேசங்களின் தலைவர்களும், மக்களும் இடைவிடாமல் முயல வேண்டும்.

மகா யுத்தங்களை நடத்தி வெற்றி கண்ட மகா மனிதர்கள் மறைந்து விட்டனர். இப்போது மேற்சொன்ன இரண்டு பிரச்னைகள் ஹிட்லரைவிடப் பெரிய எதிரிகளாக நிற்கின்றன. நாஜிக் கொள்கையைவிட அவசர உணர்வுடன் எதிர்க்க வேண்டிய பிரச்னைகள் இவை.

எரிமலை மீது அமர்ந்து கொண்டே, நாகரிக உலகை நிர்மாணிப்பதாகக் கற்பனை செய்வதை இனியும் நீடிப்பதற்கில்லை.

★

சூதாட்டம், விபசாரம், மதுபானம் முதலிய எந்தத் தீமையையுமே, அடியோடு களைய முடிவதில்லை; என்னதான் போலீஸ் எச்சரிக்கையாயிருப்பினும், இத்தீமைகள் ஓரளவு சட்டத்தை மீறி இருக்கவே செய்கின்றன.

இத்தீமைகளை அறவே அகற்ற முடியவில்லை என்பதற்காக இந்த விஷயங்களில் சர்க்காருக்கு ஏகபோக்கியத் தொழிலுரிமை தந்து, இவற்றைக் கட்டுப்படுத்த நினைப்பது பரிகாரமாகாது. சர்க்கார் ஒரு தீமையோடு தொடர்பு கொண்டால் அத்தீமைக்கு அந்தஸ்து ஏற்படுமே ஒழிய, நலிவு ஏற்படாது. அரசாங்கம் மது விற்பனை செய்வதை ஐம்பது ஆண்டுகளாக எதிர்த்து வருகிறேன். காந்திஜியும் தம் வலுவான எதிர்ப்பைத் தெளிவாக வெளியிட்டு வந்தார். சுதந்திர இந்தியாவுக்குரிய அரசியல் சாஸனமாக வகுக்கப்பட்ட மோதிலால் நேரு அறிக்கையில் பூரண மது விலக்கு ஒரு ஷரத்தாகும். இது விஷயமாக நான் கொண்டு வந்த மசோதாவை அ. இ. கா. க. ஏற்றுச் சாஸனத்தில் உள்ளடக்கியது. (மோதிலால்ஜி ஒருவர் மட்டுமே என் மசோதாவைத் தீவிரமாக எதிர்த்தார்!)

பிறகு அரசியல் நிர்ணய சபை, சாஸனம் வகுத்த போது மதுவிலக்கு என்பது சர்க்கார் கொள்கைகளில் (Directive Principles) ஒன்றாயிற்று. சாஸனத்திலேயே இடம் பெற்றும் இதனை இந்தியச் சட்டத்தின் அங்கமாக்க ஏதும் செய்யாமல்

இருப்பதும், இதற்காக மதுவிலக்குக் குழு கிளர்ச்சி செய்ய வேண்டியிருப்பதும் விசித்திரம்.

தமிழ் நாடு மதுவிலக்கை விடாமல் இறுகப் பற்றியிருப்பது ஓர் ஆறுதல். இந்தியச் சட்டத்தில் மதுவிலக்கை ஓர் அங்கமாக்கி மக்களுக்கு இதில் நல்லறிவு புகட்டினால், இதுவே ஏழைகளை மேம்படுத்துவதில் சிறந்ததொரு நடவடிக்கையாகும். மதுவைத் தொடுவதே இல்லை என்று உறுதி கொண்டு அதைப் பூரணமாகச் செய்து காட்ட வேண்டியது உயர் நிலையில் உள்ளவர்களின் தார்மிகக் கடமை. மதுவிலக்கு அமுலானால் பலவகைக் குற்றங்கள் குறையும். இதய நோவால் இறந்து போகிறவர்களின் எண்ணிக்கை குறையும்.

மருத்துவ ஆலோசனை இன்றி குறைந்த அளவு மது அருந்தினாலும்கூட, அது மூளையின் சகஜமான வேலையைப் பாதிக்கும்—கடிகாரத்தை ஒரு சிறு மணல் பாதிப்பது போல். மூளை என்பது ஓர் அதி நுண்ணிய கருவி; மனிதன் எல்லாச் சூழ்நிலையும் சரியாக நடக்க உதவுவது

மதுவிலக்குக் குழுவின முயற்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு, மேலும் வலுவடைந்து, சாஸனத்தில் கூறப்பட்டுள்ளபடி மதுவிலக்கு அமுலாக வழி செய்யும் என நம்புவோம்.

★

ராஜ்ய அரசாங்கங்களுக்குப் பளுவான பொறுப்புக்களை அரசியல் சாஸனம் தந்திருக்கிறது; அதோடு இயல்பாகவே அவற்றின் பொறுப்பு பளுவானது. ஆனால் ராஜ்ய அரசாங்கங்களுக்கு இப்பொறுப்புக்களை ஆற்றுவதற்கு இசைவான அளவுக்கு நிதி திரட்டுகிற வசதிகள் தரப்படவில்லை. அடியிற் காணும் ராஜ்யங்களின் கடன் தொகை இந்நிலையை விளக்கும்.

		ரூபாய் (கோடி)
ஆந்திரப் பிரதேசம்	...	491½
அஸ்ஸாம்	...	203
பீஹார்	...	519½
குஜராத்	...	208½
ஹரியானா	...	149
ஜம்மு காச்மீரம்	...	130
கேரளம்	...	192
மத்யப் பிரதேசம்	...	376½
மகாராஷ்டிரம்	...	375
மைசூர்	...	258
நாகாலாந்து	...	9
ஒரிஸ்ஸா	...	323
பஞ்சாப்	...	213
ராஜஸ்தான்	...	364
தமிழ் நாடு	...	317
உத்தரப் பிரதேசம்	...	594
மேற்கு வங்கம்	...	469

சமீபத்தில் அமைக்கப்பட்ட ராஜ்யங்களைத் தவிர மற்றவை யாவும் இவ்விதம் மத்திய சர்க்காரிடம் வெகுவாகக் கடன் பட்டு, அதன்மூலம் கட்டுப்பட்டிருக்கின்றன.

ராஜ்யங்கள் பொதுமக்களிடமிருந்து கடன் திரட்டுவதை ஒப்புக் கொள்ளலாம். ஆனால் மத்திய சர்க்காரிடமிருந்து மேன் மேலும் கடன் வாங்கிக் கொண்டே போவது நிதி நிலைமையைச் சீர்குலைப்பதாகும்.

நிதி விஷயமாக என்ன செய்தாலும் சரி, இந்திய யூனியன் முழுதும் சட்டத்தையும் சமூக ஒழுங்கையும் நிர்வகிக்கும் பொறுப்பு மத்திய சர்க்காரிடம் இருக்க வேண்டும் என்பது என் உறுதியான கருத்து. போலீஸ் இலாகாவைத் தம்மிடமே வைத்துக் கொள்ள வேண்டும் என்று ராஜ்ய சர்க்கார்கள் விரும்புவதைச் சமூக ஒழுங்கைக் காக்கும் பிரச்னையோடு சேர்த்துக் குழப்பலாகாது. ராஜ்யங்களின் சுயாதீனத்தைவிட, மக்களின் அமைதியான, பாதுகாப்பான வாழ்வு மேம்பட்டது என்று உணர்ந்து அதற்கே முக்கியம் தர வேண்டும்.

மத்திய சர்க்காரின் உடைமைகளைக் காப்பது மட்டுமின்றி, இந்தியா முழுவதிலும் மக்களிடையே அமைதியையும் பாதுகாப்பையும் ஏற்படுத்துவது மத்திய போலீஸின் கடமையாகக் கருதப்பட வேண்டும். ராஜ்ய அரசாங்கங்களின் மாறுபட்ட அமைப்பு காரணமாக, மக்களின் பாதுகாப்பு மத்திய சர்க்காரின் பொறுப்பாக வேண்டும் என்பது என் வாதம்.



மகாத்மா மணி மொழி

தன்னைத் தானே தூய்மைப் படுத்திக் கொள்ளாத வரையில், பிற உயிரினங்களுடன் ஐக்கிய உணர்வு பெறுவது அசாத்தியம். ஆத்மசுத்தி இன்றி அஹிம்ஸையைக் கடைப்பிடிக்க முயல்வது வியர்த்தமான கனவே. தூய உள்ளம் இல்லாதவனால் ஆண்டவனை உணரவே முடியாது. ஆத்மசுத்தி என்பது வாழ்க்கையின் சகல துறைகளிலும் தூய்மைப் படுத்திக் கொள்வதாகும். ஒருவன் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டால், அது அவனது சூழ்நிலை தூய்மையாவதற்கும் வழி உண்டாக்கும்.

அன்பார்ந்த நேயர்களுக்கு

புத்தாண்டு வாழ்த்துக்கள்.

''அரியாசனத்தில் ஜனக மகாராஜா'' என்று அமரர் கல்கி, கவர்னர் ஜெனரல் ராஜாஜி அவர்களைக் குறிப்பிட்டு எழுதினார். திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் எளியவரில் எளியோராய் எந்த மனநிலையில் வாழ்ந்தாரோ அதே மனநிலையில்தான் அவர் கவர்னர் ஜெனரலாகவும் அரண்மனையில் வாழ்ந்தார். அப்படிப்பட்ட உத்தமர் நமது நாட்டுக்குச் செய்துள்ள எத்தனையோ சிறந்த சேவைகளுள் சிறப்பிடம் பெறத்தக்க ஒன்று, அவர் எளிய நடையில் ஆறுதல் இலக்கியச்சுவை குன்றாத வகையில் மகா பாரதத்தையும் ராமாயணத்தையும் எழுதியது. ராமாயணத்தையும் பாரதத்தையும் ஒரு முறைக்கு இரண்டு முறையாகக் கல்கியில் தொடர்ந்து பிரசுரிக்கும் பாக்கியம் பெற்றதில் நான் இரட்டிப்பு மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன். கல்கி நேயர்கள் தங்கள் இல்லங்களில் குழந்தைகளை அழைத்து வைத்துக் கொண்டு தினம் ஐந்து அல்லது பத்து நிமிஷம் ராஜாஜியின் ராமாயணத்தைப் படித்துக் காட்ட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அதைவிடப் பெருந் தனத்தைக் குழந்தைகளுக்கு யாரும் கொடுத்துவிட முடியாது அல்லவா?

ராமாயணத்துக்கு ஓவியர் வினு வரைந்துள்ள நாலுபக்க மூவர்ணப் படங்கள் புத்தாண்டு மலரில் இடம்பெற்று மலருக்குத் தனிச் சோபை அளிக்கின்றன.

திரு கு. அழகிரிசாமி எத்தனையோ பல சிறுகதைகளையும் கட்டுரைகளையும் நாவல்களையும் எழுதிப் பண்பட்ட எழுத்தாளர். 'தீராத விளையாட்டு' என்ற தலைப்பில் அவர் எழுதும் புதிய நாவல் புத்தாண்டு மலரிலிருந்து கல்கியில் தொடங்குகிறது. இந்நாவலைத் துணிகரமான ஒரு முயற்சி என்று வர்ணிக்கலாம். நடை அழகும் புதுமைப் பொலிவும் கொண்டு வாசகர்களைப் பெரிதும் மகிழ்விக்கும் ''தீராத விளையாட்டு''.

'வியட்நாம் வீடு', 'கண்ணன் வந்தான்' ஆகிய இரு நாடகங்கள் மூலம் தமிழ் நாடக மேடைக்குச் சமீப காலத்தில் கௌரவமும் பெருமையும் சேர்த்த இளைஞர் திரு கே. சுந்தரம். இவரது மூன்றாவது நாடகமான 'ஞான ஒளி' மேஜர் சுந்தரராஜனால் மெருகேற்றப்பட்டு அண்மையில் அரங்கேறியிருக்கிறது. முன்னிரு நாடகங்களைப் போலவே இந்த நாடகமும் கருத்துச் செறிவிலும் உணர்ச்சி ஆழத்திலும் நகைச்சுவைத் தரத்திலும் சிறந்து விளங்குகிறது. இளைஞர் திரு கே. சுந்தரத்தின் இம் மூன்றாவது நாடகத்தைக் கல்கியில் தொடர்ந்து வெளியிடப் போகிறேன். அரங்கத்தில் தோன்றும் நடிகர்களின் பாவபூர்வமான புகைப்படங்களுடன் இந்நாடகம் பிரசுரமாகும்.

சூரியனைச் சுற்றி பூமி முதலான கோள்கள் வலம் வருகின்றன. ஒவ்வொரு நட்சத்திரமும் ஒரு சூரியனே என்றும் அந்த நட்சத்திரங்களைச் சுற்றியும் கோள்கள் பல உண்டு என்றும் விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். சந்திரனை மனிதன் அநேகமாக எட்டிப் பிடித்துவிட்டான் என்றே சொல்லக் கூடிய இன்றைய நிலையில், அம்புலிக்கு அப்பால் அவன் செல்லக்கூடிய திறமையைப் பெறும்போது என்னவெல்லாம் நிகழலாம் என்பதைக் கற்பனைக் கண் கொண்டு பார்த்துச் சொல்கிறது ''அம்புலிக்கு அப்பால்...'' என்ற விஞ்ஞானக் கதை. சித்திரத் தொடர்கதையாக இது மலர்கிறது.

கல்கி துணை ஆசிரியர் அமெரிக்க அரசாங்கத்தின் அழைப்பினை ஏற்று அந்த நாட்டுக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள பெர்க்லி தமிழ்ச் சங்கத்தினர் அவருக்கு ஒரு வரவேற்பு அளித்தார்கள். அத்துடன் 340 டாலர்களுக்கு ஒரு 'செக்'கும் கொடுத்தார்கள்! தற்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இத்தொகை பயன்பட வேண்டும் என்பது பெர்க்லிவாழ் தமிழன்பர்களின் கோரிக்கை. ஏறக்குறைய இதே அளவினதான ஒரு தொகையை கல்கி ஸ்தாபனத்தின் சார்பில் அளித்து ஒரு சிறு கதைப் போட்டிக்கு ஏற்பாடு செய்தேன். பெர்க்லி—கல்கி இலக்கியப் பரிசுத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற சிறுகதைப் போட்டியின் முடிவுகள் அடுத்த இதழில் இடம் பெறும். பரிசு பெறும் ஒன்பது கதைகள் தவிர உயர்தரமான வேறு பல கதைகள் சிறப்புச் 'சிறுகதைகளாக'த் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய் அடுத்த பல மாதங்களுக்குக் கல்கியில் வெளிவந்துகொண்டிருக்கும். பெர்க்லி தமிழ்ச் சங்கத்துக்கும் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்க உதவிய பஞ்சாயத்தார்களான திரு ஏ.ஜி. வேங்கடாச்சாரி, திரு கவி சுப்பிரமணியன், திரு ஜெகசிற்பியன், ஸ்ரீமதி ராஜம் கிருஷ்ணன் ஆகியோருக்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்களுக்காக ஏற்படுத்திய இலக்கியத் திறனாய்வுப் போட்டி முடிவுகளும் அடுத்த இதழில் பிரசுரமாகும். பரிசு பெறும் கட்டுரைகளை வாசகர்கள் ஆர்வத்துடன் படிப்பார்கள். அத்துடன் குறிப்பாக எழுத்தாளர்கள் அனைவரும் இவற்றைப் படித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய மாணவர் சமூகம் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் காட்டி வரும் ஆர்வம் இதன் மூலம் நன்கு புலனாகும். தரமான சிறுகதைகளை அவர்கள் எப்படியெல்லாம் நுணுகிப் பார்த்து ரசித்து மகிழ்கிறார்கள் என்பது தெரிய வரும்.

இத்தனை சிறப்புக்கள் தவிர வேறுபல விசேஷ அம்சங்களுடனும் இனி வெளிவர இருக்கும் கல்கி இதழ்கள் ஒவ்வொன்றும் புத்தாண்டில் நேயர்களின் இல்லங்களிலெல்லாம் குதூகலம் நிலவத் துணை புரியட்டும் என்று விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

வணக்கம்.

சதாசிவம்





டாக்டர்கள் கொண்டாடிய 'குழந்தைகள் தினம்'

- தளர்நடைப் பருவத்தில் தேவை சிறந்த வழிகாட்டி — டாக்டர் ராமமூர்த்தி வரைந்த வண்ணக் கோலம்.
- தவழும் போட்டிக்குத் தயார்.
- ஒவ்வொரு எழுத்திலும் நேரு மாமாவின் ஒரு குணநிசயம்.

எத்தனையோ போட்டிப் பந்தயங்களைப் பார்த்திருக்கலாம். ஆனால் தவழ்வதில் ஒரு போட்டி நிகழ்ந்து கண்டதுண்டா? நேரு பிறந்த நாளன்று குழந்தைகள் தினத்தைத் திருச்சியிலுள்ள அரசாங்கப் பெரிய மருத்துவமனை குழந்தைகள் பிரிவில் பணிபுரியும் டாக்டர்கள் கொண்டாடியபோது இப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. தாய்மார்கள், ''வா, வா! வா, வா'' என்று அழைக்க ஒரு வயதுக்குட்பட்ட சேய்கள் ஒன்றையொன்று முந்திக் கொண்டு தாய்மார்களிடம் தவழ்ந்தோடி வந்து அடைக்கலம் புகுந்தது கண்கொள்ளாக் காட்சி!



இன்னும் எத்தனையோ பல போட்டிகள். குழந்தை வைத்தியத்தில் தேர்ச்சி பெற்ற டாக்டர்களும், மற்ற டாக்டர்களும், நர்சுகள், ஊழியர்களின் ஒத்துழைப்புடன் குழந்தைகள் தினத்தை விமரிசையான விழாவாகக் கொண்டாடினார்கள். இதைச் செவ்வனே நடத்துவதில் டாக்டர் அழகப்பனும், டாக்டர் ராமமூர்த்தியும் பெரும் பங்கு கொண்டார்கள். காலை பத்தேகால் மணிக்கு ஆரம்பித்த விழா, ஓட்டப் பந்தயங்கள், ஓவியப் போட்டி, பாட்டுப் போட்டி, (எல்லாம் குழந்தைகள் பங்குபெறும் நிகழ்ச்சிகள்தாம்!) எனப் பல நிகழ்ச்சிகளைக் கடந்து பரிசளிப்பு விழாவோடு இனிது முடிய மணி பன்னிரண்டாகிவிட்டது!

'நேரு மாமா' பாட்டுப் பாடி முதற் பரிசைத் தட்டிக் கொண்டது டாக்டர் அழகப்பனின் சிறுமி! ஒன்றரை வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் தனித் தனியாக ஒரு போட்டி வைத்து, ''கொழு கொழு'' குழந்தைகள் இரண்டைத் தேர்ந்தெடுத்தார்கள்.

சிறுமிகள் வண்ண ஆடைகள் அணிந்து ஒவ்வொரு பெண்ணும் நேரு **(NEHRU)** என்ற சொல்லின் எழுத்துக்களைச் சட்டையில் 'பாட்ஜ்' ஆக அணிந்து கொண்டு வரிசையாக நின்றார்கள். அச்சிறுமிகள் ஒவ்வொருவரும் தங்களிடமுள்ள எழுத்தை ஆரம்பமாகக் கொண்ட சொல்லைச் சொல்லி நேருவின் குணநிசயங்களைத் தெரியப்படுத்திய நிகழ்ச்சி அழகாயிருந்தது! மருத்துவமனையிலேயே உள்ள அநாதைக் குழந்தைகளுக்கு உடை வழங்கப்பட்டது. பொட்டுக் கடலைக் கஞ்சி குழந்தைகளுக்கு நல்ல சத்துள்ள உணவாகும் எனக் குறிப்பிட்டு இரு குழந்தைகள் சொற்பொழிவாற்றித் தாய்மார்களுக்கு உபதேசம் செய்தன!

குழந்தைகள்நல விடுதியும், அதற்கு வெளிப்புறத்திலுள்ள மைதானமும் வண்ணத் தோரணங்களால் அழகுபடுத்தப்பட் டிருந்தன. குழந்தைகள் கும்மாளமிட்டு ஆரவாரமிட்டுத் தங்கள் மகிழ்ச்சியைப் பறைசாற்றினர். விடுதியின் உள்ளே இரு குத்துவிளக்குகள் சுடர்விட்டு எரியும் ஒளியில் நேருஜியின் படம். தரையில் கண்ணைப் பறிக்கும் ஓர் அழகான வண்ணக் கோலம் காணப்பட்டது. நல்வழியில் இட்டுச் செல்லும் ஒரு கரத்தைப் பிடித்தவாறு குழந்தை ஒன்று தளர் நடை பயிலும் தத்ரூபக் காட்சியை வண்ணக் கோலப் பொடியால் வரைந்திருந்தார் குழந்தை வைத்தியர் டாக்டர் ராமமூர்த்தி. பல பெண்மணிகள் உட்பட யாவரும் வியந்து பாராட்டினர் அவருடைய கைவண்ணம் கண்டு.

மாலையில் டாக்டர் அழகப்பனின் இல்லத்தில் குழந்தைகள் தின விழா இன்னும் புதுமையான முறையில் நடந்தேறியது. தம்முடைய இல்லத்துக்கு வந்து சிகிச்சை பெறும் குழந்தைகள் யாவருக்கும் அழைப்பிதழ் அனுப்



டாக்டர் அழகப்பனும், டாக்டர் ராமமூர்த்தியும் குழந்தைகளுடன்

பிப் பெற்றோர்களுடன் அவர்களை வரச் செய்திருந்தார் டாக்டர். குழந்தை வைத்தியத்தில் தேர்ச்சி பெற்ற வருடம் முதற்கொண்டு — அதாவது ஐந்து வருட காலமாக இப்படியொரு விழாவை நடத்தி வருகிறார் டாக்டர் அழகப்பன். அவர் இந்த விழாவை நடத்தும் நோக்கமே தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைப் போஷாக்குடன் வளர்க்க வேண்டிய முறையை நன்கு அறிந்துகொள்ளச் செய்யத்தான்.

இல்லத்தின் முன்பக்கத்தை அலங்கரித்து அங்கு ஒரு கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்திருந்தார். பல குழந்தைகளின் படங்களை மாட்டியிருந்தார். அவற்றில் ஒவ்வொன்றின் கீழேயும் தாய்மார்களுக்குப் பயன்படும் விஷயங்களை எழுதியிருந்தார். அவரே விளக்கமும் கொடுத்தார்.

"அம்மா! பலவந்தமாக எனக்கு ஊட்டு முன் விளக்கெண்ணெயை நீ, சற்று ருசி பார்க்கக்கூடாதா?" என்று ஒரு குழந்தை கேட்கிறது! "ஒரு ஸ்பூன் பால் பவுடர் ஒரு அவுன்ஸ் பாலைத்தான் தருமேயன்றி ஒரு 'கப்' பாலை அல்ல!" என்று எச்சரிக்கிறது மற்றொரு குழந்தை! இன்னும் எவ்வளவோ பயன் தரும் பல விளக்கங்கள்!

வந்திருந்த குழந்தைகளுக்கு உற்சாகமூட்டும் வகையில் ஒரு சிறு போட்டி ஏற்பாடு செய்திருந்தார். ஒரு 'பெஞ்சி'யின் மேல் இடைவெளி விட்டு இரு பட்டைக் கோடுகள் போடப்பட்டிருந்தன. பெஞ்சின் ஒரு மூலையில் நின்றுகொண்டு பந்தை உருட்ட வேண்டும். அந்தப் பந்து மறுமூலைக்கு அந்த இடைவெளியில்தான் போக வேண்டும். நான்கூட உருட்டிப் பார்த்தேன், வேடிக்கையாக! முடியவில்லை. இரண்டு குழந்தைகள் பந்தை உருட்டி வெற்றி பெற்று டாக்டரிடமிருந்து பரிசைத் தட்டிக் கொண்டன! குழந்தைகளுக்கு இனிப்பு, பென்சில், 'சாம்பிள் டானிக்', பல்பம், பொம்மை — இத்தியாதிகளையும் கொடுத்து அவர்கள் முகத்தில் நிறைந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தினார்.


அதிர்ந்தே பேசத் தெரியாத டாக்டர் அழகப்பன், கனிவுடன் எல்லாரையும் வரவேற்ற காட்சி நெகிழ வைத்தது. இப்படியொரு பயன் தரும் "குழந்தைகள் விழா" வைத் தம் இல்லத்திலும் நடத்திப் பெற்றோர்களுக்குக் குழந்தைகளைக் கவனித்து வளர்ப்பதில் அவர்களுடைய பங்கு என்ன என்பதைத் தெளிவுபடுத்துகிறார் டாக்டர்.

நேருஜிக்குச் சிறந்த முறையில் அஞ்சலி.

— சுதாகரன்

பொருளாதாரமும் பந்தயக் குதிரையும்!

"குதிரைப் பந்தயத்தில் குதிரை வேகமாக ஓடி வெற்றி பெற வேண்டுமானால், குதிரையின்



லகானை இழுத்துப் பிடிக்காமல், தாராளமாக விட்டு விரட்ட வேண்டும். இது போலவே பொருளாதாரச் செழிப்பு அதிகரிக்க வேண்டுமானால், கட்டுப்பாடுகள் இருக்கக் கூடாது."

— மேற்கு ஜெர்மனி பொருளாதார அமைச்சர்

தபால் தலை வளர்ந்தது!

சென்ற நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டில் தபாலைப் பெறுகிறவர்களே அதற்குள்ள கட்டணத்தைச் செலுத்த வேண்டும். அப்படிப் பெற இயலாதோர் திரும்பத் தபால்காரரிடமே கொடுத்துவிடலாம்.

கவிஞர் 'கோல் ரிட்ஜ்' ஒரு நாள் வட இங்கிலாந்தில் ஒரு குடிசையின் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தார். குடிசை வாசலில் நின்ற சிறுமியிடம் தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொடுத்து அதற்குரிய கட்டணத்தைக் கேட்டான். கையில் பணமில்லாத அச்சிறுமி கடிதத்தை வாங்கிவிட்டு மீண்டும் தபால்காரரிடமே கொடுத்துவிட்டாள். இதைக் கண்ட கவிஞரின் மனம் இளகிவிட்டது. தாமே கட்டணத்தைக் கொடுத்து வாங்கி அதைப் பிரித்துப் பார்க்கச் சொன்னார். அதனுள் ஒரு வெற்றுக் காகிதமே காணப்பட்டது! அதற்கு அப்பெண் அளித்த விளக்கம் கோல்ரிட்ஜை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. "நான் ஏழை. எனது உடன் பிறந்தவன் ஒருவன் லண்டனில் இருக்கிறான். அவன் எனக்கு எழுதும் கடிதங்களுக்குக் கட்டணம் செலுத்திப் பெற என்னிடம் பணமில்லை. எனவே, நாங்கள் இருவரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தோம். அதன்படி அவன் ஒரு வெற்றுக் காகிதத்தை உறையில் வைத்துத் தபாலில் அனுப்புவான். அதை வாங்கிய நான் உடனே தபால்காரரிடமே திரும்பக் கொடுத்து விடுவேன். இந்த வெற்றுத் தாள் தபாலில் வந்தால் அவன் நலம் என்று அறிவேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்றாள்.



இதைக் கேட்ட கவிஞரின் மனம் கலங்கியது. உடனே தபால் இலாகா பெரிய அதிகாரியைச் சந்தித்து நடந்ததைக் கூறிப் பரிகாரம் வேண்டினார்.

அவருடைய யோசனையை ஏற்றுக் கொண்ட அரசாங்கம் ஒரு பென்னிக் கட்டணத்தில் பிரிட்டன், அயர்லாந்து நாடுகளில் எங்கு வேண்டுமானாலும் தபால் எழுதலாம் எனச் சட்டம் இயற்றியது. எழுதுபவரே கட்டணத்தை ஏற்க வேண்டும் என்று சட்டம். அதற்கென ஒரு பென்னித் தபால் தலைகள் அச்சிடப்பட்டன.

தகவல்: மன்னை ஞானு

அன்றொரு நாள் (நாடகம்)

அன்றொரு நாள் மழை பெய்தது: இடி இடித்தது: மின்னல் மின்னியது. கள்ளங் கபடில்லாத பருவப் பெண் பாரதியின் வாழ்வில் ஒரு மின்னலாய்த் தோன்றிய அந்தச் சம்பவம் அவள் வாழ்க்கையையே சூறையாடி விட்டது. அதாவது, அவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவளைக் கறைப்படுத்தி விட்டு மறைந்து விடுகிறான் ஒரு கயவன். அந்தச் சம்பவம் ஒரு கொலைக்குக் காரணமாகி, ஒரு நாடகத்துக்கும் வித்தாகி விடுகிறது. அந்தக் கொலையைச் செய்தவர் யார் என்று தெரிந்து விட்டால் யாரும் நாடகம் பார்க்க மாட்டார்கள்.



ரவி பென் ஆர்ட்ஸ் குழுவினர் பல முறை நடத்தி வெற்றி கண்ட ''அன்றொரு நாள்'' நாடகத்தை எழுதி, டைரக்‌ஷன் பொறுப்பையும் ஏற்றிருப்பவர் திரு 'பேகன்'. தம் பொறுப்பை மிகவும் சிறப்பாகச் செய்திருக்கிறார்.

சினிமாப் புகழ் பெற்ற ஜயபாரதி கதாநாயகியாக நடித்து நல்ல பெயரைத் தட்டிக் கொண்டு விட்டார். பைத்தியம் பிடித்தவள் மாதிரி நடித்தபோது ஜயபாரதியின் நடை, உடை, பாவனைகள் பாராட்டும்படி யிருந்தன. மேடையின் கவர்ச்சிப் பொருளாயிருந்தார் அவர்.

சேதுராமன், பாலாஜி என்ற இரு ஆப்த நண்பர்களாக நடித்த நடிகர்கள் இருவரும் நினைவில் வைத்துக் கொள்ளும்படி நடித்தனர். பாரதியின் தந்தை சேதுராமனாக வந்த நாராயணனின் நடிப்பு அவரைப் போலவே உயர்ந்து நின்றது. பட்லர் சிவா நாடகத்தின் நகைச்சுவை நாடி. அந்தப் பாத்திரத்தை ஏற்றுச் சிவஞானம் அருமையாக நடித்து அவ்வப்போது ரசிகர்களின் கையொலியைப் பெற்றார். [பாரதியின் தோழியும், ராமுவின் தங்கையுமான பிரேமா முக்கியமான பாத்திரம். அவள்தான் நாடகத்தை முற்றிலும் எதிர் பாராத விதமாக முடித்து வைக்கிறாள். அந்தப் பாத்திரத்தை ஏற்றவர் பெயரும் பிரேமா. நன்றாய் நடித்தார். அடுத்த முக்கியமான பாத்திரம் பதி. பதிதான் நாடக சஸ்பென்ஸைக் காப்பாற்றியவன். பதியாக வந்தவர் பெயர் லக்ஷ்மி பதி. அவர் இல்லாமல் நாடகம் இல்லை. இப்படி ஒவ்வொரு பாத்திரமும் ஒன்றையொன்று பற்றிக் கொண்டு சுவையிருந்து அளிக்க வசனம் உறுதுணையாக இருந்தது.

இரு கோடுகள்

ஒரு நாடகத்தின் வெற்றி, அதைப் பார்ப்பவர்களில் பெரும்பாலோர், 'தங்களையே மேடையில் தோன்றும் பாத்திரங்களாகக் காண்கிறோமோ என்று நினைக்கும் போது தான் உருவாகிறது.

விஜய் தியேட்டர்ஸ் தயாரித்தளிக்கும் 'இரு கோடுகள்' என்ற நாடகம் இந்த வகையில் ஒரு வெற்றி நாடகம். சாரநாதனின் குடும்பம், அவன் மாமனார், மனைவி குழந்தைகள், அவன் உத்தியோகம் பார்க்கும் கலெக்டர் ஆபீஸ், அவனுடைய சக சிப்பந்திகள், எல்லோருமே நமக்கு எங்கோ, எப்போதோ அறிமுகமானவர்களே என்ற பிரமிப்பைத் தோற்றுவிக்கிறார்கள். இதனால் முதல் காட்சியிலிருந்தே அவர்கள் வாழ்க்கையில் (நாடகக் கதை வாழ்க்கைதான்) நாம் அக்கறை காட்ட ஆரம்பித்து விடுகிறோம் !

எப்போதோ காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டு கைக் குழந்தையுடன் கைவிடப்பட்ட முதல் மனைவியே பல ஆண்டுகளுக்குப் பின்னால் தனக்கு மேல் அதிகாரியாக வந்து அமருவாள் என்று சாரநாதன் எதிர்பார்த்திருப்பானா என்ன? அவனுடைய இரண்டாவது மனைவியின் மகனும், மூத்த மனைவியின் மகளும், பரஸ்பரம் உறவு தெரியாது கல்லூரி நண்பர்களாக மாறுவார்கள் என்றுதான் நினைத்திருப்பானா ?

தலைமைக் குமாஸ்தா சாரநாதனும், அவனுக்குக் காரியாலயத்தில் தலைவியாக வீற்றிருக்கும் முதல் மனைவி பிருந்தாவும் பரஸ்பரம் தெரிந்து கொள்கிறார்கள். ஆனால் வெளியில் சொல்லிக் கொள்ள முடியாதபடி ஓர் இறுக்கமான சூழ்நிலை உருவாகி விடுகிறது. பின்னால் எதிர்பாராத விபத்து இந்த இறுக்கத்தைத் தவிர்க்க உதவுகிறது.

ஜோசப் ஆனந்தனால் எழுதி டைரக்ட் செய்யப்பட்ட இந்த நாடகத்தில் கதாநாயகன் சாரநாதனாக வரும் நாராயணன் வெகு இயற்கையாகத் தம் நடிப்பைக் கையாளுகிறார். அப்பாவி இரண்டாவது மனைவி கல்யாணியாக வரும் சிவகாமியும், பெண் கலெக்டர் பிருந்தாவாக வந்து மிடுக்காக ஆங்கிலம் பேசும் லீலாவும் தங்கள் பாகங்களை அளவுடன் அநாயாசமாக நடித்துக் காட்டுகிறார்கள். இரண்டே நிமிடங்களாக இருந்த போதிலும், அந்த நேரத்தில் ஆபீஸ் வாழ்க்கையில் முன்னேற முடியாத ஞானப் பிரகாசம் என்னும் பாத்திரமாகத் தோன்றும் நபர், தம் நிலையை வருணித்து ரசிகர்கள் கண்களில் ஈரம் கசியச் செய்து விடுகிறார். காரியாலயச் சிப்பந்திகள் எல்லோருமே இயற்கையான கட்டுக் கோப்புக்குள் அடங்கிப் பொருத்தமாக வந்து போகிறார்கள்.





'இரு கோடுகள்' ஒரு சுவாரசியமான குடும்ப நாடகம். குழப்பங்கள், சிக்கல்கள், கோளாறுகள் இல்லாத நாடகமும்கூட !

-- கோமதி சுவாமிநாதன்


E.V.R.பிக்சர்ஸ்
தங்கச் சுரங்கம்
ஈஸ்ட்மென் கலர்
டைரக்ஷன்
ராமண்ணா
தயாரிப்பு: E.V.ராஜன்
EVR
கதை பாலசுப்ரமணியம்
வசனம் சக்திகிருஷ்ணசாமி
ஒளிப்பதிவு துரை - அமிர்தம்
பாடல்கள் கண்ணதாசன்
இசை T.K.ராமமூர்த்தி
சாந்தி
கிரௌன்
புவனேஸ்வரி
SEMBI

மனநோய்க்கு மருந்து!

அமெரிக்க விண்வெளி வீரர்கள் மூவரும் அபல்லோ-9 லிருந்து சந்திரனைப் பத்து நாள் சுற்றி விட்டுப் பத்திரமாக அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் இறங்கி விட்டதாக அல்லவா நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் ? அதுதான் இல்லை ! மூவரும் சென்னையில் வந்து இறங்கினார்கள்; அதுவும் கீழ்ப்பாக்கத்துக்கு வந்து சேர்ந்தார்கள் ! இன்னும் சொல்லப் போனால் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கே வந்து விட்டார்கள்!

விண்வெளி வீரர்கள் குதூகலமும், கொண்டாட்டமும், விளையாட்டும் நிறைந்த மைதானத்தில் வந்து இறங்கினார்கள்!


''நாங்கள் சந்திரனைப் பிடிக்கப் புறப்பட்டோம். ஆனால் இத்தனை கேளிக்கையும் விளையாட்டும் நிறைந்த இடத்தில் இறங்கியதில் மகிழ்கிறோம் !'' என்றார்கள்.

''நீங்கள் இறங்கியிருக்கிற இடம் கீழ்ப்பாக்கம் பைத்தியக்கார ஆஸ்பத்திரி. இங்கே இன்று மன நோயாளிகளுக்கு வருடாந்திர விளையாட்டு விழா நடக்கிறது. இந்த விளையாட்டு விழாவுக்கு மூன்று விண்வெளி வீரர்களும் விஜயம் செய்தது எங்களுக்குப் பெருமையாக இருக்கிறது'' என்றார் அவர்களை வரவேற்ற ஒரு பெரிய மனிதர்.

'' நன்றாகப் பெருமைப்படுங்கள். பெருமைப்பட்டு முடிந்ததும் உங்களுக்கு அதிர்ச்சி தரும் செய்தியைக் கூறவிருக்கிறோம். நாங்கள் மூவருமே இந்த மன நல மருத்துவ மனையில் சிகிச்சை பெறுபவர்கள்தான்! இந்த விளையாட்டு விழாவில் விண்வெளி வீரர் வேஷம் தாங்கி உங்களை மகிழ்விக்கவே வந்திருக்கிறோம்!'' என்று ஒரு போடு போட்டார்கள் அம்மூவரும் ! அவர்களை வரவேற்க முந்திக் கொண்டவர் மட்டுமென்ன, சுற்றிலுமிருந்த எல்லோருமே அசந்து போனார்கள்!

ஃ ஃ ஃ

பைத்தியம் பிடித்தவர்கள் என்று சொல்கிற காலம் மலையேறி விட்டது. இன்று அவர்கள் மன நோயாளிகள் என்றே அழைக்கப்படுகின்றனர். சிகிச்சை முறைகளிலும் எவ்வளவோ மாறுபாடுகள்! மன நோய் கண்டவர்களை அதட்டி உருட்டிக் கொடுமைப்படுத்தி அடக்கி ஆள்வது கிடையாது. அன்பு கொண்டு அனுதாபத்துடன் அணுகிச் சிகிச்சை அளிப்பதே இன்றைய முறை. இது எந்த அளவுக்கு நற்பலனை விளைவிக்க முடியும் என்பதை மன நல மருத்துவ மனையில் நடந்த விளையாட்டுப் போட்டிகள் நிரூபித்தன. டாக்டர்கள், நர்ஸ்கள் தவிர சிகிச்சைக்கு என்று வந்துள்ள நோயாளிகளும் விளையாட்டுக்களில் உற்சாகமாகப் பங்கு கொண்டார்கள்.



விண்வெளி வீரர்கள் !

ஃ ஃ ஃ

'டி'செக்டர் மன நோயாளிகளும், 'ஏ' செக்டர் மன நோயாளிகளும் 'டக் ஆப் வார்' கயிறு இழுக்கத் தொடங்கினார்கள்.



மனநல மருத்துவமனையின் தலைமை டாக்டர் மிஸ் சாரதா மேனன்

''நலந்தானா? நலந்தானா?'' என்று இசைத்தட்டு மைக்கில் ஒலித்தது.

''நலமில்லாமலா இப்படி ஓட்டமும் ஆட்டமும் விளையாட்டும் பிரமாதப்படுகின்றன? மன ஆண் நோயாளிகள் டிரில் செய்கிறாங்க பார்த்தீங்களா ? அங்கே பாருங்க ! பெண்மணிகள் சலங்கையைக் குலுக்கிக் கொண்டு இசைக்கேற்ப அணிவகுத்து நடப்பதைப் பாருங்க! ராஜஸ்தானி உடையணிந்து பெண்மணிகள் கிருஷ்ணன்—கோபியராகக் காட்சிதருவதையும் பாருங்க!''

ஃ ஃ ஃ

வாலிபால், டேபிள் டென்னிஸ், ரிங் டென்னிஸ், காரம் முதலியவற்றில் பராசக்தி கணேசன் பல பரிசுகளைப் பெற்றார் !

இன்னும் பலரகப் போட்டிகள் நடைபெற்றன.

ஃ ஃ ஃ

கரடி வேஷத்திலிருந்த மனிதனை ஒருவர் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்



மாறுவேஷங்களில் மன நோயாளிகள்

தார். பாம்பாட்டி ஒருவன் மகுடி ஊதினான். புனிதச் சிலுவை ஏந்தியபடியே ஏசு பவனி வந்தார். சாது ஒருவர் பூனை மாதிரி அமர்ந்திருந்தார். இத்தனை வேஷங்களைப் போட்டவர்களும் மன நல மருத்துவ விடுதியைச் சேர்ந்த நோயாளிகளே. ஏசுவும், சாதுவும் முதல் இரண்டாம் பரிசுகளைப் பெற்று மகிழ்ந்தார்கள்.

ஃ ஃ ஃ

கீழ்ப்பாக்கம் மன நல மருத்துவமனையில் 1900 நோயாளிகளுக்கு மேல் சிகிச்சை பெறுகிறார்கள். பலர் சிகிச்சையில் பலன் பெற்று வெளியேறுகிறார்கள். மன நோயாளிகளுக்காக மருத்துவ மனையில் இரண்டாயிரம் புத்தகங்களுக்குமேல் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தையல், எம்பிராய்டரி, தச்சு வேலையெல்லாம் சொல்லித் தருகிறார்கள். அவர்கள் கைத்திறனில் மலர்ந்த வர்ணச் சித்திரங்கள், மரச் சாமான்கள் ஆகியவற்றைக் காட்சிப் பொருளாக வைத்திருந்தார்கள். இதை யெல்லாம் பார்த்த போது இத்தனை அழகான கலைப் பொருள்களைத் தயாரிப்பவர்களைப் பைத்தியம் என்று சொல்பவர்கள்தான் பைத்தியம் என்று நினைக்கத் தோன்றும் !

அமெரிக்க கான்ஸல் ஜெனரல் தாமஸ் எம். ரெக்நெகல் விளையாட்டு விழாவுக்குத் தலைமை வகித்தார்; ஸ்ரீமதி ரெக்நெகல் வெற்றி பெற்ற மன நலமில்லாத நோயாளிகளுக்குப் பரிசுகளை வழங்கினார். 'பொறுமையே பூஷணமாக'க் கொண்ட மிஸ் சாரதா மேனன் 'அமெரிக்காவில் மன நல மருத்துவ மனைகள் வசதிகள் அனைத்தும் படைத்த முதல்தர ஹோட்டல்கள் போலத் திகழ்கின்றன. நம் நாட்டிலும் அம்மாதிரி மன நல மருத்துவ மனைகள் திகழ வேண்டும்' என்று ஆசைப்பட்டார்.

அவர் ஆசை இன்றில்லாவிட்டாலும் எதிர் காலத்திலாவது நிறைவேற நாமும் வாழ்த்துவோம் !

—குண்டுமணி

விஷத்தின் விலை !

பாம்பின் விஷத்தைக் கொண்டே பாம்புக் கடிக்குச் சிகிச்சை செய்யும் முறைகள் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. விஷத்தில் ரஸாயன முறைப்படி சில மாற்றங்கள் செய்தால் அது பாம்புக் கடிக்கு மிகச் சிறந்த மருந்தாகி விடுகிறது. ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இதற்காகவே பாம்புப் பண்ணைகள் வைத்து ஏராளமான பாம்புகளை வளர்க்கிறார்கள். ஏனெனில் பாம்பு விஷத்தினால் அவர்களுக்கு நிறைய அந்நியச் செலாவணி கிடைக்கிறது. சோவியத் நாட்டில் உள்ள 'பாட்னரஸ்' என்ற பாம்புப் பண்ணையின் மூலம் மட்டும் வருஷத்துக்கு 20 லட்சம் ரூபாய் லாபம் கிடைக்கிறதாம். அந்நாட்டில் பாம்புகள் வாழும் சில குறிப்பிட்ட பிரதேசங்களில் யாரும் பாம்பு பிடிக்கக்கூடாது என்று ஒரு சட்டம் இருக்கிறது!



விஷத்தின் விலை தங்கத்தின் விலையைவிட அதிகம். ஒரு கிராம் விஷத்தின் விலை 1500 ரூபாய் ஆகிறது. நான்கு நாகப் பாம்புகள் அல்லது முப்பது கருநாகங்கள் இவைகளிடமிருந்து ஒரு கிராம் விஷம் கிடைக்கும். நாகப் பாம்பு ஒரு மனிதனைத் தீண்டும் போது 200 மில்லிகிராம் விஷத்தை அவன் உடலில் பாய்ச்சுகிறது. ஜூலை ஆகஸ்டு மாதங்களில் விஷத்தின் அளவு அதிகமாகவும், நவம்பர் டிசம்பர் மாதங்களில் குறைவாகவும் இருக்கும். பாம்பின் விஷத்திலிருந்து புற்றுநோய்க்கும் மருந்து தயாரிக்கலாமாம். பம்பாய் புற்று நோய் ஆராய்ச்சி நிலையம் இதை நிரூபித்திருக்கிறது. வருஷம் ஒன்றுக்கு உலகத்தில் 30,000 ஜனங்கள் பாம்புக் கடியினால் மரணமடைகிறார்கள். அதில் 15,000 பேர் இந்தியர்கள் !

ஆதாரம்: அம்ருத பஜார் பத்திரிகா
தகவல்: சரோஜா ராமச்சந்திரன்

கண்ணாடி இழை 'கேபிள்' !

மயிரிழை கனமுள்ள நூற்றுக்கணக்கான கண்ணாடி இழைகளைச் சேர்த்து 'கேபிள்' ஆகப் பயன்படுத்த பிரிட்டிஷ் தபால் ஆபீஸ் ஆராய்ச்சி செய்து உள்ளது. தற்போது ரப்பர் உறையுடன் ஆன செப்புக் கம்பிகள் கேபிள்களாக உபயோகப்பட்டு வருகிறது. இந்தச் செப்புக் கம்பிகளுக்குப் பதிலாகக் கண்ணாடி இழைகளை உபயோகிக்கலாம் என்பதுதான் ஆராய்ச்சியின் முடிவு.



இதனால் என்ன லாபம்? நீடித்த உழைப்பு, செம்மையான இயக்கம், இரண்டையும் தவிர, தற்போது பயன்படும் 'கேபிள்'கள் எத்தனை 'சிக்னல்'களைத் தாங்கிச் செல்லுமோ அதைப் போல் பல மடங்கு சிக்னல்களைப் புதிய கண்ணாடி இழை ஒவ்வொன்றும் கையாளவல்லது என்பது குறிப்பிடத்தக்க நன்மையாகும். டெலிபோன் சிக்னல் மட்டுமின்றி டெலிவிஷன் சிக்னல்களும் அனுப்ப இந்தக் கண்ணாடி இழை கேபிள் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும்.

-- பி. ஐ. எஸ்.


பொன்னியின்

அமரர் **கல்கி**


பதினான்காம் அத்தியாயம்

இரண்டு பூரண சந்திரர்கள்

அன்று தஞ்சை நகரம் அல்லோலகல்லோலப்பட்டது. பல காலமாகத் தலைநகருக்கு வராதிருந்த இளவரசி மனம் மாறித் தஞ்சைக்கு வருகிறார் என்றால் அந்த நகர மாந்தர்களின் எக்களிப்புக்குக் கேட்பானேன்? சோழ நாட்டின் இளவரசி குந்தவையின் அழகு, அறிவு, தயாளம் முதலிய குணங்களைப் பற்றித் தெரியாதவர்கள் இல்லை. தினம் ஒரு தடவையாவது ஏதேனும் ஒரு வியாஜம் பற்றி அவருடைய பெயரைக் குறிப்பிட்டுப் பேசாதவர்கள் இல்லை. இந்த வருஷம் நவராத்திரி வைபவத்துக்கு இளவரசி தஞ்சை அரண்மனையில் வந்திருப்பார் என்ற வதந்தி முன்னமே பரவி மக்களின் ஆவலை வளர்த்திருந்தது. எனவே இன்றைக்கு வருகிறார் என்று தெரிந்ததும் தஞ்சைக் கோட்டை வாசலில் ஒரு ஜனசமுத்திரமே காத்துக் கொண்



செல்வன்



டிருந்தது. பூரண சந்திரனுடைய உதயத்தை எதிர்பார்த்து ஆஹ்லாத ஆரவாரம் செய்யும் ஜல சமுத்திரத்தைப் போல் இந்த ஜன சமுத்திரமும் ஆர்வம் மிகுந்து ஆரவாரம் செய்து கொண்டிருந்தது.

கடைசியில் பூரணச் சந்திரனும் உதயமாயிற்று. ஏன்? இரண்டு நிலாமதியங்கள் ஒரே சமயத்தில் உதயமாயின. தஞ்சைக் கோட்டை வாசலண்டை குந்தவை தேவி தன் பரிவாரத்துடன் வந்து சேர்ந்தபோது கோட்டைக் கதவுகள் தடாலென்று திறந்தன. உள்ளேயிருந்து தேவியை வரவேற்று அழைத்துப் போவதற்காக அரண்மனைப் பரிவாரங்கள் வெளிவந்தன. அந்தப் பரிவாரங்களின் முன்னிலையில் இரு பழு

வேட்டரையர்களும் இருந்தார்கள். அதுமட்டுமல்ல; அவர்களுக்குப் பின்னுல் முத்துப் பதித்த தந்தப் பல்லக்கு ஒன்றும் வந்தது. அதன் பட்டுத் திரைகள் விலகியதும் உள்ளே பழுவூர் இளைய ராணி நந்தினி தேவியின் சுந்தர மதி வதனம் தெரிந்தது.

குந்தவை யானையிலிருந்தும் நந்தினி பல்லக்கிலிருந்தும் இறங்கினுர்கள். நந்தினி விரைந்து முன்னுல் சென்று குந்தவைக்கு முகமன் கூறி வரவேற்ருள். அந்த வரவேற்பைக் குந்தவை புன்னகை புரிந்து அங்கிகரித்தாள்.

சோழ நாட்டின் அந்த இரு பேரழகிகளையும் அங்கு ஒருங்கே கண்ட ஜனத் திரளின் உற்சாகம் கரை புரண்டு ஓடியது. நந்தினி பொன் வர்ண மேனியாள்; குந்தவை செந்தாமரை நிறத்தினுள். நந்தினியின் பொன் முகம் பூரண சந்திரனைப் போல் வட்ட வடிவமாக இருந்தது; குந்தவையின் திருமுகம் கைதேர்ந்த சிற்பிகள் வார்த்த சிலை வடிவத்தைப் போல் சிறிது நீள வாட்டமா யிருந்தது. நந்தினியின் செவ்வரியோடிய கருநிறக் கண்கள் இறகு விரித்த தேன் வண்டுகளைப் போல் அகன்று இருந்தன; குந்தவையின் கருநீல வர்ணக் கண்கள் நீலோத்பலத்தின் இதழைப் போல் காதளவு நீண்டு பொலிந்தன. நந்தினியின் மூக்கு தட்டையாக வழுவழுவென்று தந்தத்தினுல் செய்தது போல் திகழ்ந்தது. குந்தவையின் மூக்கு சிறிது நீண்டு பன்னீர்ப் பூவின் மொட்டைப் போல் இருந்தது. நந்தினியின் சிறிது தடித்த இதழ்கள் அமுதம் ததும்பும் பவழச் செப்பைப் போல் தோன்றியது. குந்தவையின் மெல்லிய இதழ்களோ தேன் பிலிற்றும் மாதுளை மொட்டெனத் திகழ்ந்தது. நந்தினி தன் கூந்தலைக் கொண்டை போட்டு மலர்ச் செண்டுகளைப் போல் அலங்கரித்திருந்தாள். குந்தவையின் கூந்தலோ ''இவள் அழகின் அரசி'' என்பதற்கு அடையாளமாகச் சூட்டிய மணி மகுடத்தைப் போல் அமைந்திருந்தது.

இப்படி யெல்லாம் அந்த இரு வனிதாமணிகளின் அழகையும் அலங்காரத்தையும் தனித்தனியே பிரித்து ஒப்பிட்டுப் பார்த்து எல்லோரும் மகிழ்ந்தார்கள் என்று சொல்ல முடியாது தான். ஆயினும் பொதுப்படையாக இருவரும் நிகரிலா சௌந்தரியவதிகள் என்பதையும், அங்க அமைப்பிலும், அலங்காரத்திலும் மாறுபட்டவர்கள் என்பதையும் அனைவருமே எளிதில் உணர்ந்தார்கள்.

நந்தினியின் பேரில் அதுவரையில் நகர மாந்தர்களுக்கு ஓரளவு அதிருப்தியும் அருவருப்பும் இருந்து வந்தன. குந்தவைப் பிராட்டியை ஒவ்வொருவரும் தங்கள் குலதெய்வமெனப் பக்தியுடன் பாராட்டினுர்கள். ஆனுல் இப்போது பழுவூர் இளைய ராணி கோட்டை வாசலுக்கு வந்து இளைய பிராட்டியை வரவேற்றது மக்களுக்கு மிகுந்த குதூகலத்தை விளைவித்தது.

மக்கள் இவ்விதம் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்கையில் நந்தினிக்கும் குந்தவைக்கும் நடந்த சம்பாஷணை மின்னலை மின்னல் வெட்டும் தோரணையில் அமைந்தது.

''தேவி! வருக! வருக! எங்களை அடியோடு மறந்து விட்டீர்களோ என்று எண்ணினேம். இளைய பிராட்டியின் கருணை எல்லையற்றது என்பதை இன்று அறிந்தோம்'' என்ருள் நந்தினி.

''அது எப்படி ராணி! தூரத்திலிருந்தால் மறந்து விட்டதாக அர்த்தமா? நீங்கள் பழையாறைக்கு வராத படியால் என்னை மறந்துவிட்டதாக வைத்துக் கொள்ளலாமா?'' என்ருள் குந்தவை.

''தேன் மலரை நோக்கி வண்டுகள் தாமே வரும்; அழைப்பு வேண்டிய தில்லை. அழகிய பழையாறைக்கு யாரும் வருவார்கள். இந்த அவலட்சணமான தஞ்சைக் கோட்டைக்குத் தாங்கள் வந்தது தங்கள் கருணையின் பெருமையல்லவா?''

''அது என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? தஞ்சை புரியை அவலட்சண நகரமென்று சொல்லலாமா? இங்கே சௌந்தரியத்தையே சிறைப் படுத்தி வைத்திருக்கும்போது?.....'' என்ருள் இளைய பிராட்டி.

''நானும் அப்படித்தான் கேள்வியுற்றேன்; சக்கரவர்த்தியை இங்கே சிறைப் படுத்தி வைத்திருக்கிருர்கள் என்று. இனிமேல் கவலையில்லை. அவரை விடுவித்துச் செல்லத் தாங்கள் வந்து விட்டீர்கள் அல்லவா?'' என்று நந்தினி கூறியபோது அவளுடைய கண்களில் மின்வெட்டுத் தோன்றி மறைந்தது.

''அழகாயிருக்கிறது! சுந்தர சோழ சக்கரவர்த்தியைச் சிறை வைக்க இந்திராதி தேவர்களாலும் முடியாது. சிறிய மனிதர்களால் எப்படி முடியும்? நான் அதைப் பற்றிச் சொல்லவில்லை. சௌந்தரிய தேவதையான நந்தினி தேவியைப் பற்றிச் சொன்னேன்...''

''நன்ருகச் சொல்லுங்கள் தேவி! அவர் காதுபட இதைச் சொல்லுங்கள். என்னைச் சிறையில் வைத்திருப்பது போலத்தான் பழுவூர் அரசர் வைத்

திருக்கிறார். தாங்கள் கொஞ்சம் சிபாரிசு செய்து...''

''என் சிபாரிசு என்னத்துக்கு ஆகும்? தங்களை வைத்திருப்பது சாதாரணச் சிறையல்லவே? காதல் என்னும் சிறையல்லவா! அதிலும்...''

''ஆம், தேவி! அதிலும் கிழவருடைய காதல் சிறையாயிருந்து விட்டால் விமோசனமே இல்லை! ஏதோ 'பாதாளச் சிறை' என்கிறார்களே? அதில் அடைக்கப்பட்டவர்களாவது வெளிவரக் கூடும்! ஆனால்...''

''ஆமாம், ராணி! அதிலும் நாமாகப் போட்டுக் கொண்ட விலங்காயிருந்தால், நாமாகத் தேடிச் சென்ற சிறையாயிருந்தால், விடுதலை கஷ்டமானதுதான்! ..... சீதை, கண்ணகி, நளாயினி, சாவித்திரி வழியில் வந்தவர்கள் விடுதலை தேடவும் மாட்டார்கள்!... அதோ அங்கே என்ன அவ்வளவு கூச்சல்?'' என்றாள் குந்தவைப் பிராட்டி.

உண்மையாகவே கோட்டை வாசலுக்குச் சற்றுத் தூரத்தில் திரளாக நின்று கொண்டிருந்த பெண்களின் நடுவிலிருந்து அந்தப் பெருங் கூச்சல் எழுந்து கொண்டிருந்தது. குந்தவையும் நந்தினியும் அவ்விடத்தை நெருங்கிப் போனார்கள். பெண்கள் பலர் ஏக காலத்தில் கூச்சலிட்டபடியால் முதலில் இன்னதென்று புரியவில்லை. பிறகு கொஞ்சம் விளங்கியது. இளைய பிராட்டியை அடிக்கடி அரண்மனைக்கு வந்து பார்க்க அவர்கள் விரும்புவதாகவும், ஆகையால் நவராத்திரி ஒன்பது நாளும் கோட்டைக்குள் பிரவேசிப்பதில் உள்ள கட்டுக் காவலை நீக்கி விட வேண்டும் என்றும் அவர்கள் கோருவதாகத் தெரிந்தது.

''ராணி! தங்கள் கணவரிடமாவது மைத்துனரிடமாவது சொல்லி, இவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றச் சொல்லுங்கள். கேவலம் இந்த ஸ்திரீகளைக் கண்டு பயப்படுவானேன்? இவர்களால் சோழ சாம்ராஜ்யத்துக்கு என்ன ஆபத்து வந்துவிடும்? பழுவூர் சகோதரர்களின் ஆணை நாலா திசையிலும் கடற்கரை வரையில் நீண்டு பரந்திருக்கிறது அல்லவா?'' என்றாள் குந்தவை.

''அது என்ன, கடற்கரையோடு நிறுத்தி விட்டீர்கள்? கடல் கடந்து அப்பாலும் அவர்களுடைய ஆணையும் அதிகாரமும் போகின்றன. இதற்கு அடையாளம் சீக்கிரமே கிடைக்கும்!'' என்று சொல்லி நந்தினி செய்த புன்னகை குந்தவையின் இதயத்தைப் பிளந்தது. 'இந்தப் பாதகி வார்த்தையின் உட்கருத்து யாதாயிருக்கலாம்!' என்று சிந்தித்தாள்.

இதற்குள் நந்தினி பெரிய பழுவேட்டரையரைச் சமிக்ஞையால் அருகில் அழைத்து அப்பெண்களின் கோரிக்கையையும் இளைய பிராட்டியின் விருப்பத்தையும் தெரிவித்தாள்.

''இளையபிராட்டியின் வார்த்தைக்கு எதிர் வார்த்தை ஏது?'' என்றார் பழுவேட்டரையர்.

பின்னர் ஜனத்திரளின் கோலாகல ஆரவாரத்தினிடையே அவர்கள் கோட்டைக்குள் பிரவேசித்தார்கள்.

அன்று முதல் சில தினங்கள் தஞ்சை நகரும் சுற்றுப்புறங்களும் அளவில்லாக் குதூகல ஆரவாரத்தில் திளைத்துக் கொண்டிருந்தன. குந்தவை தேவி தஞ்சைக்கு வந்த சமயத்தில் நவராத்திரி உற்சவம் சேர்ந்து கொண்டது. பழுவேட்டரையரும் தம்முடைய வாக்கை நிறைவேற்றினார். தங்கு தடையில்லாமல் அந்தப் பத்து நாட்களிலும் ஜனங்கள் கோட்டைக்குள் புகவும் வெளி வரவும் அனுமதித்தார். கோட்டை வாசற் கதவுகள் சதாகாலமும் அகலத் திறந்திருந்தன. கோட்டைக்குள்ளே அரண்மனைகளிலும் வெளியில் ஊர்ப் புறங்களிலும் பல கோலாகல நிகழ்ச்சிகள் நடந்து வந்தன. அவற்றைக் கண்டு களிக்கப் பெருந்திரளாக மக்கள் குழுமிக் கொண்டிருந்தார்கள். அக் கூட்டங்களின் நடுவே அடிக்கடி இரண்டு பூரண சந்திரர்கள் சேர்ந்தாற்போல் உதயமாகிக் கொண்டிருந்தார்கள். அந்தக் காட்சியைக் கண்டு ஜன சமுத்திரம் பொங்கிப் பூரித்து ஆரவாரித்தது. ஆனால் வெளியில் இவ்வாறு ஒரே உற்சாகக் குதூகலமாக இருந்தபோது, அந்த இரண்டு பூரணச் சந்திரர்களுடைய இதயப் பிரதேசங்களிலும் எரிமலைகள் பொங்கி அக்கினிக் குழம்பைக் கக்கிக் கொண்டிருந்தன. பழுவூர் இளைய ராணிக்கும் பழையாறை இளைய பிராட்டிக்கும் ஓயாமல் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. சொல்லம்புகளைக் கொண்டும் விழிகளாகிற வேல்களைக் கொண்டும் அவ்விரு அழகிகளும் துவந்த யுத்தம் நடத்திக்கொண்டிருந்தார்கள். அந்தப் போராட்டத்தில் இரு பக்கமும் கூருள்ள வாள்கள் ஒன்றோடொன்று உராய்ந்தபோது தீப்பொறிகள் பறந்தன. திட்டிச் சாணை பிடித்த ஈட்டிகள் ஒன்றையொன்று தாக்கி ஜுவாலை வீசின. இருண்ட வான வெளியில் இரண்டு மின்னல்கள் ஒன்றையொன்று வெட்ட இரண்டும்

சேர்ந்து துடிதுடித்தன. கொடிய அழகு வாய்ந்த இரண்டு பெண் புலிகள் ஒன்றை யொன்று கட்டித் தழுவிக் கால் நகங்களினால் பிறண்டி இரத்தம் கசியச் செய்தன. பயங்கர சௌந்தரியம் பொருந்திய இரண்டு நாக சர்ப்பங்கள் படம் எடுத்து ஆடி அவற்றின் கூரிய மெல்லிய சிவந்த நாக்குகளை நீட்டி ஒன்றை யொன்று விழுங்கிவிடப் பார்த்தன.

இந்த அதிசயமான போராட்டத்தில் அவர்கள் உற்சாக வெறியும் அடைந் தார்கள்; வேதனைப்பட்டு உளம் புழுங் கியும் துடித்தார்கள்.

நகர மாந்தர்களின் உற்சாகத்திலும் கலந்து கொள்ளாமல், இந்த இரு சந் திரமதிகளின் போராட்டத்தையும் புரிந்து கொள்ளாமல் ஒரே ஒரு ஆத்மா தவித்துக் கொண்டிருந்தது. கொடும் பாளூர் இளவரசி வானதிக்கு இப் போதெல்லாம் இளைய பிராட்டியுடன் பேசுவதற்கே அவகாசம் கிடைக்க வில்லை. அக்காளுடன் கூடக் கூடப் போனாளே தவிர, வெளியில் நடப்பது ஒன்றிலும் அவள் மனம் ஈடுபடவில்லை. தனக்குள்ளே ஒரு தனிமை உலகைச் சிருஷ்டித்துக் கொண்டு அதிலேயே சஞ்சரித்து வந்தாள்.

பதினைந்தாம் அத்தியாயம்

இரவில் ஒரு துயரக் குரல்

சோழ நாட்டில் அக்காலத்தில் ஆடல் பாடல் கலைகள் மிகச் செழிப் படைந்திருந்தன. நடனமும் நாடகமும் சேர்ந்து வளர்ந்திருந்தன. தஞ்சை நகர் சிறப்பாக நாடகக் கலைஞர்கள் பலரைத் தோற்றுவித்தது. அந்த நாளில் வாழ்ந்திருந்த கருவூர்த் தேவர் என்னும் சிவநேசச் செல்வர் 'இஞ்சி* சூழ்' தஞ்சை நகரைப் பற்றிப் பல பாடல்களில் கூறியிருக்கிறார்.

"மின்னெடும் புருவத்துஇள மயிலனையார்
விலங்கல் செய் நாடகசாலை
இன்னடம் பயிலும் இஞ்சி சூழ் தஞ்சை"

என்று அவருடைய பாடல்களில் ஒன்று வர்ணிக்கிறது. தஞ்சை நகரில் நாடகக் கலை ஓங்கி வளர்ந்ததற்கு அறிகுறியாக நாடக சாலைகள் பல இருந்தன. அந்த நாடக சாலைகளில் எல்லாம் மிகச் சிறந்த நாடகசாலை சக்கரவர்த்தியின் அரண்மனைக்குள்ளேயே இருந்தது.

புதிய புதிய நாடகங்களைக் கற்பனை செய்து அமைக்கும் கலைஞர்கள் தஞ்சை நகரில் வாழ்ந்து வந்தனர். அதற்கு முன்னாலெல்லாம் புராண இதிகாச காவி யங்களில் உள்ள கதைகளையே நாடகங் களாக அமைத்து நடிப்பது வழக்கம். சில காலமாகத் தஞ்சை நாடகக் கலை ஞர்கள் வேறொரு துறையில் கவனம் செலுத்தி வெற்றி பெற்றிருந்தார்கள். சரித்திரப் புகழ் பெற்ற வீரர்களின் வரலாறுகளை அவர்கள் நாடகமாக அமைத்தார்கள். அவர்களுடைய காலத் துக்குச் சிறிது முற்பட்டவர்களின் வீரக் கதைகளையும் நாடகங்களாக்கி நடித் தார்கள். அப்படிப்பட்ட வீரர்கள் சோழ வம்சத்தில் பிறந்தவர்களைப்போல் வேறு எங்கே உண்டு? ஆகையினால், கரிகால் வளவர், விஜயாலய சோழர், பராந்தக தேவர் முதலிய சோழ வம்சத்து மன்னர்களின் சரித்திரங்களை நாடகங்களாக்கி நடித்தார்கள்.

நவராத்திரித் திருநாளில் சக்கர வர்த்தியின் அரண்மனையில் சோழ வம்சத்து மன்னர்களின் வீர சரித்திர நாடகம் மூன்று நாட்கள் நடைபெற் றன. சித்திர விசித்திரமாக அமைத்த நாடகசாலைக்கு எதிரே அரண்மனை நிலா முற்றத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்து நாடகங்களைக் கண்டு களித்தார்கள். அரண்மனைப் பெண்டிர் அமர்வதற்கு ஒரு தனியான இடம் நீலப் பட்டு விதானத்தின் கீழ் முத் திழைத்த சித்திரத் தூண்களுடன் ஏற்பாடாகி யிருந்தது. அதன் கீழ் மகாராணிகளும் இளவரசிகளும் அவர் களுடைய அந்தரங்கத் தோழிமார் களும் அமர்ந்து நாடகம் பார்த்தார்கள். அப்போதெல்லாம் குந்தவை தேவிக்கு அருகிலேயே நந்தினி வந்து உட் கார்ந்தாள். இது மற்றப் பெண்களில் சிலருக்குப் பிடிக்கவில்லை யென்றாலும், அதை அவர்கள் மனத்திலேயே வைத் துக் கொண்டு பொருமினார்களேயன்றி வேறெதுவும் செய்ய முடியவில்லை. பெரிய பழுவேட்டரையர், பழுவூர் இளையராணி இவர்களுடைய கோபத் துக்குப் பாத்திரமாக யாருக்குத்தான் துணிவு இருக்கும்? இளைய பிராட்டியே அந்தக் கர்வக்காரிக்கு அவ்வளவு மதிப் பளித்து மரியாதை செய்யும்போது மற்றவர்கள் எம்மாத்திரம்?

சோழ வம்ச மன்னர்களைப் பற்றிய மூன்று நாடகங்களில் மூன்றாவதான

---


*இஞ்சி - கோட்டை மதில்

பராந்தகத் தேவர் நாடகம் மிகச் சிறந்து விளங்கியது. அன்றைக்குத் தான் நாடகம் பார்த்த ஜனங்களின் மத்தியில் ஒரு சிறிய சலசலப்பு தோன்றி வளர்ந்தது.

அதுவரை சோழ நாட்டை அரசு புரிந்த சோழ மன்னர் பரம்பரையில் சுந்தர சோழரின் பாட்டனாரான கோப்பர கேசரி பராந்தகர் வீரப் புகழில் சிறந்து விளங்கினார். சுமார் நாற்பத்தாறு ஆண்டுகள் இவர் ஆட்சி நடத்தினார். இவருடைய காலத்தில் சோழ சாம்ராஜ்யம் விரிந்து பரவியது. ஈழ நாட்டிலிருந்து துங்கபத்திரை நதிவரையில் அவருடைய ஆணை சென்றது. பல போர்கள் நடந்தன; மகத்தான வெற்றி கிடைத்தது. 'மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பர கேசரி வர்மர்' என்ற பட்டம் பெற்றார். தில்லைச் சிதம்பரத்தில் சிற்றம்பலத்துக்குப் பொன் வேய்ந்து புகழ் பெற்றார். இவருடைய வாழ்க்கையின் இறுதியில் சில தோல்விகள் ஏற்பட்டு இராஜ்யம் சுருங்கியது. ஆனால் இவருடைய வீரப் புகழ் மட்டும் குன்றவில்லை. வடக்கே இரட்டை மண்டலத்திலிருந்து கடல் போன்ற மாபெரும் சைன்யத்துடன் படையெடுத்து வந்த கன்னர தேவன் என்னும் அரசனுடன் தக்கோலத்தில் இறுதிப் பெரும் போர் நடந்தது. இப்போரில் பராந்தகருடைய மூத்த புதல்வராகிய இராஜாதித்தர், — இந்தப் பரத கண்டம் என்றும் கண்டிராத வீராதி வீரர், — படைத் தலைமை வகித்தார். கன்னர தேவனுடைய சைன்யத்தை முறியடித்து விட்டு யானை மீதிருந்தபடி உயிர் துறந்து வீர சொர்க்கம் எய்தினார். அந்த வீரருடைய அம்பு பாய்ந்த சடலத்தை அப்படியே ஊருக்கு எடுத்து வந்தார்கள். அரண்மனையில் கொண்டு சேர்த்தார்கள். பராந்தக சக்கரவர்த்தியும் அவருடைய தேவிமார்களும் நாட்டைப் பாதுகாப்பதற்காக உயிர் துறந்த வீரப் பெருமகனின் உடலைத் தங்கள் மத்தியில் போட்டுக் கொண்டு கண்ணீர் பெருக்கினார்கள். திரைக்குப் பின்னாலிருந்து அசரீரி வாக்கு ''வருந்தற்க! வருந்தற்க! இளவரசர் இராஜாதித்தர் இறக்கவில்லை; சோழநாட்டு மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் கோயில் கொண்டு விளங்குகிறார்!'' என்று முழங்கிற்று. இந்த இறுதிக் காட்சியுடன் நாடகம் முடிவடைந்தது.

அந்தத் தலைமுறைக்கு முந்திய தலைமுறையில் நடந்த வீர சம்பவங்கள் நிறைந்த இந்த நாடகத்தை ஜனங்கள் பிரமாதமாக ரசித்து மகிழ்ந்தார்கள். சபையோருக்குள்ளே சலசலப்பு ஏற்பட்டதன் காரணம் என்னவென்றால், பராந்தக தேவரது காலத்தில் நடந்த பெரும் போர்களில் அவருக்கு இரண்டு சிற்றரசர்கள் அருந்துணையாக இருந்தார்கள். ஒருவர் கொடும்பாளூர் சிற்றரசர்; இன்னொருவர் பழுவூர்க் குறுநில மன்னர். இந்த இருவரும் சோழ வம்சத்தாருடன் உறவுத் தளையினால் பிணைக்கப்பட்டவர்கள். பெண் கொடுத்துப் பெண் வாங்கியவர்கள். இருவரும் இரண்டு கரங்களைப் போல் பராந்தகருக்கு உதவி வந்தார்கள். யார் வலக் கை, யார் இடக் கை என்று சொல்ல முடியாமல் இருந்தது. இருவரையும் தம் இரண்டு கண்களைப் போல் பராந்தக சோழர் ஆதரித்து, சன்மானித்து வந்தார். இரண்டு கண்களில் எது உயர்வு, எது தாழ்வு என்று சொல்ல முடியாதுதானே? இப்போது அதிகாரம் செலுத்தி வந்த பழுவேட்டரையர்களின் பெரிய தந்தை பராந்தகருக்கு உதவி செய்தவர். அவர் பெயர் பழுவேட்டரையர் கண்டன் அமுதனார். ஈழத்தில் உயிர் துறந்த கொடும்பாளூர்ச் சிறிய வேளாரின் தந்தைதான் (அதாவது வானதியின் பாட்டனார்) பராந்தக தேவருக்குத் துணை புரிந்த கொடும்பாளூர்ச் சிற்றரசர்.

பராந்தக தேவரின் நாடகம் நடத்தியவர்கள் மேற்கூறிய இரண்டு சிற்றரசர்களுக்குள்ளே எவ்வித உயர்வு தாழ்வும் வேற்றுமையும் கற்பியாமல் மிக ஜாக்கிரதையாகவே நாடகத்தை ஒத்திகை செய்திருந்தார்கள். இருவருடைய வீரப் புகழும் நன்கு வெளியாகும்படி நடித்தார்கள். பராந்தக தேவர் அந்த இரு வீரர்களையும் சம



மாகச் சன்மானித்ததைக் குறிப்பாக எடுத்துக் காட்டினார்கள்.

ஆனபோதிலும் நாடகம் பார்த்த சபையோர் அத்தகைய சம பாவத்தைக் கொள்ளவில்லை யென்பது சீக்கிரத்திலேயே வெளியாயிற்று. அவர்களில் சிலர் கொடும்பாளூர்க் கட்சி என்றும் வேறு சிலர் பழுவூர்க் கட்சி என்றும் தெரிய வந்தது. கொடும்பாளூர்த் தலைவன் வீரச் செயல் புரிந்ததை நாடக மேடையில் காட்டியபோது சபையில் ஒரு பகுதியார் ஆரவாரம் செய்தார்கள். பழுவூர் வீரன் மேடைக்கு வந்ததும் இன்னும் சிலர் ஆரவாரித்தார்கள். முதலில் இந்தப் போட்டி சிறிய அளவில் இருந்தது. வரவரப் பெரிதாகி வளர்ந்தது. நாடகத்தின் நடுநடுவே "நாவலோ* நாவல்!" என்னும் சபையோரின் கோஷம் எழுந்து நாலு திசைகளிலும் எதிரொலியைக் கிளப்பியது.

சபையில் எழுந்த இந்தப் போட்டி கோஷங்கள் குந்தவை தேவிக்கு உற்சாகத்தை அளித்தன. கொடும்பாளூர் கட்சியின் கோஷம் வலுக்கும்போது பக்கத்திலிருந்த கொடும்பாளூர் இளவரசியைத் தூண்டி, "பார்த்தாயா, வானதி! உன் கட்சி இப்போது வலுத்துவிட்டது!" என்பாள். கள்ளங்கபடற்ற வானதியும் அதைக் குறித்துத் தன் மகிழ்ச்சியைப் புலப்படுத்துவாள். பழுவூர்க் கட்சியாரின் கோஷம் வலுக்கும்போது இளைய பிராட்டி நந்தினியைப் பார்த்து, "ராணி! இப்போது உங்கள் கட்சி பலத்து விட்டது!" என்பாள். ஆனால் இது நந்தினிக்கு உற்சாகமூட்டவில்லை என்பதை அவள் முகக் குறி புலப்படுத்தியது. இந்த மாதிரி ஒரு போட்டி ஏற்பட்டதும் அதிலே ஜனங்கள் பகிரங்கமாக ஈடுபட்டுக் கோஷமிடுவதும், இளைய பிராட்டி அதை மேலும் தூண்டி விட்டு வருவதும் அந்த அற்பச் சிறுமி வானதியையும் தன்னையும் ஒரு நிறையில் சமமாக வைத்துப் பரிகசிப்பதும் நந்தினியின் உள்ளக் கனலைப் பன்மடங்கு வளர்த்து வந்தது. கோபித்துக் கொண்டு எழுந்து போய் விடலாமா என்று பல தடவை தோன்றியது. அப்படிச் செய்தால் அந்தப் போட்டியைப் பிரமாதப்படுத்தித் தன் தோல்வியை ஒப்புக் கொண்டதாகும் என்று எண்ணிப் பழுவூர் ராணி பல்லைக் கடித்துக் கொண்டிருந்தாள்.

இதையெல்லாம் குந்தவை கவனித்து வந்தாள். நந்தினியின் மனநிலையைக் கண்ணாடியில் பார்ப்பது போல் அவளுடைய முகத் தோற்றத்திலிருந்து தெரிந்து கொண்டு வந்தாள். ஆனால் வேறொரு விஷயம் இளைய பிராட்டிக்குத் தெரியாத மர்மமாயிருந்தது.

போரில் பாண்டிய மன்னன் தோல்வியடைந்தது. அவன் இலங்கை மன்னனிடம் சென்று சரணாகதி யடைந்தது. இலங்கை மன்னனிடம் உதவி பெறுமல் மணி மகுடத்தையும் இரத்தின ஆரத்தையும் அங்கேயே விட்டு விட்டுச் சேர நாட்டுக்கு ஓடியது முதலியவற்றை நாடகத்தில் காட்டியபோது சபையோர் அனைவருமே அளவிலா உற்சாகத்தைக் காட்டினார்கள். ஆனால் நந்தினியின் முகம் மட்டும் அப்போதெல்லாம் மிக்க மன வேதனையைப் பிரதிபலித்தது. இதன் காரணம் என்னவென்பது பற்றி இளையபிராட்டி வியப்புற்றாள். கொஞ்சம் பேச்சுக் கொடுத்துப் பார்க்கலாம் என்று எண்ணி, "சக்கரவர்த்தியும் நம்முடன் இருந்து இந்த அருமையான நாடகத்தைப் பார்க்க முடியாமற் போயிற்றே? பாட்டனார் சாதித்த இக்காரியங்களை இவரும் தம் காலத்தில் சாதித்திருக்கிறார் அல்லவா? அப்பாவுக்கு மட்டும் உடம்பு குணமானால்?..." என்றாள்.

"தானே உடம்பு குணமாகி விடுகிறது. அவருடைய செல்வப் புதல்வியும் இங்கு வந்து விட்டீர்கள். இலங்கையிலிருந்து மூலிகையும் சீக்கிரம் வந்து விட்டால் சக்கரவர்த்திக்கு நிச்சயம் உடம்பு குணமாகி விடும்" என்றாள் நந்தினி.

"இலங்கையிலிருந்து மூலிகை வருகிறதா? அது என்ன?" என்றாள் குந்தவை.

"தெரியாதவரைப் போல் கேட்கிறீர்களே! இலங்கையிலிருந்து மூலிகை கொண்டு வரப் பழையாறை வைத்தியர் அனுப்பியிருக்கிறாராமே? தாங்கள்தான் ஆள் கொடுத்து உதவினீர்கள் என்று கேள்விப்பட்டேனே? அது பொய்யா?"

குந்தவை பல்லினால் உதட்டைக் கடித்துக் கொண்டாள். பார்ப்பதற்கு முல்லை மொக்கைப் போல் பல் வரிசை அழகாயிருந்தாலும் கடிக்கப்பட்ட உதடுகளுக்கு வலிக்கத்தான் செய்தது. நல்லவேளையாக "நாவலோ நாவல்!" என்னும் பெருங் கோஷம் அச்சமயம் எழுந்தபடியால் அந்தப் பேச்சு அத்துடன் தடைப்பட்டது.

ஃ ஃ ஃ

சுந்தர சோழரின் வண்மையும் வனப்பும் ஆயுளும் அரசும் வாழ்கென வாழ்த்திவிட்டு நாடகம் முடிவடைந்தது. சபையோர் கலைந்து ஆனந்தக்

---

*இந்த நாளில் உற்சாகத்தையும் ஆதரவையும் காட்டுவதற்கு ஜனங்கள் ஜயகோஷம் செய்வதுபோல் அக்காலத்தில் "நாவலோ நாவல்!" என்று சத்தமிடுவது வழக்கம்.

குதூகலத்தினுல் ஆடிக் கொண்டு தத்தம் வீடு சென்ருர்கள். சிற்றரசர்களின் தேவிமார்களும் அவர்களுடைய பரிவாரங்களும் சென்ருர்கள். பின்னர், சக்கரவர்த்தினி வானமகா தேவியும் மற்றுமுள்ள அரண்மனைப் பெண்டிரும் சோழகுல தெய்வமான துர்க்கையம்மன் ஆலயத்துக்குப் புறப்பட்டார்கள்.

சுந்தர சோழர் உடல் நலம் எய்தும்படி மலையமானின் புதல்வி பல நோன்புகள் நோற்று வந்தார். துர்க்கை அம்மன் கோயிலுக்கு அடிக்கடி சென்று அவர் பிரார்த்தனை செலுத்துவதுண்டு. நவராத்திரி ஒன்பது நாள் ராத்திரியும் துர்க்கை அம்மனுக்கு விசேஷ பூஜைகள் நடந்தன. சக்கரவர்த்தியின் சுகத்தைக் கோரிப் பலிகள் இடப்பட்டன. ஒவ்வொரு நாள் இரவும் மகாராணி கோயிலுக்குச் சென்று அர்த்தஜாம பூஜைக்குப் பிறகு திரும்புவது வழக்கம். அரண்மனையின் மூத்த பெண்டிர் பலரும் மகாராணியுடன் ஆலயத்துக்குச் செல்வார்கள்.

இளம் பெண்களைத் துர்க்கை சந்நிதிக்கு அழைத்துப் போகும் வழக்கமில்லை. பூசாரிகள் மீது சில சமயம் சந்நதம் வந்து அகோரமாக ஆடுவார்கள். சாபம் விளைந்த வரலாறுகளைச் சொல்லுவார்கள். இளம் பெண்கள் பயப்படக் கூடும் என்று அழைத்துப் போவதில்லை.

ஆனுல் இளைய பிராட்டியிடம் ''நீ பயந்து கொள்வாய்!'' என்று சொல்லி நிறுத்த யாருக்குத் தைரியம் உண்டு? அந்த ஒன்பது தினமும் தாய்மார்களுடன் குந்தவையும் துர்க்கை கோயிலுக்குச் சென்று அம்மனுக்குப் பிரார்த்தனை செலுத்தி வந்தாள். இச்சமயங்களில் வானதி தனியாக அரண்மனையில் இருக்க வேண்டி நேர்ந்தது.

பராந்தக தேவர் நாடகம் நடந்த அன்று இரவு வானதியின் உள்ளம் உற்சாகத்தினுல் பூரித்திருந்தது. தன் குலத்து முன்னேர்கள் செய்த வீரச் செயல்களை அரங்க மேடையில் பார்த்து அவளுக்குப் பெருமிதம் உண்டாகியிருந்தது. அத்துடன் இலங்கை நினைவும் சேர்ந்து கொண்டது. ஈழப் போரில் இறந்த தன் தந்தையின் நினைவும், தந்தையின் மரணத்துக்குப் பழி வாங்கி வரச் சென்றிருக்கும் இளவரசரின் நினைவும் இடைவிடாமல் எழுந்தன. தூக்கம் சிறிதும் வரவில்லை. கண்ணிமைகள் மூடிக் கொள்ள மறுத்தன. இளைய பிராட்டி ஆலயத்திலிருந்து திரும்பி வந்து அன்றைய நாடகத்தைப் பற்றி அவருடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தால் பிறகு தூக்கம் வரலாம்; அதற்குமுன் நிச்சயமாக இல்லை.

வெறுமனே படுத்துப் புரண்டு கொண்டிருப்பதைக் காட்டிலும் அரண்மனை மேன்மாடத்தில் சற்று உலாவி வரலாமே என்று தோன்றியது. மேன்மாடத்திலிருந்து பார்த்தால் தஞ்சை நகரின் காட்சி முழுதும் தெரியும். துர்க்கை ஆலயத்தைக்கூடப் பார்த்தாலும் பார்க்கலாம். — இவ்விதம் எண்ணிப் படுக்கையை விட்டு எழுந்து சென்ருள். அந்த அரண்மனைக்கு வானதி புதியவள்தான். ஆயினும் மேன்மாட நிலா முற்றத்தைக் கண்டுபிடிப்பது அவ்வளவு ஒன்றும் கஷ்டமாயிராது. நீள நெடுகப் பாதைகளும் இருபுறமும் தூண்களும் தூங்கா விளக்குகளும் இருக்கும்போது என்ன கஷ்டம்?

பாதைகள் சுற்றிச் சுற்றிச் சென்று கொண்டிருந்தன. முன்னிரவில் ஜகஜ்ஜோதியாகப் பிரகாசித்த விளக்குகள் பல அணைந்து விட்டன. சில புகை சூழ்ந்து மங்கலான ஒளி தந்தன. ஆங்காங்கு பாதை மூடுக்குகளில் தாதிமார்கள் படுத்தும் சாய்ந்தும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களை எழுப்பி வழி கேட்க இஷ்டப்படாமல் வானதி மேலும் சென்று கொண்டிருந்தாள். அந்த அரண்மனைப் பாதைகளுக்கு ஒரு முடிவே யில்லை போலத் தோன்றியது.

திடீரென்று ஒரு குரல் கேட்டது. அது தீனமான துயரக் குரலாகத் தொனித்தது. வானதிக்கு ரோமாஞ்சனம் உண்டாயிற்று. உடம்பு நடுங்கியது. அவளுடைய கால்கள் நின்ற இடத்திலேயே நின்றன.

மறுபடியும் அந்த அபயக் குரல்.

''என்னைக் காப்பாற்றுவார் யாருமில்லையா?''

ஆகா! இது சக்கரவர்த்தியின் குரல் போல அல்லவா இருக்கிறது? என்ன ஆபத்தோ தெரியவில்லையே? உடல் நோயின் கோளாறு? அல்லது வேறு ஏதாவது இருக்குமா? சக்கரவர்த்தினி முதலிய மூத்த பெண்டிர் அனைவரும் கோயிலுக்குச் சென்று விட்டார்களே? சக்கரவர்த்திக்குப் பக்கத்தில் யாரும் இல்லாமலா இருப்பார்கள்? ஆயினும் போய்ப் பார்க்கலாம்.

நடுங்கிய கால்களை மெதுவாக எடுத்து வைத்து வானதி மேலும் சில அடி நடந்தாள். குரல் கீழேயிருந்து வருவதாகத் தோன்றியது. அந்த இடத்தில் பாதையும் முடிந்தது. குனிந்து

கல்கி ஏப்ரல் 13ல் புத்தாண்டு மலரில்

கு. அழகிரிசாமி எழுதும்

தீராத விளையாட்டு



சமூக நாவல் ஆரம்பம்

— மற்றும் —

ராஜாஜியின் ராமாயணம்
—இதற்கு ஓவியர் வினு அளிக்கும் வண்ணமடல்

★

அம்புலிக்கு அப்பால் ..
—சித்திரத் தொடர்கதை

★

பெர்க்லி கல்கி சிறுகதைப் போட்டி
—முதல் பரிசு ரூ. 1000/- பெறும் சமூகச் சிறுகதை

★

இலக்கியத் திறனாய்வு—
முதல் பரிசு பெறும் கல்லூரி மாணவரின் கட்டுரை

★

அதிக பக்கங்கள்

விலை : 40 காசு

பார்த்தால் கீழே ஒரு விசாலமான மண்டபம் தெரிந்தது. ஆகா! சக்கரவர்த்தியின் சயனக்கிருஹம் அல்லவா இது? ஆம்; அதோ சக்கரவர்த்தி தான் படுத்திருக்கிறார்; தன்னந் தனியாகப் படுத்திருக்கிறார். மேலும் ஏதோ அவர் புலம்புகிறார். என்னவென்று கேட்கலாம்.

"அடி பாவி! உண்மைதானடி! நான் உன்னைக் கொன்று விட்டது உண்மை தான்! வேண்டுமென்று கொல்லவில்லை. ஆனாலும் உன் சாவுக்கு நான்தான் காரணம். அதற்கு என்ன செய்யச் சொல்கிறாய்? வருஷம் இருபத்தைந்து ஆகிறது. இன்னமும் என்னை விடாமல் சுற்றுகிறாயே? உன் ஆத்மாவுக்குச் சாந்தி என்பதே கிடையாதா? எனக்கும் அமைதி தரமாட்டாயா? என்ன பிராயச்சித்தம் செய்ய வேண்டுமோ, சொல்! அந்தப்படி செய்து விடுகிறேன். என்னை விட்டு விடு!.... ஐயோ! என்னை இவளுடைய கொடுமையிலிருந்து விடுவிப்பார் யாருமில்லையா? எல்லாரும் என் உடல் நோய்க்கு மருந்து தேடுகிறார்களே! என் மன நோயைத் தீர்த்துக் காப்பாற்றுவார் யாரும் இல்லையா!.... போ! போ! போய்விடு!.... இல்லை, போகாதே! நில்! நான் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லி விட்டுப் போ! இப்படி மௌனம் சாதித்து என்னை வதைக்காதே! வாயைத் திறந்து ஏதாவது சொல்லி விட்டுப் போ!"

இந்த வார்த்தைகள் வானதியின் காதில் இரும்பைக் காய்ச்சி விடுவது போல் விழுந்தன. அவளுடைய உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் குலுங்கியது. தன்னையறியாமல் கீழே குனிந்து பார்த்தாள். மண்டபத்தில் நாலாபுறமும் அவளுடைய பார்வை சென்ற வரையில் பார்த்தாள்.

சக்கரவர்த்திக்கு எதிரில் சற்றுத் தூரத்தில் ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது. அது பெண்ணின் உருவம். பாதி உருவந்தான் தெரிந்தது. பாக்கிப் பாதி தூண் நிழலிலும் அகில் புகையிலும் மறைந்திருந்தது. தெரிந்த வரையில் அந்த உருவம்... ஆ! பழுவூர் இளைய ராணியைப் போல அல்லவா இருக்கிறது? இது என்ன கனவா! சித்தப் பிரமையா? இல்லை! உண்மையேதான்! அதோ அந்தத் தூண் மறைவில் ஒளிந்து நிற்பது யார்? பெரிய பழுவேட்டரையர் அல்லவா? சந்தேகமில்லை! அவர்கள் தான்! பழுவூர் இளைய ராணியைப் பார்த்து விட்டா சக்கரவர்த்தி அப்படியெல்லாம் பேசுகிறார்? "உன்னைக் கொன்றது உண்மைதான்" என்று அலறினாரே, அதன் பொருள் என்ன?....

திடீரென்று வானதிக்கு மயக்கம் வரும் போலிருந்தது; தலை சுற்றத் தொடங்கியது. இல்லை, அந்த அரண்மனையே சுற்றத் தொடங்கியது. சீச்சீ! இங்கே மயக்கமடைந்து விழக் கூடாது. கூடவே கூடாது.

பல்லைக் கடித்துக் கொண்டு வானதி அங்கிருந்து சென்றாள். ஆனால் திரும்பிச் செல்லும் பாதை தொலையாத பாதையாயிருந்தது. அவள் படுத்திருந்த அறை வரவே வராது போல் தோன்றியது. முடியாது; இனி மேல் நடக்க முடியாது; நிற்கவும் முடியாது......

குந்தவைப் பிராட்டி கோயிலிலிருந்து திரும்பி வந்த போது வானதி அவள் அறைக்குச் சற்றுத் தூரத்தில் நடைபாதையில் உணர்வற்றுக் கட்டை போல் கிடப்பதைக் கண்டாள். **(தொடரும்)**

சந்தா நேயர்களுக்கு...



ஒவ்வொரு கல்கி இதழும் குடும்பத்தில் உள்ள நாலைந்து பேர்களால் படிக்கப்படுவதுடன் பக்கத்து வீட்டிலும் எதிர் வீட்டிலும் உள்ளவர்களையும் மகிழ்விக்கிறது.

பல பேர்கள் கல்கியைப் படிக்கும்போது அது நைந்து போகாமல் பத்திரமாகப் பாதுகாக்க உதவும் வகையில் உயர்ரக பிளாஸ்டிக் மேலட்டை ஒன்று தயாரித்திருக்கிறோம். இந்தப் பிளாஸ்டிக் அட்டையை ஓரிதழிலிருந்து அடுத்த கல்கி இதழுக்கு மாற்றிக் கொள்ளலாம். கல்கியின் ஆதரிச தெய்வமான விநாயகப் பெருமானின் சிறு திருவுருவத்தைத் தாங்கி அழகுறப் பொலியும் இம் மேலட்டையைக் கல்கி காரியாலயத்துக்கு ஓராண்டுச் சந்தா ரூபாய் இருபதை அனுப்பி வைப்பவர்கள் இலவசமாகப் பெறலாம்.

இச் சலுகை ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தொடங்கி மே இறுதி வரை நீடிக்கும். இக் கால கெடுவுக்குள் ஏற்கெனவே சந்தாதாரர்களாக உள்ளவர்களும் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளலாம். அவர்கள் சந்தா எந்த இதழிலிருந்து முடிகிறதோ அந்த இதழிலிருந்து ஓராண்டுக்குச் சந்தா நீடிக்கப்படும்.

மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை-31 என்ற விலாசத்துக்குச் சந்தா அனுப்ப வேண்டும்.


"புதிய லவ் அ∴பேர்" ஒரு கோயா தயாரிப்பு
TALC
Love Affair
எழில் பொங்கும் பருவ மங்கைக்கு!
லவ் அ∴பேர்—ஒரு கோயா தயாரிப்பு.
உணர்ச்சியைத் தூண்டும் உயரிய சுகந்தம்!
சிங்காரத்தின் சிகரம்! பருவ மங்கையரின் வசீகரத்திற்கு
சிறந்ததொரு வாய்ப்பு! காதல் பறவையென
கவர்ச்சி கொள்ளும் நறுமணம்! இதுவே கோயாவின்
"லவ் அ∴பேர்"! இதர மூன்று கோயா தினுசுகள்:
மனோகரமான பிளாக்ரோஸ், புது மலர் மணமுள்ள
கார்மனியா, பரவசப்படுத்தும் பாஸ்போர்ட்.
உங்களை நாள் முழுவதிலும் குளுமையுடன்,
புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கும்.
இந்த நறுமணப் பொடிகளைத் தயாரிப்போர்:
கோயா
பாரிஸ் . லண்டன் . நியூயார்க்
அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)
AGC-7 TAM

மகாபாரதம்

ராஜாஜி

100. பொறாமை

பீஷ்மருக்காக ஜலக்கிரியை செய்து விட்டுத் துயரத்தில் மூழ்கிக் கிடந்த யுதிஷ்டிரனுக்கு வியாசர் ஒரு கதையைச் சொல்கிறார்.

எப்பேர்ப்பட்ட மனிதனையும் எவ்வளவு பெரிய அறிவாளியையும், பொறாமை என்பது கெடுத்துவிடும். பிரகஸ்பதி தேவர்களுக்கே உபாத்தியாயர். சகல வேதங்களும் சாஸ்திரங்களும் படித்தவர். அவரும் இந்தப் பொறாமையினால் ஒரு தடவை பீடிக்கப்பட்டு அவமானப்பட்டார்.

பிரஹஸ்பதிக்கு ஒரு தம்பி இருந்தார். அவர் பெயர் சம்வர்த்தர். அவரும் ரொம்பப் படித்தவர். நல்லவரும்கூட. இதனால் அவர் மேல் பிரஹஸ்பதிக்குப் பொறாமை. நல்லவர்கள் பேரில் ஏன் இவர்கள் நல்லவர்களாக இருக்கிறார்கள் என்றே உலகத்தில் பொறாமை ஏற்படுகிறது. இது விசித்திரமேயாயினும், உண்மை! சம்வர்த்தரைப் பல விதத்தில் உபத்திரவம் செய்தார். தமையனாரின் தொந்தரவு மிதமிஞ்சிப் போனபடியால் அதனின்று தப்பிப் பிழைப்பதற்குச் சம்வர்த்தர் பைத்தியக்காரனைப் போல் நடித்து ஊர் ஊராகத் திரிந்து கொண்டு காலம் கழித்து வந்தார்.

இக்ஷ்வாகு வம்சத்தைச் சேர்ந்த மருத்தன் என்ற அரசன் கைலாசநாதரைக் குறித்துக் கடுந்தவம் செய்து இமயமலையில் ஓரிடத்தில் குவிந்து கிடந்த பொன் குவியலை வரமாகப் பெற்று, அதைக் கொண்டு ஒரு பெரிய யாகம் செய்ய ஆரம்பித்தான். அந்த யாகத்தை நடத்திக் கொடுக்கும்படி பிரஹஸ்பதியைக் கூப்பிட்டான். மருத்த ராஜா, யாகத்தைச் செய்து அதிகப் பெருமை அடைந்து விடுவான் என்று தேவர்களின் சார்பாக பிரஹஸ்பதி பயப்பட்டு, யாகத்தை நடத்திக் கொடுக்க வரமாட்டேன் என்று சொல்லி விட்டார். அதன் மேல் மருத்தராஜா எப்படியோ விசாரித்துச் சம்வர்த்தரைக் கண்டு பிடித்து அவரை யாகம் நடத்தக் கேட்டுக் கொண்டான். அவர் முதலில் மறுத்தும் பிறகு ஒப்புக் கொண்டார். இதன்மேல் அவரிடம் பிரஹஸ்பதிக்குப் பொறாமை இன்னும் அதிகமாயிற்று.

''எனக்குப் பகைவனான இந்தச் சம்வர்த்தன் மருத்தனுடைய யாகத்தைச் செய்யப் போகிறான்'' என்று பிரஹஸ்பதி எண்ணி எண்ணி அந்தப் பொறாமையினால் மிக இளைத்துப் போனார். நிறம் மாறி வெளுத்துப் போய்ப் பரிதாப நிலையடைந்தார்.

தேவர்களுக்கெல்லாம் ராஜாவான இந்திரன் தேவர்களின் புரோகிதரான பிரஹஸ்பதியிடம் வந்து, ''சுவாமி! ஏன் இளைத்து இருக்கிறீர்? சுகமாகத் தூங்குகிறீரா? பணியாளர்கள் உம்மைச் சரியாக விசாரித்து வருகிறார்களா? ஏவப்படாமல் உங்களுக்கு வேண்டியது எல்லாம் குறிப்பறிந்து செய்கிறார்களா? தேவர்கள் எல்லாம் உம்மிடம் சரியாக நடந்து வருகிறார்களா? அல்லது ஏதாவது குறை நேர்ந்ததா?'' என்று இந்திரன் கவலைப்பட்டு விசாரித்தான்.

இதற்குப் பிரஹஸ்பதி, ''தேவராஜனே, நல்ல படுக்கையில் சரியாகத்தான் படுக்கிறேன். பரிசாரகர்களும் அன்புடன்தான் விசாரிக்கிறார்கள். தேவர்கள் பரிபாலனையில் ஒரு குறைவுமில்லை'' என்று சொல்லிய பிறகு, மேலே பேச்சுக் கிளம்பாமல் போயிற்று. துக்கம் பேச்சை அடக்கி விட்டது.

''ஏன் துக்கப்படுகிறீர்கள்? ஏன் நிறம் வெளுத்து உடம்பு இளைத்திருக்கிறீர்கள்?'' என்று இந்திரன் அன்புடன் கேட்டான்.

பிரஹஸ்பதி விஷயத்தைச் சொன்னார்: ''சம்வர்த்தன் பெரிய யாகம் செய்யப் போகிறான். அதனால்தான் இப்படி இளைத்துப் போனேன்'' என்றார்.

இந்திரன் ஆச்சரியப்பட்டான்.

''பிராமணரே, நீர் எல்லா இஷ்டங்களையும் அடைந்திருக்கிறீர். தேவர்களுக்கே புரோகிதராகவும் யோசனை சொல்லும் மகாபுத்திமானாகவும் இருக்கிறீர். சம்வர்த்தரால் உமக்கு என்ன தீமை உண்டாகக் கூடும்? ஒன்றும் இல்லையே? ஏன் பொறாமைப்பட்டு வீணாகக் கஷ்டப்படுகிறீர்?'' என்றான்.

இந்திரன் யோக்கியதைக்கு இவ்வாறு பிரஹஸ்பதிக்கு ஞானோபதேசம் செய்யப் போனான்! இந்திரனுடைய

பழைய கதைகளையெல்லாம் பிரஹஸ்பதி எடுத்துக் காட்டி, ''உன்னுடைய பகைவன் விருத்தி அடைகிறான் என்பதைக் கேட்டு நீ சும்மா இருப்பாயா? அப்படித்தானே நானும்? எவ்விதமாவது இந்த சம்வர்த்தனை அடக்கி என்னை நீ காப்பாற்ற வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்.

இந்திரன் அக்னியைக் கூப்பிட்டு, ''நீ போய் அந்த மருத்த ராஜாவின் யாகத்தை எப்படியாவது நிறுத்திவிட வேண்டும்'' என்று சொல்லியனுப்பினான்.

அக்கினித் தேவன், ''சரி! செய்கிறேன்'' என்று சொல்லிச் சென்றான். அக்கினியைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? போகும் வழியில் மரங்களையும் கொடிகளையும் எரித்து உலகம் நடுங்கப் பெரும் கர்ஜனை செய்து கொண்டு சென்றான். அரசனிடம் தேவ சொரூபத்துடன் போய் நின்றான். அக்கினித் தேவன் தன்னிடம் வந்ததைக் கண்டு ராஜாவுக்குப் பேரானந்தம் பொங்கிற்று. ''கொண்டுவா ஆஸனம், அர்க்கியம், பாத்தியம், பசு!'' என்று ஆட்களுக்கு உத்தரவிட்டான்.

அக்கினித் தேவன் வந்த காரியத்தைத் தெரியப்படுத்தினான். ''நீ இந்த சம்வர்த்தரை விட்டுவிடு. வேண்டுமானால் உனக்குப் புரோகிதராக நான் பிரஹஸ்பதியையே கொண்டு வருகிறேன்'' என்றான். கூட இருந்த சம்வர்த்தர் இதைக் கேட்டுக் கடுஞ்சினம் கொண்டார். அவர் சாஸ்திர நியமனப்படி பிரம்மச்சரியத்தை அனுசரித்து அபரிமிதமான சக்தியை அடைந்திருந்தவர்.

''இந்தப் பேச்சை நிறுத்து. நான் கோபம் கொண்டு என்னுடைய கண்களினால் உன்னை எரித்து விடுவேன். ஜாக்கிரதை!'' என்றார் சம்வர்த்தர்.

பிரம்மசர்யம் நெருப்பையே எரிக்கும் தன்மையது.

சம்வர்த்தர் சொன்னதைக் கேட்டு அக்கினிப் பகவான் பயத்தினால் அரச மரத்து இலையைப் போல் நடுங்கி இந்திரனிடம் திரும்பிப் போய் நடந்ததைச் சொன்னான்.

தேவராஜன் இந்தக் கதையை நம்பவில்லை.

''அக்கினியே! நீதான் மற்றவர்களை எரிக்கிறாய். உன்னை வேறொரு



வன் பஸ்பமாகச் செய்யவாவது ? இதென்ன வேடிக்கை !'' என்றான்.

'' அப்படியில்லே, தேவராஜனே ! பிரம்ம பலமும் பிரம்மச்சரியத்தின் சக்தியும் உனக்குத் தெரியாது !'' என்று அக்கினித் தேவன் முன் காலத்தில் இந்திரனுக்குப் பிராமணர்களிடம் ஏற்பட்ட அவதிகளை யெல்லாம் குத்திக் காட்டி ஞாபகப்படுத்தினான்.

பிறகு இந்திரன், அக்கினியை விட்டு விட்டு ஒரு கந்தர்வனைக் கூப்பிட்டு, ''நீ மருத்தனிடம் என் தூதனாகப் போய் சம்வர்த்தரை விட்டு விடச் சொல். இல்லாவிடில் என்னுடைய பகையைப் பெற்று அழிந்து போவான் என்று அந்த அரசனுக்குச் சொல்'' என்றான்.

அப்படியே அந்தக் கந்தர்வ தூதனும் மருத்தராஜனிடம் சென்று இந்திரன் சொன்னதைத் தெரியப்படுத்திப் பயமுறுத்தினான்.

இராஜன் கேட்கவில்லே. '' மித்திரத் துரோகம் மகா பாவம். நாம் சம்வர்த்தரை விட்டுவிட முடியாது'' என்றான்.

அதைக் கேட்டுக் கந்தர்வன், ''அரசனே ! இந்திரன் உன் மேல் வஜ்ராயுதம் வீசினால் நீ எவ்வாறு பிழைக்கப் போகிறாய்?'' என்றான்.

இவ்வாறு சொல்லும் போதே ஆகாயத்தில் இந்திரனுடைய இடி முழக்கம் கேட்டது.

இந்திரன் யுத்தத்துக்கு வந்துவிட்டான் என்று அரசன் மிகவும் பயந்து சம்வர்த்தரிடம் சரண் புகுந்தான்.

சம்வர்த்தர், ''பயப்படாதே'' என்று அரசனுக்கு அபய வார்த்தை சொல்லித் தம் தபோ பலத்தைப் பிரயோகித்தார். யுத்தம் செய்ய வந்த இந்திரன் அடங்கி ஒடுங்கிச் சாந்த வடிவமாக யாகத்திலும் கலந்து கொண்டான். அவியும் பெற்றுப் போனான். பிரஹஸ்பதியின் பொறாமைப் பிரயத்தனம் வீணாயிற்று. பிரம்மச்சரியம் வென்றது.

பொறாமை என்பது பொல்லாத பாவம். யாரையும் அது தீண்டும். சரஸ்வதியே தோல்வியடையும் படிப்பைப் பெற்ற பிரஹஸ்பதியும்கூடப் பொறாமைக்கு இரையானான். சாதாரண மனிதர்களைப் பற்றிக் கேட்க வேண்டுமா ?

101. உதங்கர்

பாண்டவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு கிருஷ்ணர் துவாரகைக்குப் போகும் வழியில் உதங்கர் என்ற பிராமண சிரேஷ்டரைச் சந்தித்தான். அவரைக் கண்டதும் தேரை நிறுத்தி இறங்கி நமஸ்காரம் செய்து பூஜித்தான். அவரும் கண்ணனுக்கு மரியாதை செய்து விட்டு, ''மாதவ ! பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் சகோதரர்களுக்குள் இருக்க வேண்டிய அன்பு சரியாக இருந்து வருகிறதா ? எல்லோரும் சுகமாயிருக்கிறார்களா ?'' என்று கேட்டார்.

துறவி வாழ்க்கையிலிருந்த பிராமணருக்கு உலக நிகழ்ச்சிகள் ஒன்றுமே எட்டவில்லே. யுத்தம் நடந்ததே அவருக்குத் தெரியவில்லே. அவருடைய கேள்வியைக் கேட்டுக் கண்ணன் ஒரு நிமிஷம் திகைத்தான். என்ன சொல்வது என்று தோன்றாமல் நின்றான். பிறகு, '' ஐயா ! கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் கோரமான யுத்தம் நடந்து விட்டது. சமாதானம் செய்ய நான் எவ்வளவோ முயன்றேன். அவர்கள் கேட்கவில்லே. யுத்தத்தில் அனைவரும் மாண்டார்கள். விதியை யாரும் மீற முடியாது'' என்று சொல்லி நடந்த வரலாற்றையெல்லாம் சொன்னான்.

இதைக் கேட்டதும் உதங்கர் கோபாவேசமானார். கண்கள் சிவந்து போய் மாதவனைப் பார்த்துச் சொன்னார் :

'' வாசுதேவா ! நீ பக்கத்தில் இருந்தும் இவ்வாறு ஆயிற்றா? அவர்களைக் காப்பாற்றாமல் போனாய். நீ கபடமாக வேலை செய்து அவர்கள் அழிந்து போக விட்டு விட்டாய். நான் உனக்குச் சாபம் தரப் போகிறேன்'' என்றார்.

வாசுதேவன் புன்னகை புரிந்து, ''சாந்தம் ! சாந்தம் ! தபஸ்வியான நீர் உம்முடைய தவத்தின் பயனைக் கோபத்தில் இழந்து விடாதீர். முதலில் நான் சொல்லுவதைக் கேளும். பிறகு வேண்டுமானால் சாபத்தைக் கொடும்'' என்று சமாதானப்படுத்தினான்.

கண்ணன் உதங்கருக்கு ஞானக் கண் கொடுத்துத் தன் விசுவரூபத்தைக் காட்டினான். ''உலகத்தைக் காப்பதற்காகவும் தருமத்தை நிலைநிறுத்துவதற்காகவும் பல பிறவிகள் நான் எடுத்து வருகிறேன். நான் எந்த அவதாரத்தை எடுக்கிறேனே அந்த அவதாரத்தின் தருமத்தை அனுசரிக்கிறேன். தேவ ஜாதியில் பிறக்கும் போது தேவனைப் போல் எல்லாவற்றையும் செய்வேன். யக்ஷனாகவோ ராக்ஷதனாகவோ பிறந்தால் யக்ஷனைப் போலவும் ராக்ஷதனைப்

போலவும் எல்லாக் காரியங்களையும் செய்வேன். மனிதனாகப் பிறந்தாலும் மிருகமாகப் பிறந்தாலும் அவ்வாறு அந்த அவதாரத்துக்கு இசைந்தவாறே காரியத்தை முடிப்பேன். அவிவேகிகளான கௌரவர்களைக் கெஞ்சினேன். அவர்கள் அகங்காரத்தில் மதிமயங்கி என்னுடைய வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. பயமுறுத்திப் பார்த்தேன். அதற்கும் அவர்கள் இணங்கவில்லை. கோபம் கொண்டு என் விசுவரூபத்தையும் அவர்களுக்குக் காட்டினேன். அதுவும் வீணாயிற்று. அவர்கள் அதருமத்தைச் செய்வதிலேயே பிடிவாதமாக இருந்தார்கள். யுத்தத்தில் பிரவேசித்து உயிர் நீத்தார்கள். பிராமண சிரேஷ்டரே ! என் மேல் உமக்குக் கோபத்துக்குக் காரணம் இல்லை '' என்றான்.

உதங்கர் சாந்தம் அடைந்தார். அதைக் கண்டு கண்ணன் மகிழ்ந்து, ''உமக்கு ஒரு வரம் தர விரும்புகிறேன். எதையேனும் கேளும்'' என்றான்.

'' அச்சுதா ! உன்னை நான் பார்த்ததும் உன் விசுவரூபத்தைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றதும் போதாதா ! எனக்கு வேறொரு வரமும் வேண்டாம்'' என்று உதங்கர் சொன்னார்.

ஆனால் கண்ணன் மறுபடியும் வற்புறுத்தவே, பாலைவனத்தில் திரிபவரும் ஆசையற்றவருமான உதங்கர், — ''பிரபுவே! அவசியம் எனக்கு ஏதேனும் கொடுக்க நீர் விரும்பினால் நான் எவ்விடத்தில் எப்போதேனும் தாகத்துக்குத் தண்ணீர் வேண்டினால் அது கிடைக்குமாறு வரம் தருவாயாக'' என்றார். ''இவ்வளவுதானா ?'' என்று கண்ணன் சிரித்து, ''அப்படியே ஆகட்டும் !'' என்று சொல்லி விட்டுத் துவாரகை சென்றான்.

பிறகு ஒரு நாள் உதங்கர் தாகம் மிகுந்து தண்ணீருக்காகக் காட்டில் இங்குமங்கும் அலைந்து கிடைக்காமல் அச்சுதனை நினைத்தார் ! உடனே ஒரு புலையன் தோன்றினான். அவன் உடம்புக்குப் போதிய ஆடையில்லை. உடுத்தியிருந்த கந்தல் துணியும் அழுக்குப் படிந்து அவலக்ஷணமாக இருந்தது. கூட நான்கு ஐந்து வேட்டை நாய்கள். கையில் வில், தோளில் ஒரு பை, அந்தத் தோல் பையில் குடி தண்ணீர்.

புலையன் நகைத்துக் கொண்டு உதங்கரைப் பார்த்து, ''தாகத்தால் வருந்துகிறீர் போலும் ! உம்மைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. ஜலம் பெற்றுக் கொள்ளும்'' என்று தோற்பையின் மூங்கிற் குழாயை நீட்டினான்.

(தொடரும்)



போகும் போது ஊறுகாய்; வரும் போது காமிரா!







கொரிப்பதற்குக் கொஞ்சம்

கடல் கடந்து அயல் நாடு போவதென்பது சாஸ்திர விரோதமாகக் கருதப்பட்ட காலத்தில், அப்படிப் போய் வந்தவர்களை ஏதோ அதிசயப் பிராணிகளைப் போலப் பார்த்து வந்தார்கள். ஆனால் இன்றோ வெளி நாடுகளுக்குப் போகாமல் — போவதற்கு வாய்ப்புக் கிடைக்காமல்— இருப்பவர்களைத்தான் அப்படிப் பார்க்கிறார்கள்.

தொழிலதிபர்கள் வியாபார விஷயமாகவும், எழுத்தாளர்கள் அந்தந்த நாடுகளின் விசேஷ அழைப்பின் பேரிலும் அயல் நாடு போகிறார்களென்றால், அரசாங்க அதிகாரிகள் வர்த்தக அல்லது கலாசார அல்லது நல்லெண்ணத் தூதுக் கோஷ்டிகளில் தொற்றிக் கொண்டு விடுகிறார்கள். அரசியல்வாதிகள் சிலருக்கும் இப்படிப்பட்ட அதிர்ஷ்டம் அடிப்பது உண்டு. அதாவது, அவர்களுடைய வாயை அடைப்பதற்காக அரசாங்கமே முன்வந்து சில அரசியல்வாதிகளை இவ்வாறு தூதுகோஷ்டிகளில் சேர்த்து விடுவது உண்டு!

அயல் நாடுகளுக்குப் போய்விட்டு வந்தால் மாத்திரம் போதாது. அங்கே தமக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கதை போலச் சொல்லும் திறமை வேண்டும். சிலருக்கு மட்டுமே கைவந்த கலை அது. ''வா கார்டியா ஏர்போர்ட்டிலே எனக்கு மூணு நாற்பதுக்குப் பிளேன்... நான் அங்கு போய்க் காரிலேயிருந்து இறங்குகிற போது மணி நாலேகால்...சரி, இன்றைக்கு நம்ம பாடு திண்டாட்டம் தான்னு நெனைச்சேன்... ஆனால் பாருங்கோ, அந்தப் பிளேன் **எனக்காகக்** காத்துக் கொண்டிருந்தது...! ஆமாம். சார்னா!... நான் ஸ்டேட் டிபார்ட்மெண்ட் விருந்தாளி ஆயிற்றே!...'' என்று தம்முடைய பெருமையையும் தமக்கு அளிக்கப்பட்ட மரியாதைகளையும் சிலர் எல்லோரிடமும் சொல்லிச் சொல்லிப் பூரித்துப் போவார்கள். சிலர் சொல்வதையெல்லாம் கேட்கும்போது அந்தந்த நாடுகளில் இவர்களைத் தவிர வேறு யாருமே பெரிய மனிதர்கள்

இல்லை போலிருக்கிறது என்கிற பிரமை நமக்கு உண்டாகும். 'பிளேனை நிறுத்தினன்', 'காரை இருநூற்றைம்பது மைல் வேகத்தில் ஓட்டினன்', 'தனியாக ரயில் விட்டான்' என்று கூசாமல் சொல்பவர்களும் உண்டு.

அயல் நாடுகளுக்குப் போய் வந்ததைப் பற்றிப் பேசாமல் இருப்பவர்கள் அபூர்வம். சிலர் வெகு அடக்கமாக — நாமாகக் கேட்டால் தவிர— எதுவும் சொல்லாமல் இருந்து விடுவார்கள். இப்படி இருக்க வேண்டும் என்று நண்பர் ஒருவருக்கு ஆசை ஏற்பட்டது. எனவே, தாம் பார்க்க நேருகிற அத்தனை பேர்களிடமும் ''என்ன சார் பிரமாத ஃபாரின் டிரிப்! நானும்தான் போய்விட்டு வந்தேன். யாரிடமாவது வாயைத் திறக்கிறேனு பாருங்கள்... ஜப்பானிலே கற்றுக் கொண்ட பாடம் சார் இது!...'' என்று ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்தார்!

உலகத்தை அரைச்சுற்றோ அரைக்கால் சுற்றோ சுற்றிவிட்டுத் திரும்பி வந்தவுடன் முக்கால்வாசிப் பேர்வழிகளுக்குப் பலவிதமான வியாதிகள் வந்துவிடும். மூன்று மாதம் முன்பு வரையில் தரையில் உட்கார்ந்து வெண்டைக்காய் மோர்க் குழம்பையும் பருப்பு உசிலியையும் சாப்பிட்டவர்களுக்குக் குனிந்து உட்கார முடியாமல் போய் விடும். மேஜையில்தான் சாப்பிடுவதென்று தீர்மானிப்பார்கள். 'பிரெட்-டோஸ்ட்', 'கட்லெட்', 'புட்டிங்' இவற்றுக்குத் தாவுபவர்களும், ''உருளைக் கிழங்கு போண்டாவா?... எத்தனை கலோரி?...'' என்று கேட்பவர்களும் கூட இருக்கிறார்கள்.

வேறுசிலருக்கு நாவிலே கோளாறு ஏற்பட்டுவிடும். ''யா!'', ''ஹாய்!'' ''பாஷ்!'', ''காட்டாம்!'', ''கில்லிட்!'' என்று இவர்கள் அடிக்கடி சொல்லி ஆனந்தப்பட்டுக் கொள்வதுடன், தாய்மொழியையும் கொச்சையாக அயல் நாட்டுக்காரர் போல் பேசி வைப்பார்கள்.

நம் ஊருக்கு வந்த பிறகு ரொம்பப் பேருக்கு இந்த நாடு மட்டமானதாகவும், இந்த நாட்டு ஆசாமிகள் காட்டுமிராண்டிகளாகவும் காட்சியளிப்பார்கள். சிலருக்கு மட்டும் இந்த நாட்டை விட உயர்ந்த நாடு ஈரேழு பதினன்கு உலகங்களிலும் இல்லை என்கிற உணர்வு பிறக்கும். ''அமெரிக்காவிலே டிஸ்டாஸ்டஸ் என்கிற தொழிற்சாலையிலே நிமிஷத்துக்கு நாலு பிளேன்கள் வீதம் வெளியே வருகிறது.... நாம் என்னத்தைப் பண்ணுகிறோம்? குழந்தைகளாகப் பெற்றுத் தள்ளுகிறோம்!'' என்று முதல் பிரிவினர் அலுத்துக் கொண்டால், பிந்தைய ஆசாமிகளோ, ''பாரிஸ் நைட் கிளப்பிலே பார்பரா ஜோன்ஸ் என்ற பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்தேன். பஜகோவிந்தத்திலே வருகிற 'நாரீஸ்தனபர'வின் ஐடியாவை அவளுக்கு எடுத்துச் சொன்னேன். அசந்து போய்விட்டாள். அத்துடன் மறுநாளே தன் வேலையை ரிஸைன் பண்ணி விட்டாள்.... என்ன இருந்தாலும் நம்ம 'ஸ்க்ரிப்சர்ஸ்' மாதிரி வருமா சார்?...'' என்று சொல்வார்கள்.

இதெல்லாம் கிடக்கட்டும்; இன்னொரு முக்கியமான விஷயம். வெளி நாடுகளுக்குப் போகிறவர்கள் இங்கிருந்து போகும்போது பருப்புப் பொடி, பகவத்கீதை, எலுமிச்சங்காய் ஊறுகாய், வடாம், அப்பளம் என்று எதைத் தான் எடுத்துக் கொண்டு போனாலும், திரும்பி வரும் போது ஒரு டிரான்ஸிஸ்டரோ, டேப் ரிகார்டரோ, காமெராவோ, கைக் கடிகாரமோ வாங்காமல் வருவதில்லை. உள்ளூரிலேயே இத்தகைய சாமான்களைக் கள்ள மார்க்கெட்டிலோ கடையிலோ என்ன விலை வேண்டுமானாலும் கொடுத்து வாங்க வசதி இருப்பவர்களும் இப்படிச் செய்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று யோசித்துப் பார்த்தேன்.

வெளி நாடுகளுக்குப் போய் வந்த கதையைச் சொல்லிச் சொல்லிக் கொஞ்ச வருடங்களில் அலுத்துப் போனாலும் போகும். அதற்கப்புறமும் டிரான்ஸிஸ்டரையோ கைக் கடிகாரத்தையோ சுட்டிக் காட்டி, 'ஹாங்காங்கில் வாங்கியது' என்றோ 'டோக்கியோவில் மிட்சுபிஷி கம்பெனிக்கு நான் போயிருந்தபோது அவர்கள் அன்பளிப்பாகக் கொடுத்தது!' என்றோ பெருமையடித்துக் கொள்ள வசதியாக இருக்கும் அல்லவா?


இதுதான் காரணம்! —எஸ். வி ஆர்.



நேற்றும்



நாளையும்



உயர்வோம் ''விரைவோம்'

ராம. ஆவுடையப்பா

பர்மாவில் 'ஸீனியர் கேம்ப்ரிட்ஜ் முடித்தபோது வயது பதினேழுதான். என்ன வேலை என்று தேடுவது? கராச்சியில் விமானம் ஓட்டக் கற்றுக் கொடுப்பதாகக் கேள்விப்பட்டேன். 1928ல் போய்க் கற்றுக் கொண்டேன். இரண்டே பேர் உட்கார்ந்து போகக் கூடிய ஜிப்ஸிமாத் (இதை அப்புறம் டைகர்மாத் என்றார்கள்) பிரிட்டிஷ் கம்பெனித் தயாரிப்பு. அப்போது என் கூடப் பயிற்சி பெற்றவர் ஜே. ஆர். டி. டாடா. இன்னும் இரண்டு பேர் கூடக் கற்றுக் கொண்டனர். அவர்கள் இருவரும் டாடா தொடங்கிய விமானக் கம்பெனியில் சேர்ந்து விட்டார்கள்.

நான் இருபதாயிரம் ரூபாய்க்கு ஒரு விமானம் வாங்கினேன். பினாக்பர்ன் கம்பெனி தயாரித்த புளுபர்ட் மாடல். ஒன்றரை வருஷம் கழித்து மூன்று பேர் உட்காரக் கூடிய புஸ்மாத் வாங்கினேன். பகலிலேதான் பயணம். 19 காலன் பெட்ரோல் போட்டால் டாங்கி வழியும். இருநூறு மைலுக்கு ஒரு முறை தங்கித் தங்கிப் போக வேண்டும்.

விமானி என்று விசேஷ உடை ஒன்றும் அணியவில்லை. காதுக்கு 'இயர்போன்' தேவை. கண்ணுக்கு விசேஷக் கண்ணாடி அணிவேன். அவ்வளவுதான். தரைக்கும் விமானத்துக்கும் 'ஒயர்லெஸ்' தொடர்பு ஒன்றும் இல்லை.

சென்னைப் பட்டணத்தில் பொதுஜனங்களை ஊர் சுற்றிக் காட்ட என் விமானத்தை முதலில் பயன்படுத்தினேன். பலரும் இந்த 'ஜாய்—ரய்ட்' செய்வதில் ஆர்வம் காட்டவே என் விமானத்தை ஊர் ஊராக எடுத்துக் கொண்டு போனேன். 1932லிருந்து ஆறு வருஷ காலம் ரங்கூன், சைகோன், ஹனாய், ஹாங்காங், ஷாங்காய், சிங்கப்பூர், ஜாவா, சுமத்ரா, டிம்மூர் தீவு என்றெல்லாம் என் விமானமும் நானுமாகச் சுற்றின வண்ணம் கழிந்தது.

உல்லாசச் சவாரி தவிர, சர்வே வேலைக்கும் என் விமானம் பயன்பட்டது. கனிப்பொருள் ஆராய்ச்சிக்காக வரும் வெளிநாட்டு நிபுணர்கள் விசேஷக் கருவிகளை வைத்துக் கொண்டு பார்ப்பார்கள். இதற்குத் தாழப் பறக்க வேண்டும், மெதுவாகவும் போகவேண்டும். இதனால் என்ஜின் சீக்கிரம் சூடேறிவிடும். ஒருமுறை சிவகங்கைச் சாலையில் நடு ரோட்டில் விமானத்தை இறக்கி விட்டேன். கூட வந்த அயல் நாட்டு நிபுணர்களோ அடுத்த நாள் சென்னையில் கப்பலைப் பிடிக்கவேண்டும். என்ஜின் சூடாகிவிட்ட என் விமானத்தை நம்பினால் எப்படி என்று, அவர்களை ரயில் ஏற்றிச் சென்னைக்கு அனுப்பி விட்டேன். எத்தனையோ முறை வயல் வரப்பில் எல்லாம் விமானத்தை இறக்கி யிருக்கிறேன். நூறு கஜ தூரம் தெரிந்தால் போதும். இறங்கி விடுவேன்!

விமானப் பயணம் ஒன்றும் அதிகச் செலவில்லை. சொந்த விமானத்தில் மூன்று பேர் பெங்களூர் போக நாற்பது ரூபாய்தான் பிடிக்கும். வேகம் குறைவு. அதனால் விபத்துக்களும் குறைவு. வேகம் குறைவானதால் ஆபத்தில் கட்டுப்படுத்த முடிந்தது. எத்தனையோ முறை ஓட்ட முடியாமல் அங்கங்கே திடீர் என்று இறங்க வேண்டி வந்ததே தவிர, பெரிய விபத்து ஒன்றும் நேரவில்லை.

உலக யுத்தம் வந்தது. அத்துடன் வேக வெறியும் வந்தது. இரவு விமானப் பயணம் வந்தது. அதனால் பல நூதனக் கண்டு பிடிப்புகளும் வந்தன.

'ஜெட்' முறை புதிதல்ல. யுத்தத்துக்கு முன்பே இத்தாலியில் இதைக் கண்டுபிடித்திருந்தனர். நடைமுறைச் செலவு கட்டி வராது என்று விட்டு விட்டார்கள். ஆனால் யுத்த காலத்தில் செலவு ஒரு பொருட்டா, என்ன? ஜெட் விமான ஆராய்ச்சி தீவிரம் அடைந்தது.

முன்பு மணிக்கு 200 மைலுக்கு மேலே போகப் பயம். விமானம் சூடாகிவிடும். நொறுங்கிவிடும். இன்று உலோகத் துறை ஆராய்ச்சி வளர்ந்த காரணத்தால் வேகத்தைத் தாங்கும் தன்மையில் விசேஷ உலோகக் கலவைகள் தயாராகின்றன.

1937ல் ஸிவில் ஏவியேஷன் சட்டம் வந்தது. பல கட்டுப்பாடுகள். பிறகு யுத்தம் வந்ததும் தனியார் யாரும் விமானம் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை. என் விமானத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்டது. யுத்தத்துக்குப் பிறகு வேறொன்று கிடைத்தது.

டாக்டர் ரங்காச்சாரி சொந்தமாக ஒரு விமானம் வைத்திருந்தார். புஸ்மாத். மூவர்

அமரக்கூடியது. அவருக்காக நான் அதைப் பலமுறை ஓட்டி யிருக்கிறேன். முதலில் நெல்லூரில் ஒரு வழக்கில் சாட்சி சொல்லப் போனார். காரைக்குடிக்கும் மதுரைக்கும் சேலத்துக்கும் ஆபரேஷன் செய்ய அதில் போயிருக்கிறார். அவர் காலத்துக்குப் பின் அவர் விமானமும் நெடுநாள் வாழவில்லை!

விமானம் ஓட்டுவது எனக்குக் கஷ்டமாகவே படவில்லை. பட்டணத்துக்குள்ளே கார் ஓட்டுவது போலத்தான். இன்னும் கேட்டால் அதை விடச் சுலபம் என்பேன். குறுக்கே மாடு ஒன்றும் போகாது அல்லவா?

சமீபத்தில் அமெரிக்கா போயிருந்தபோது 200 பவுண்டு எடையேயுள்ள ஹெலிகாப்டர் ஓட்டிப் பார்த்தேன். சைக்கிள் விடுவது போல இருந்தது. லட்சம் தனியார் விமானங்கள் அங்கு இருக்கின்றன.

உயரப் பறக்க வேண்டும், வேகமாக இயங்க வேண்டும் என்பது மனிதனின் இயல்பான ஆர்வம். உடல் அளவில் உயர்ந்தால் போதுமா? உள்ளத்தாலும் உயர வேண்டுமே!



காப்டன் எம். எஸ். நாராயணன்

பெங்களூரில் கல்லூரிப் படிப்பை முடித்து விட்டு பம்பாய் போனேன். எண்ணெய் சுத்திகரிப்பாலையில் கொஞ்ச நாள் வேலை. பிறகு கப்பல் துறையில் பொறி இயல் பயிற்சி பெறத் தொடங்கினேன். தற்செயல் நிகழ்ச்சிகளால் வாழ்க்கைப் போக்கு மாறியது. என் அண்ணனைப் போல் விமான சர்விசில் 'கிரவுண்ட் என்ஜினீர்' ஆவதற்குப் பயிற்சிக்குப் போனேன். அப்போது உபகாரச் சம்பளத்தில் விமான ஓட்டிப் பயிற்சி தருவதாக விளம்பரம் வந்தது. மனுப் போட்டேன். இடம் கிடைத்தது. அலகாபாத்தில் பயிற்சி. 'ஸ்காலர்ஷிப்' என்றாலும் 3500 ரூபாய் நான் தரவேண்டும். நல்ல பயிற்சி. பயிற்சியின் போது தனியாளாக, ஒற்றை எஞ்சின் விமானத்தில் ஒரு நாள் பறந்தேன். குவாலியருக்கு ஏழு மைல் தூரத்தில் எஞ்சின் நின்று விட்டது. இருப்பதோ ஒரே ஒரு இஞ்ஜின். அதுவும் நின்றுவிட்டது. வற்றிப் போன ஏரிக் கரையில் இறங்கினேன். புகழ் பெற்ற கொள்ளைக்காரர் மான்சிங் வாழ்ந்த இடம் அது. எப்படியோ ஏழு மைல் நடந்து குவாலியரை அடைந்தேன்.

விமானத் துறை மிகவும் விரைந்து வளர்ந்திருக்கிறது. பத்து வருஷங்களுக்கு முன்பு இருந்ததைப் போல் இரண்டு பங்கு எண்ணிக்கை பயணிகள். இவர்களில் ஸ்தாபன நிர்வாகிகள் அதிகம். ரயில் செலவு சிக்கனமானாலும், விமானப் பயணத்தால் மேலதிகாரிகளின் நேரம் மிச்சமாகிறது அல்லவா? அதையே பெரிதாகப் பார்க்கிறார்கள். பெண்களும் குழந்தைகளும் வயோதிகர்களும் பயணம் போகிறார்கள். ஒரு காலத்தில் நான் விமானத்தில் போகவே தடை சொல்லி யிருக்கும் என் பாட்டி, இப்போது ஆவலுடன் விமானத்தில் போகிறாள்!

விமானப் பயணம் விபத்தின்றி இயங்க எத்தனை முன்னேற்பாடுகள்! எவ்வளவு தொழில் நுட்பத் திறன்கள்! தரையிலும் விமானத்தின் உள்ளேயும் வைக்கப்பட்டிருக்கும் பல நுட்பமான கருவிகள் பைலட்டுக்கு எத்தனையோ தகவல்களைத் தந்த வண்ணம் இருக்கின்றன.

முன்பு இருந்ததைக் காட்டிலும் தற்போது விமான ஓட்டிகளுக்குக் கடினமான பரீட்சைகள். முதலில் நல்ல படிப்பு எதிர்பார்க்கிறார்கள். கடுமையான பரீட்சைகள். எழுபது சதவிகிதத்துக்கு மேல் மார்க்கு வாங்கியாக வேண்டும். அப்புறம் கடினமான பயிற்சிகள். ஒவ்வொரு புதுரக விமானம் வரும்போதும் சிலர் அவை தயாராகும் இடங்களுக்குப் போய், நேரில் தெரிந்து கொண்டு வந்து, மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுப்பார்கள். இதற்குப் பயிற்சி கேந்திரம் ஹைதராபாத்.

நம் நாட்டில் கமர்ஷியல் பைலட்டுகள் சுமார் ஐந்நூறு பேர் இருப்போம். கல்கத்தாவில் மிஸ் பானர்ஜி என்று ஒரு பெண் பைலட் வேலையில் இருக்கிறார். வேறு சில பெண்களுக்கு விமானம் ஓட்டத் தெரியும். ஆனால் வேலையில் இல்லை.

சென்ற பதின்மூன்று வருஷங்களில் எட்டாயிரம் மணி நேரம் பறந்திருக்கிறேன். 'போர்' அடிக்காத தொழில். தினம் தினம் புதுப் புது மக்களுடன் பழகுகிறேன். புது அனுபவங்களைப் பெறுகிறேன். நேபாள ராஜ தம்பதிகள் தென்னிந்தியா வந்திருந்த போது மூன்று நாட்கள் அவர்களை நான் தான் எங்கும் அழைத்துச் சென்றேன்.

அங்கங்கே 'ஃப்ளையிங் கிளப்' தயாரிக்கும் விமான ஓட்டிகளே நாளடைவில் பெரும்பாலும் கமர்ஷியல் பைலட் ஆகிறார்கள். இது போதாது. விரிந்த அளவில் ஒரு பயிற்சி நிலையம் தொடங்க யோசித்து வருகிறார்கள்.

இந்திய விமானத் தொழில் திறன் பிற நாடுகளுக்கும் பயன்படுகிறது. அரசாங்கம் அவ்வப்போது வேற்று நாடுகளுக்கும் நமது பைலட்டுகளை அனுப்பி வைக்கிறது. விமான உலகில் இந்திய விமான ஓட்டிகளைப் பற்றி நல்ல அபிப்பிராயம். விபத்து விகிதம் மிகவும் குறைவு இங்கேதான்.

பேட்டி: **அம்பி ஆசீர்வாதம்**




007 பாலு
25
கதை: குமரன்
படம்: விஜயா
ராணியின் இல்லத்துள் புகுந்த போலீஸ் படை அசாதாரண மான முறையில் எதுவும் தென்படாததால் திகைத்து நிற்கையில், பார்த்தனின் கூரிய கண்கள் பாலு வரைந்திருந்த அம்புக் குறியைக் கண்டு விட்டன. ரகசியக் கதவான புத்தக அலமாரியை உடைத்துக் கொண்டு மர்மக் கோட்டைக்குள் அவர்கள் புகு முன்னர்....
ஹெலிகாப்டர், பாலு, ராஜா, ராணி ஆகியோருடன் உயரே பறந்து விட்டது.
ஐயய்யோ! வீட்டைச் சுற்றி ராணுவமா? போலீஸ்! வகையா மாட்டிக்கிட்டோம்!
ஹெலிகாப்டரினுள்ளே....
ராஜா! செஞ்சீனாவுக்கு இதில் பறந்திடலாம் என்கிற நினைப்பா?
இல்லை! தொலைவில் கானகத்தின் மத்தியில் எனக்குச் சொந்தமான ஒரு தனி விமான நிலையமே ஒளிந்திருக்கிறது! அங்கு தான் போகிறேன்.
பாலு! கொஞ்சம் அசைந்தாலும் சுட்டு விடுவேன்!
சற்று நேரத்துக்குப் பின் ஹெலிகாப்டர் மலை முகடுகளும் பள்ளத் தாக்குகளும் நிறைந்த பகுதி மீதாகப் பறக்கையில்...
ராஜா! ஜாக்கிரதையாக ஓட்டு! நாலா பக்கமும் மலைச் சிகரங்கள்! மோதி விடப் போகிறது!



சாகப் போகிற உனக்கு இந்தப் பயம் எதுக்கு? பத்து வருஷமா ஹெலிகாப்டர் ஓட்டறேன்! ஒரு சின்ன விபத்துக் கூடக் கிடையாது!
ராஜா! அடிக்கடி என்னைத் திரும்பிப் பார்த்துப் பேசிக்கிட்டே ஓட்டறது ஆபத்தில்லையா? ஆ! ஐய்யய்யோ!
பாலு நடித்து அறையில் அமர்ந்து ராணியும் ராஜாவும் திடுக்கிட்டுத் திரும்ப அதே வினாடியில்....
பாலு கொடுத்த உதையில் துப்பாக்கி டன்னத் தாக்கித் தெறித்து விழ, அடுத்த கணம்....
ஓட்டுபவன் இல்லாததால் ஹெலிகாப்டர் தாறுமாறாகப் பறக்க ஆரம்பித்தது.
துவந்த மல்யுத்தத்தின் வேகத்தில் கதவு திறந்து கொள்ள ராஜாவும் பாலுவும் வெளியே உருண்டார்கள். நல்ல வேளை! விமானம் அப்போது தாழ்வாகப் பறந்து கொண்டிருந்தது. மலைச் சரிவில் விழுந்த பாலு துள்ளி எழுந்தான்.
ராஜா மீது பாய்ந்து அவன் தலையை ஒரு பாறையில் மோதினான்.
ராஜா மூர்ச்சையானதும் அவன் நிமிர்ந்து பார்த்தான், பாலு. அதே சமயம் ஹெலிகாப்டர் மலைச் சிகரமொன்றில் மோத....
அதை ராணிக்கு ஓட்டத் தெரியாது போலும்! அவள் எலும்புகளைக் கூட இனி பொறுக்க முடியாது!
தொடரும்....

துள்ளும் குழந்தைகள் நன்கு வளர்ந்திட

ருசித்துப் பருகட்டும் போர்ன்விடா!



ஓடி விளையாடும் குழந்தைகளுக்கு தினசரி உணவிலிருந்து கிடைக்கும் சக்தி போதுவதில்லை. எவ்வளவு சீக்கிரம் அவர்களுக்கு சக்தி கிடைக்கிறதோ அதே வேகத்தில் அது பள்ளிக்கூடத்திலும், விளையாடும் போதும் செலவழிந்து விடுகிறது. இழக்கும் சக்தியை மீட்டுத் தந்து குழந்தைகளைத் துள்ளும் ஆரோக்கியத்துடன் வளர்க்க, தினமும் ஒரு கப் போர்ன்விடா கொடுங்கள். தம் மக்கள் நலம் கருதும் தாய்மார்கள் அனைவரும் இதை ஆமோதிப்பார்களே!

பால், சர்க்கரை, மால்ட், கோகோ இவையாவும் திட்டமாகக் கலக்கப்பட்டதும், போஷாக்குச் சத்து நிறைந்ததுமான ஒரு இனிய பானம் போர்ன்விடா. ஆம், இது ஒரு காட்பரிஸ் தயாரிப்பு!



சக்திக்கும் வலிமைக்கும்—மற்றும் தீஞ்சுவைக்கும்

காட்பரிஸ் போர்ன்விடா.

Bensons/0391/TAM

விடிவெள்ளி வேதநாயகம்



இந்த ஆண்டு கல்கி நினைவுச் சொற்பொழிவை நிகழ்த்திய திரு ந. சஞ்சீவி தமது ஆராய்ச்சிக்கு உதவிய தனி நபர்களின் பெயர்களையும் புத்தகங்கள், நூலகங்கள் ஆகியவற்றின் பட்டியலையும் படித்து முடிக்கவே கிட்டத்தட்ட முக்கால் மணி நேரம் ஆயிற்று! அப்படி யென்றால் அவர் எவ்வளவு தீவிர ஆராய்ச்சியில் இறங்கி யிருப்பார் என்று எளிதில் ஊகிக்கலாம்.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களின் வாழ்வு, எழுத்து, கருத்து ஆகிய மூன்றினையும் உள்ளடக்கிய சொற்பொழிவு மூன்றே முக்கால் மணி நேரத்துக்கு மேல் நிகழ்ந்தது. ஆயினும் அவர் தமது ஆராய்ச்சி உரையில் மூன்றில் ஒரு பங்கேனும் மூன்று நாட்களில் கூறி முடித்திருப்பாரா என்பதே சந்தேகம். எளிதில் உணர்ச்சி வசப்படும் திரு சஞ்சீவி பேசினார் என்பதைவிட அபிநயம் செய்தார் என்றே சொல்லலாம்! அந்த அளவுக்கு விஷயத்தில் ஒன்றிப் பாவபூர்வமாகச் சொற் பெருக்காற்றினார். தமது ஆராய்ச்சி நூலின் முக்கியமான பகுதிகளை மட்டும் சொல்லிக் கொண்டு போன அவர் ஒப்புக்கு அவ்வப்போது எதிரே இருந்த காகிதக் கட்டைத் தொட்டுப் பக்கங்களைத் திருப்பினார். மனம் முழுவதும் விடிவெள்ளி வேதநாயகமே விரும்பி இருக்க, சொற்பொழிவின் நகலைப் பார்த்துப் படிக்க வேண்டிய அவசியந்தான் என்ன?

இடையில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல் நிகழ்த்திய இச் சொற்பெருக்கின் தொடக்கத்தில் மாயூரத்துக்கு அருகே பிறந்து மாயூரம் முனிசிபல் உயர்நிலைப் பள்ளியில் படித்த கல்கிக்கும் அதே நகரசபையின் தலைவராக விளங்கிய மாயூரம் வேதநாயகத்துக்கும் உள்ள சில ஒற்றுமைகளை விளக்கினார் சஞ்சீவி. இருவருமே தமிழிசையில் ஆர்வம் கொண்டவர்கள்; தமிழ் உரை நடைக்கு ஆக்கம் அளித்தவர்கள்; ஒழுக்கத்தில் சிறந்தவர்கள்; நகைச்சுவை மன்னர்கள்!

வேதநாயகம் பிள்ளைக்கு ஐந்து மனைவிகள்! துரதிர்ஷ்டவசமாக ஒருவர்பின் ஒருவராக மனைவிமார்கள் இறந்தபோது அவர் ஒழுக்கம் பிறழக்கூடாதே என்பதாலேயே மறுமணம் புரிந்து கொண்டார்! தமக்குக் கீழ் அலுவல் பார்த்தவர்கள் மாலை ஐந்து மணிக்குமேல் காரியாலயத்தில் உட்கார்ந்திருந்தால் அவர் அவர்களை விரட்டிவிடுவார். கொடுத்த சம்பளத்துக்குக் குறித்த நேரம் வரை உழைத்தால் போதும் என்பார். ஆனால் இப்படி அவர் நல்லெண்ணத்துடன் செய்யப் போக அது தீமையாய் முடிந்தது. அந்த ஊழியர்கள் வீடு திரும்பாமல் கெட்ட வழிகளில் செல்ல ஆரம்பித்தனர். அவர்களது மனைவிமார் வேதநாயகம் பிள்ளையிடம் முறையிட்டனர். வேதநாயகம் உடனே தமது வீட்டில் ஒவ்வொரு மாலையும் கடவுள் வழிபாடு நிகழ்த்துவது என்று முடிவு செய்து அத்தனை பேர்களையும் அங்கு வரச் செய்தார்!

இப்படி வேதநாயகரின் வாழ்க்கை பற்றி எத்தனையோ சுவையான செய்திகளைத் தொகுத்துத் தந்தார் சஞ்சீவி.

வேதநாயகரது உரை நடை அழகையும் நகைச்சுவையையும் விளக்கும் விதமாகச் சில பகுதிகளைப் படித்துக் காட்டினார். தாய் மொழிப் பற்றற்றவர்களைக் குறிப்பிடுகையில் ஆங்கில மோகம் கொண்டவர் லண்டனுக்கும், பிரெஞ்சு மோகம் கொண்டவர் பாரீசுக்கும் ஜெர்மானிய மோகம் கொண்டவர் பெர்லினுக்கும் போகட்டும் என்று கூறும் வேதநாயகம் லத்தீன் மோகம் கொண்டவர் அனுமதேயத் தீவுக்குப் போய்ச் சேரட்டும்! என்று முடிக்கும் அழகைச் சபையோர் வெகுவாக ரசித்துச் சிரித்தார்கள்.

வேதநாயகரின் பாடல்கள் ஒன்றிரண்டைச் சங்கீத பூஷணம் திரு எஸ். ராமநாதன் இறை வணக்கமாகப் பாடிக் காட்டினார். இறுதியில் பாடப்பட்ட மங்கள கீதமும் வேதநாயகருடையதே. அவர் மனம் நொந்து வேலையை உதறித் தள்ளியபோது பாடிய பாட்டில் அவரது கவிதா உள்ளத்தை மட்டுமின்றி அஞ்சாநெஞ்சத்தையும் சத்திய ஒளியையும் காண்கிறோம். அந்தத் தருணத்திலும்கூட அவரது நகைச்சுவை அவரை விட்டுப் போகாதது உணர்ந்து மலைக்கிறோம்.

இப்படி எத்தனையோ இனிய உணர்வுகளை ஏற்படுத்திய இந்த ஆராய்ச்சிச் சொற்பொழிவு விரைவில் புத்தக உருவில் வந்து இலக்கிய அன்பர்களை மகிழ்விக்கும் என நம்புகிறோம்.

தலைமை தாங்கிய திரு மு. வரதராசனார் முடிவுரை வழங்குகையில், இந்தக் கல்கி நினைவுச் சொற்பொழிவுகளை ஏற்படுத்தியது பெரிய காரியமல்ல. அதில் 19ம் 20ம் நூற்றாண்டு தமிழிலக்கியத்தை ஆராய வேண்டும் என்று காலவரையறை செய்தார்களே, அது தான் சிறப்பு என்றார்.

அந்த யோசனை ராஜாஜியுடையதல்லவா!

கால்கேட் மூலம், வாய்நாற்றத்தைத் தடுத்து நாள்முழுதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!



ஏனெனில்: ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல் க்ரீம் வாய் நாற்றத்தையும் பற்சிதைவை விளைவிக்கும் கிருமிகளையும் 85 சத விகிதம் வரை அகற்றுகிறது.

கால்கேட் 10க்கு 7 பேர்களில் வாய்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறதென்றும் உணவு உட்கொண்டவுடனேயே கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால் இது வரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப்படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. கால்கேட் மட்டுமே இந்த நிரூபணம் பெற்றது!

அதன் விந்தைமிக்க பெப்பர்மின்ட் சுவையே தனி. கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள்தவறாது பல் துலக்க விரும்புவதில் வியப்பென்ன!

நீங்கள் பற்பொடியை விரும்பினால், இப்பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பா பல மாதங்களுக்கு வரும்.



இன்றே!
வாங்குங்கள்
ஸுபர் சைஸ்...அது
சிக்கனமானது!

தூய்மையான இன் மூச்சோடு வெண்மையான பற்களும் பெறவே... மற்றெந்தப் பற்பசையையும் விட உலகிலே அதிக மக்கள் கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்.

DC.G.38 TAM

தெரியுமா, முடியுமா?

✿ 10,00,000 லிருந்து 17 என்ற எண்ணை எத்தனை தடவைகள் கழிக்க முடியும்?

விடை: ஒரே ஒரு தடவைதான்.

✿ ஒரு கண்ணாடித் தம்ளரில் பாதிக்கு நீர் இருக்கிறது. அதில் ஒரு பிடி உப்பை அள்ளிப் போடுகிறாய். அப்போது நீர் மட்டம் உயருமா, குறையுமா?

விடை: நீர் மட்டம் குறையும்.

✿ நீ நூறு மைல் கிழக்கே, நூறு மைல் தெற்கே, நூறு மைல் மேற்கே, நூறு மைல் வடக்கே நடந்து போகிறாய். ஆனால் முடிவில் பூமி உருண்டைதானென்றாலும்கூட உன்னால் கிளம்பிய இடத்துக்குத் திரும்ப முடியாது. ஏன் அப்படி?

விடை: பூமியைச் சுற்றிக் கிழக்கு மேற்காகப் போகும் அட்ச ரேகைகள் இணையாகச் செல்கின்றன. ஆனால் தெற்கு வடக்காகச் செல்லும் தீர்க்க ரேகைகள் அப்படியல்ல. அதனால் நீங்கள் கிளம்பிய இடத்துக்கே திரும்பி வர முடியாது.

✿ பத்தடி நீளமுள்ள ஒரு கயிற்றின் இரு முனைகளையும் இரண்டடி இடைவெளிக்கு அருகே கொண்டு வரும்போது ஊசலாடும் கயிற்றின் நீளம் எவ்வளவாக இருக்கும்?

விடை: மூன்று அடி நீளம்.

✿ ஒரு குளத்தில் ஓர் அல்லி பூத்தது. அது ஒரு விநோதமான அல்லி. ஒவ்வொரு நாளும் அதன் அளவைப்போல் இரு மடங்கு பெரிதாகிக் கொண்டு வந்தது. 11 நாளில் பாதிக் குளத்தை மூடிக் கொண்டதானால் 12 நாளில் குளத்தில் எத்தனை பகுதியை ஆக்கிரமித்துக் கொள்ளும்?

விடை: குளம் முழுவதையும்.

✿ உங்களுடைய பெயரின் கனம் எத்தனை என்று தெரியுமா?


விடை: உங்கள் பெயரை ஒரு வெள்ளைக் காகிதத்தில் காரீயப் பென்சிலால் எழுதுவீர்களானால் அதன் நிறை •0000125 அவுன்ஸ்கள்.



தயாரிப்பு: வாண்டுமாமா

36

இது என்ன?



ஆப்பிரிக்காவில் டோட்கல் என்ற இடத்தில் இப்படியொரு மலைக் குகை உள்ளது. 'பினு சங்க பினு'வின் கோயில் என்று இதை இங்குள்ள மக்கள் அழைக்கிறார்கள். வழிபடுவோர் இந்த உருவத்தின் திறந்த வாய் வழியே உள்ளே போவார்கள். பூதாகாரமான ராட்சச முகத்தினுள் இருந்தபடி வழிபாடு நடத்தி விட்டு வெளிவருவார்களாம்.

விந்தையல்லவோ...!



நீலவேணிக் குதிரையை அடக்கிய ராஜா தேசிங்கின் கதை உங்களுக்குத் தெரியும். ஆனால் அடங்காத குதிரையை அடக்கி அரசனான காசிநாத் சிங் என்ற சாதாரண பக்தனைப் பற்றித் தெரிந்திருக்காது. 'செம்பும்' இந்தியாவில் உள்ள செல்வம் கொழிக்கும் ஜில்லாக்களில் ஒன்று. வடநாட்டில் உள்ளது. இதன் எல்லைப் பகுதியில் 1580ல் ஓர் அழகான குதிரை அடக்குவாரில்லாமல் அலைந்து கொண்டிருந்தது. எத்தனையோ பேர் முயற்சி செய்தும் இதை அடக்கி அதன் மீது ஏற முடியவில்லை. பூய்யா என்ற அந்தப் பகுதி மக்கள், யார் அந்தக் குதிரையை அடக்கி அதற்குச் சேணமும் கடிவாளமும் இடுகிறார்களோ அவர்களுக்கு அந்த சமஸ்தானத்தையே பரிசாக வழங்குவதாக அறிவித்தார்கள். அப்படியும் பலன் இல்லை. செம்பும்மின் சிங்காதனம் குதிரை வீரனை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தது.

ஒரு நாள் காசிநாத் சிங் என்ற ஒரு யாத்திரிகன் அந்தப் பகுதி வழியாகப் போக நேர்ந்தது. பூரியிலுள்ள ஜகந்நாதரைத் தரிசிக்கச் சென்று கொண்டிருந்தான் அவன். அடக்க முடியாத குதிரையைப் பற்றிக் கேள்விப்பட்டான். முயன்றுதான் பார்ப்போமே என்று ஓர் ஆசை. ஆசை வீண் போகவில்லை. வெற்றியைத் தந்து செம்பும்மின் மன்னனாகவும் ஆக்கியது காசிநாத்சிங்கை. அவன் சந்ததிகள் அந்தப் பிரதேசத்தைப் பல நூற்றாண்டுகளாக ஆண்டார்கள். அடக்க முடியாத குதிரையை அடக்கி நினைக்கமுடியாத அரச பதவியைப் பெற்றது விந்தையல்லவோ ?

மந்திர ஜன்னல்

ஓர் ஊரில் ஒரு ராஜகுமாரி இருந்தாள். அவள் ரொம்ப அழகி. அதைப் போலவே ரொம்ப அகம்பாவக்காரியும்கூட. அவளது மாளிகையில் பன்னிரண்டு சாளரங்கள் உண்டு. அதன் வழியாகப் பார்த்தால் அந்த நாடு பூராவும் தெரியும். அப்படியோர் அமைப்பு. எதுவும் அவள் பார்வையிலிருந்து தப்ப முடியாது. அப்படியொரு திறமை அவளுக்கு. யார் ஒருவன் தன்னால் கண்டு பிடிக்க முடியாதபடி அந்த நாட்டிற்குள் ஒளிந்து கொள்ளுகிறானோ அவனையே தான் மணக்கப் போவதாக அறிவித்திருந்தாள் இளவரசி. தொண்ணூற்றி ஒன்பது ராஜ குமாரர்கள் வந்தார்கள். அத்தனை பேரும் தோல்வியே கண்டார்கள். ராஜகுமாரியும் கன்னியாகவே இருந்து வந்தாள்.

ஒரு நாள் ஓர் அரசகுமாரன் வந்தான். தனக்கு மூன்று சந்தர்ப்பங்கள் தரும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். அவன் ரொம்ப ரொம்ப அழகனாக இருந்ததால் அரச குமாரியும் சம்மதித்தாள். சோதனைக்கு முதல் நாள் ராஜகுமாரன் வேட்டையாடி விட்டு வரப் போனான். வேட்டையின்போது ஒரு காக்கை, ஒரு மீன், ஒரு நரி இவைகளின் உயிரைக் காப்பாற்றினான், கருணை உள்ளம் கொண்ட ராஜகுமாரன். அவைகளும் அவனுக்குத் தக்கபடி உதவுவதாக வாக்களித்தன.

முதல் நாள் சோதனை ஆரம்பமாயிற்று. தான் எங்கே ஒளிந்து கொண்டால் இளவரசியால் கண்டுபிடிக்க முடியாது என்று கேட்டான் காக்கையினிடம். காக்கையும் தன்னுடைய முட்டைகளில் ஒன்றைப் பக்குவமாகத் திறந்து அதனுள் ஒளிந்து கொள்ளச் சொல்லி முட்டையை மறுபடியும் மூடிவிட்டது. இளவரசி தன்னுடைய பத்துஜன்னல்கள் வழியாகவும் பார்த்தாள். ஒன்றும் தெரியவில்லை. பதினொன்றாவது சாளரம் அரசகுமாரனின் ஒளிவிடத்தைக் காட்டிக் கொடுத்து விட்டது. உடனே தன் வீரர்களை அழைத்துக் காக்கையின் முட்டையைக் கொண்டு வரக் கட்டளையிட்டாள்.

இரண்டாவது நாள் இளவரசன் மீனின் உதவியை நாடினான். மீன் அவனை விழுங்கி விட்டுக் கடலின் அடிக்கு — சமுத்திர லோகத்துக்குப் - போய் விட்டது. ஆனாலுமென்ன ? இளவரசியின் பன்னிரண்டாவது ஜன்னல் பக்குவமாக அதைக் காட்டிக் கொடுத்து விட்டதே !

மூன்றாவது நாள் நரியிடம் தனக்கு உதவ முடியுமா என்று கேட்டான் ராஜகுமாரன். நரி அவனை ஓர் ஓடைக்கு அழைத்துச் சென்றது. நரி அதனுள் குதித்தது. அடுத்த விநாடி ஒரு நரிக் குறவனாக வெளிவந்தது. இளவரசனும் தன் தோழன் நரியைப் பின் பற்றி ஓடையில் குதித்தான். அடுத்தவிநாடி அவன் ஓர் அழகிய அணிலாக மாறினான். ''நான் உன்னைக் கையிலேந்தி விலை கூறிப் போவேன். இளவரசி உன்னை வாங்குவாள். அவள் உன்னைத் தேடி மந்திர ஜன்னல்களின் அருகே போகும் போது நீ மெதுவாக அவளது கூந்தலினுள் புகுந்து மறைந்து கொண்டு விடு'' என்று சொல்லிக் கொடுத்தது நரி.

மறு நாள் இளவரசி அதிகாலையில் உலாவக் கிளம்பினாள். நரிக் குறவன் அழகிய அணிலை விலை கூறி விற்பதைக் கண்டு அதை வாங்கிக் கொண்டு அரண்மனைக்குத் திரும்பினாள். இளவரசனின் ஒளிவிடத்தைத் தேடுவதற்கான வேளை வந்ததும் மந்திர ஜன்னல்களின் அருகே போனாள் இளவரசி. இளவரசன் அணிலும் நரியின் யோசனைப்படி இளவரசியின் தோள்மீது ஏறி விளையாடியபடி ஓடி அவளது பட்டுக் கூந்தலுக்குள் பதுங்கிக் கொண்டது. இளவரசி பன்னிரண்டு சாளரங்களின் வழியாகவும் தேடினாள், தேடினாள், அப்படித் தேடினாள். அவளுக்கு அதிசயமும் ஆச்சரியமுமாக இருந்தது. இளவரசனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. தோல்வியினால் சோர்ந்த இளவரசியின் பிடரியில் அணில் குறுகுறுக்கவே ஆத்திரத்துடன் அதைப் பிடித்துக் கீழே வீசி, ''போய்த் தொலை ! உன் வரவால் எனக்கு இன்று தோல்வி !'' என்று ஆத்திரப்பட்டாள். அணில் குடுகுடுவென்று ஓடிப் போய் நரிக் குறவனிடம் ஒண்டிக் கொண்டது. குறவன் அணிலுடன் மந்திர ஓடைக்கு ஓடினான். அதில் மூழ்கி எழுந்து இருவரும் மறுபடியும் தங்கள் பழைய உருவை அடைந்தார்கள். இளவரசன் நரிக்குத் தன் நன்றியைத் தெரிவித்துவிட்டு அரண்மனைக்குப் போனான். இளவரசி தன் வாக்குத் தவறவில்லை. அந்த அழகனையே மணந்து கொண்டு ஆனந்தமாக வாழ்ந்து வந்தாள். ஆனால் இளவரசன் மட்டும் இன்று வரை தான் ஒளிந்திருந்தது எப்படி, எங்கே என்பதைச் சொல்லவே இல்லை. இளவரசியும் தன்னைவிடத் தன் கணவன் திறமைசாலி என்ற நினைப்புடன் நிம்மதியாக வாழ்ந்து வருகிறாளாம்.



கிளிஞ்சல் கோபுரம்



ஜெகசிற்பியன்

அத்தியாயம் இருபத்தைந்து

அடிக்கல் நொடித்தது!

துண்டுக் காகிதத்தில் பரபர வென்று எதையோ எழுதி ஜேபியில் திணித்துக் கொண்டு தலைநிமிர்ந்த வலம்புரி அப்போதுதான் தன் அண்ணன் எதிரே வந்து நிற்பதைக் கவனித்தவனாய்ச் சட்டென்று கால்களைக் கீழே தொங்கப் போட்டுக் கொண்டான்.

கையிலிருந்த தினப்பத்திரிகையை முதுகுக்குப் பின்னால் மறைத்துக் கொண்டு அவனையே வெறித்துப் பார்த்தவாறு நின்றிருந்த முத்து சிவன், ''என்னடா, என்ன விஷயம்?'' என்று அடித் தொண்டையில் கேட்டான்.

''ஒண்ணுமில்லேண்ணா! சும்மா பார்த்துவிட்டுப் போகலாம்னு வந்தேன்'' என்று நொண நொணத்த குரலில் நாணப் புன்னகையுடன் கூறி உடம்பை நெளித்தான் வலம்புரி.

''நீ எப்பவும் சும்மா பார்க்க வரமாட்டேன்னு எனக்குத் தெரியும்; விஷயத்தைச் சொல்!''

வலம்புரி தன் வலது கையை நீட்டி 'சின்முத்திரை' பிடிப்பது மாதிரி விரல்களைக் குவித்து, ''இல்லேண்ணா!.... வந்து...'' என்று ஆரம்பித்தவன், ஏதோ பெரிய ஹாஸ்ய சமாசாரம் சொல்லப் போவதுபோல் தலையை ஒரு சுற்றுச் சுழற்றிக் கலகலவெனச் சிரித்தான். அப்படிச் சிரித்த அதிர்ச்சியில் அவனுக்குக் கண்கள் கலங்கி இருமலும் வந்துவிடவே, சிரிப்பும் இருமலுமாகக் கொஞ்ச நேரம் அவஸ்தைப் பட்டுவிட்டு அதோடு தான் சொல்ல நினைத்ததையும் சொல்லி விட்டாற் போன்ற திருப்தியுடன் மேல் மூச்சு வாங்க நெஞ்சைத் தடவி விட்டுக்கொண்டு மௌனமானான்.

முத்துசிவனுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. ''ஏண்டா, நாடகமா நடிக்கிறே? உன்னை விடப் பெரிய கூத்தாடிகளையெல்லாம் நான் பார்த்திருக்கிறேண்டா!'' என்று சீற்றக் குரலில் கரகரத்த அவன், ''வழக்கம்போல் பஞ்சப்படி வசூலுக்கு வந்திருக்கிறாய், அப்படித் தானே?'' என்றான் குத்தலாக.

வலம்புரி இதைக் கேட்டுக் கொஞ்சமும் முகம் சுளிக்கவில்லை.

ஏதோ பன்னீர் தெளிக்கப்பட்டவன் மாதிரி குளிர்ச்சிப் புன்முறுவல் பூத்துக் கொண்டே, ''இல்லேண்ணு!...வந்து... காலம்பற ஆசுபத்திரிக்குப் போனேன், டாக்டர் மருந்து எழுதிக் கொடுத்து என்னையே கடையில் வாங்கிக் கொள்ளச் சொல்லி விட்டார். ஆசுபத்திரியிலே அந்த மருந்து இல்லையாம். என் கையில் பணம் இல்லே...'' என்று சின்னப் பையன் போல் குழைந்து இழுத்து நிறுத்தினான்.

''ஓகோ! கதை பழசுதான்: வச னத்தை மட்டும் கொஞ்சம் மாற்றி யிருக்கிறே! ஒவ்வொரு தடவையும் புதுசா சின்னதா மாற்றி வசனம் பண் ணிக் கொள்கிறதிலே உன்னை எவனும் மிஞ்ச முடியாதுடா!'' என்று கோபக் கிண்டலுடன் சிரித்த முத்துசிவன் சட் டென்று ஓரடி முன்னால் வந்து, ''அது சரி; உனக்கு வயசு என்ன ஆச்சு, உன் குடும்ப அந்தஸ்து என்ன? இவ்வளவுக் கும் எந்தப் பொருத்தமுமில்லாமல் இது என்னடா குறும்புத்தனம்? இந்தக் காவாலித்தனமான காரியத்தை ஏண்டா செய்யறே?'' என்று அதட்டிக் கேட்டுக் கொண்டே தன் இடது கையி லிருந்த தினப் பத்திரிகையை அவன் முகத்துக்கு நேரே நீட்டி வலது கையால் அதைப் பட்டென்று வேக மாகத் தட்டினான்.

இவ்வளவு நேரம் ஓலைச் சுருள்போல் சுருண்டு உட்கார்ந்திருந்த வலம்புரி திடீரென்று தன் தலைமீது தீப்பந்தம் விழுந்த மாதிரி துடித்துப் பதறி எழுந்து, ''என்னண்ணு! நீங்க என்ன கேட்கிறீங்க?'' என்று குழறினான்.

முத்துசிவன் மேலும் சீற்றமடைந்த வனாய் அந்தப் பத்திரிகையின் பக்கங் களைத் தாறுமாறாகப் பிரித்துக் காட்டி, ''ஒண்ணும் தெரியாதமாதிரி என்னையே திருப்பிக் கேட்கிறயா? இதோ பாருடா! இந்தப் பக்கத்திலே ஏன் இப்படிக் கத்தரிச்சே? இங்கே வரும் போதெல்லாம் இம்மாதிரி செய்யற வன் நீதானே?'' என்று உரக்கக் கேட் டுக்கொண்டே வலம்புரியின் முகத்தில் அதை விட்டெறிந்தான். ''எனக்கு எல்லாம் தெரியும். இந்தப் பேப்பரிலே வருகிற ஓர் ஆபாச விளம்பரப்




படத்தை வெட்டி வைச்சுக்கிறே இல்லையா? எதற்காக நீ அப்படிச் செய்யறேன்னும் தெரியும்.''

பிரம்பு நாற்காலியின் தலைப்பை இரு கைகளாலும் இறுகப் பிடித்துக் கொண்டு கிடுகிடுவென்று நடுங்கிய வலம்புரி ஏதோ செய்யக் கூடாத பெருங் குற்றத்தைச் செய்துவிட்டுக் கையும் மெய்யுமாக அகப்பட்டுக் கொண்டவன் போல் திருதிருவென விழித்துப் பார்த்தான். கடந்த ஒரு வாரமாக நோய்ப் படுக்கையில் கிடந்து பாதி உடம்பாய் எலும்பும் தோலுமாய் எழுந்து வந்திருந்த அவனால் இப்போது நிற்கவும் முடியவில்லை. நொடித்து நொடித்து முன்னும் பின்னுமாகச் சாய்ந்தான். தாள முடியாத அவன் முகம் விகாரமாக வெளிறிச் சிறுத்தது. உடலெங்கும் வியர்வை ஆறாகப் பெருகி வழிந்தது. தவளை போல் வாயைத் திறந்து திறந்து மூடினான். வார்த்தைகள் ஏதும் வெளிவரவில்லை. குரல் மட்டும் சேப்பங் கட்டி இழுப்பது போல் 'ஙொய், ஙொய்' என்று இழுத்தது.

சற்றைக்குப் பின் எப்படியோ தன்னைச் சமாளித்துக் கொண்டு ''இல்லேன்னு!... அது... வந்து... என்னோட.... அதுக்குத்தான்... அப்படி... நான்...'' என்று உளறியவன் அதற்கு மேல் தொண்டை அடைத்துக் கொள்ளவே மூச்சு விடவும் முடியாமல் திக்குமுக்காடினான். கண்களில் கண்ணீர் வழிந்து கொட்டியது. ஒரு கனமான தொடர் இருமலும் மார்பின் அடிவாரத்திலிருந்து பீரிட்டெழுந்தது. இடுப்பை ஒரு கையாலும் நெஞ்சை மறு கையாலும் அழுத்திப் பிடித்துக் 'கணீர், கணீர்' என்று இருமியவாறு அங்கிருந்து தள்ளாடித் தள்ளாடி வெளியே நடக்கலானான்.

இவ்வளவையும் பார்த்துக் கொண்டு ஸ்தம்பித்து நின்றான் முத்துசிவன். தான் கேட்ட அந்த விஷயத்துக்காக வலம்புரி இத்தனை அதிர்ச்சியும், மிரட்சியும் அடைவான் என்று கொஞ்ச



ஜி-11 கொண்ட சிந்தால்
இப்பொழுது
அதிக நறுமணமும்
நுரைவளமும் கொண்டுள்ளது



உங்கள் நன்மைக்காக
இரண்டு சைஸ்களில் கிடைக்கிறது

புதிய மீடியம் (மத்திய) சைஸ் சிந்தால் உங்கள் பட்ஜெட்டுக்குப் பொருத்தமானது. இந்த சோப், எல்லா விதங்களிலும் சொகுசுமிக்கது—எனினும் மலிவானதுதான்.

அதிக நறுமணம்—ஆழ்ந்த மணம், நீடித்திருப்பது. அதிக நுரை—மென்மையும், வளமையும் கூடியது. சிந்தாலுக்கே உரிய, ஒப்பற்ற ஜி-11 உங்களை நாள்முழுவதும் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கிறது.



CINTHOL

மும் எதிர்பார்க்காததாலேயே அப்படித் திகைத்து நின்றான்.

'வழக்கம்போல் அவன் சிரித்து மழுப்புவான், அல்லது என் கேள்வியைக் காதில் வாங்காமல் கோமாளிமாதிரி வேறு எதையாவது உளறுவான் என்று எண்ணியே எடுத்த எடுப்பில் அவ்வளவு கோபத்துடன் அவ்விஷயத்தை ஆரம்பித்தேன். அதற்கு ஏன் இப்படி ஒரேயடியாகப் பயந்து நடுங்கி ஓடுகிறான்? பார்த்தால் பூனை; பண்ணுகிறதெல்லாம் விஷமம்! அசிங்கமான படங்களை இரகசியத்தில் பார்த்து மகிழும் கிறுக்குத்தனமான பழக்கம் அவனிடம் உண்டு போலும்! அதை நான் தெரிந்துகொண்டு கண்டிக்க முற்பட்டது அவனுக்குப் பெரிய அவமானமாகிவிட்டிருக்கிறது : அதனால்தான் இங்கே நிற்காமல் ஓடுகிறான்!'

முத்துசிவனுக்கு மீண்டும் கோபம் குமுறியது. 'அண்ணன் என்கிற முறையில் அவசியம் கண்டிக்க வேண்டிய ஒரு விஷயத்துக்காகத்தானே அவனைக் கடிந்து கொண்டேன்? அது தவறில்லை!' என்று தனக்குத் தானே சமாதானம் கூறிக் கொண்டான். 'போகட்டும்! நாளைக்கு அவனே திரும்பி வருவான். அப்போது நல்லதனமாக நாலு வார்த்தைகள் சொல்லித் திருத்தி விடலாம்.'

இப்படி எண்ணிச்சமாதானம் அடைய முயன்ற அவன் மனத்தில் அவனையும் மீறி ஒரு விதத் திகில் புகுந்து கொண்டு குழப்ப ஆரம்பித்தது. தனக்கு நிச்சயமாய்த் தெரியாத ஒரு விஷயத்தில் — தன்னை நிரபராதியாக்கிக் கொள்ளும் நோக்கில் — உண்மைக்குப் புறம்பான ஊகங்களை வலுக்கட்டாயமாகத் தேடித் தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்வதாக அவனது உள் மனம் உறுத்தியதாலேயே அத்தகைய குழப்பத் திகிலில் ஆழ்ந்தான். அதனால் அவனுக்குச் சாப்பிடவும் பிடிக்கவில்லை; தூக்கமும் வரவில்லை. எப்படியோ அன்றிரவைக் கழித்து, மறு நாள் தன் திருமணக் காரியங்கள் பற்றிய சிந்தனையுடன் எழுந்தபோது எல்லாம் சரியாகிவிட்டது. நேற்றைய அச்சம்பவத்தை அடியோடு மறந்தவனாய் ஆபீசுக்குப் புறப்பட்டான்.

கழுத்தை இறுக்கிக் கொண்டிருந்த 'டை'யைக் கொஞ்சம் தளர்த்திவிட்டு மின்விசிறியின் குளிர்ந்த காற்றைச் சுவாசிப்பதற்காக அண்ணாந்த வாட்டில் சுழல் நாற்காலியிலே சாய்ந்த முத்துசிவன், ''சார்! உங்களை மானேஜர் பத்மநாபன் கூப்பிடுகிறார்!''என்று டைப்பிஸ்ட் நீலமணி வந்து சொன்னதைக் கேட்டுச் சற்றே சலிப்புடன் எழுந்து பக்கத்து அறைக்குப் போனான்.

மானேஜர் பத்மநாபனுக்கு வயசு நாற்பத்தைந்துக்கு மேல் இருக்கும். தங்கமான மனிதர். முத்துசிவனிடம் மிகுந்த அன்பும் மதிப்பும் வைத்திருப்பவர். அவனுடைய முன்னேற்றத்துக்குப் பல வகையிலும் உதவியவர். இரட்டை நாடியான அவரை நேரில் நின்று பார்த்தால் அவரது முகத்தின் மேல் இன்னொரு முகத்தை அமுக்கி வைத்திருப்பது போல் தோன்றும். இப்படித் தோன்றக் காரணம், அவருடைய இருபுறத் தாடைகளிலிருந்து மோவாய்க்குக் கீழ்வரையில் சதை திரண்டு முட்டை வடிவிலே மடிந்து வளையம் போட்டிருந்ததே! அதனால் அவர் பேசும்போதும் சிரிக்கும்போதும் ஏதோ ஒன்றை உள்ளுக்குள் அமுத்தி வைத்துக் கொண்டு மூச்சுத் திணறுவது மாதிரி காட்சி யளிப்பார். அப்போது சற்றே தலை குனிந்திருந்ததால் அவரின் அந்த இரட்டை முகத் தோற்றம் இன்னும் எடுப்பாகத் தெரிந்தது.

'தள்ளு' கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்த முத்துசிவனை அவர் நிமிர்ந்து பார்க்கவில்லை. 'உட்காருங்கள்' என்று உபசரிக்கவுமில்லை. மேசை மேல் கிடந்த வெளிநாட்டுத் தபால் உறை யொன்றில் ஒட்டப்பட்டிருந்த ஸ்டாம்புகளைப் பக்குவமாகப் பெயர்த்துஎடுப்பதில்கவனமாயிருந்தார்.

யாராவது ஒருவரை நேருக்கு நேர் பார்ப்பதையோ, அல்லது அவரிடம் பேசுவதையோ தவிர்ப்பதற்காகச் சிலர் இம்மாதிரி 'பாவலா' பண்ணுவது உண்டு என்று முத்துசிவனுக்குத் தெரியும். அதனால் அவன் உள்ளூறக் காட்டமடைந்தான். ஆயினும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், ''என்ன சார், ஸ்டாம்ப்ஸ் கலெக்ட் செய்ய நீங்களா? எவ்வளவு நாட்களாக இந்த ஹாபி?'' என்றான் மெல்லச் சிரித்துக் கொண்டே.

இப்போதும் மானேஜர் தலை நிமிராமல் தம் காரியத்தில் கவனமாயிருந்தபடி, ''உட்காருங்கள்!'' என்றார்.

அமர்த்தலாக ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான் முத்துசிவன்.

கையிலிருந்த கவரை மேசை மேல் வைத்துவிட்டு நிமிர்ந்தார் பத்மநாபன். ''உங்களிடம் ஒரு விஷயத்தைச் சொல்ல நேரிட்டதற்கு நான் மிகவும் வருந்துகிறேன் மிஸ்டர் முத்துசிவன்!''

புருவங்கள் சுருங்கி விரியப் பரபரப்புடன் அவரைக் கூர்ந்து நோக்கினான் முத்துசிவன்.

இரு கைவிரல்களையும் சேர்த்து நிமிர்த்தி மோவாயைப் பட்டும் படாமல் தாங்கிக் கொண்டு பார்வையை உயர்த்தாமலே மேலும் சொன்னார் பத்மநாபன்: "நாளை முதல் நான் நமது தலைமைக் காரியாலயத்தின் ஜெனரல் மானேஜராக மாற்றலாகிப் போகிறேன்."

இதைக் கேட்டு மகிழ்ச்சி யடைந்த முத்துசிவன், "குட் நியூஸ்! ஹார்ட்டி கங்கராஜுலேஷன் சார்!" என்றவாறு தன் வலக்கரத்தை நீட்டினான். எவ்வித உணர்ச்சியுமின்றி அவன் கையைப் பற்றிக் குலுக்கிவிட்டு மௌனமானார் பத்மநாபன்.

'இந்தச் சந்தோஷ சமாசாரத்தைச் சொல்வதற்கு இவர் ஏன் இவ்வளவு வருத்தப்படுகிறார்?' என்று எண்ணி உள்ளூற வியப்படைந்து கொண்ட முத்துசிவன், "ரொம்ப நாளாகவே நான் எதிர்பார்த்த விஷயம்தான் சார் இது!" என்றான் உற்சாகமான குரலில்.

அவன் அப்படி உற்சாகமடைந்ததற்கு ஒரு காரணம் இருந்தது. மானேஜர் பத்மநாபன் ஜெனரல் மானேஜராகப் பதவி உயர்வு பெற்றுப்போனால் உதவி மானேஜராக இருக்கும் அவனுக்கு மானேஜர் பதவி கிடைத்து விடுமல்லவா? இதை அவன் மட்டுமல்ல, அந்தக் காரியாலயத்தில் இருக்கும் அனைவருமே அறிவார்கள்.

"வாஸ்தவம்! ஆனால் நீங்கள் எதிர்பார்க்காத இன்னொரு விஷயமும் இருக்கிறது..."

தன்னை மீறிய ஆவலுடன் பத்மநாபனை ஏறிட்டு நோக்கினான் முத்துசிவன்.

"அதாவது, நான் போன பின் என்னுடைய இந்த ஸ்தானத்துக்கு வரப்போகிறவர் நமது ஹெட் கிளார்க் நீலகண்டன்!"

திடுக்குற்றுவிட்ட முத்துசிவன் மறுகணமே தன்னைச் சமாளித்துக்கொண்டு, "அப்படியா?" என்று உள்ளடங்கிய குரலில் இழுத்தான்.

"ஆமாம், மிஸ்டர் சிவன்! நேற்று நடந்த நமது கம்பெனி டைரக்டர்கள் மீட்டிங்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டு விட்டது. நானும், இன்னும் சில டைரக்டர்களும் உங்களை மானேஜர் பதவிக்கு உயர்த்த வேண்டும் என்று எவ்வளவோ வாதாடிப் பார்த்தோம். துரைசாமிதான் அதற்குக் குறுக்கே நின்றார். எங்கள் சிபாரிசை ஏற்க அவர் அடியோடு மறுத்து விட்டார்."

துரைசாமி என்பவர் அந்தக் கம்பெனி டைரக்டர்களில் முக்கியமானவர். முத்துசிவனின் மேல் மிகுந்த அன்பும் மரியாதையும் நம்பிக்கையும் வைத்திருப்பவர். அவனுடைய கடைசித் தங்கை மைதிலிக்குத் திருமணமான சேதி கேட்டதும் அவனை நேரில் பார்த்துப் பாராட்டித் தம் வீட்டுக்கு வருமாறு வேண்டிக் கொண்டவரும் அவர்தான்!

சற்று நேரம் அப்படியே இடிந்து போய் உட்கார்ந்திருந்த முத்துசிவன், "அதனாலென்ன சார், பரவாயில்லை! நான் இந்த மானேஜர் பதவிக்கு ஆசைப்படவுமில்லை. எனக்கு அது தேவையுமில்லை. பாவம், நீங்கள் இதற்காக அவ்வளவு தூரம் வாதாடியிருக்க வேண்டாம், இப்போது வருத்தப்படவும் வேண்டாம்" என்று மெல்லச் சிரித்துச் சொல்லிக் கொண்டே எழுந்து விட்டான்.

ஆனால் அவன் மனம் எவ்வளவு அதிர்ச்சியும் துயரமும் அடைந்திருக்கிறது என்பதை அவனுடைய அந்தச் சிரிப்பிலிருந்தே புரிந்துகொண்ட பத்மநாபன் மௌனமாகத் தலை குனிந்தார்.

அந்த இடத்தில் அந்த நேரத்துக்கு அப்படி ஏதோ அலட்சியமாகச் சொல்லி விட்டு வந்தானே தவிர அப்புறம் அந்த ஏமாற்றத்தை அவனால் தாங்கவே முடியவில்லை. கைக்கு எட்டிய கனி வாய்க்கு எட்டாமற்போன துரதிருஷ்டத்தை எண்ணி யெண்ணி நெஞ்சம் நெக்குவிடப் புழுங்கிக் குமைந்தான் அவன். திருமணம் செய்துகொள்ளவிருக்கும் இத்தருணத்தில் மானேஜர் பதவியும் கிடைத்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று நினைத்து ஏங்கியதோடு இந்தச் சமயம் பார்த்து இவ்வளவு பெரிய ஏமாற்றம் வந்து தாக்கிவிட்டதே என்றெண்ணி ஒருவித பிரட்சியும் அடைந்தான். அத்துடன் அப்பதவியைத் தனக்குக் கீழே இருக்கும் ஒருவர் அடைந்திருப்பதையும் இனிமேல் அவருக்குத் தான் கை கட்டிப் பதில் சொல்ல வேண்டி ஆகிவிட்டதையும் நினைக்க நினைக்க அவமானம் அவனை அணு அணுவாக வதைத்தெடுத்தது.

இவ்வளவுக்கும் காரணமாக இருந்தவர் — தன்மீது பேரன்பு கொண்டவரும், தனது முன்னேற்றத்தில் பேரளவு அக்கறை உள்ளவருமான — அந்தப் பெரிய மனிதர் துரைசாமிதான் என்ற தகவல் இன்னும் அவனுக்கு ஆச்சரியத்துடன் கூடிய அச்சத்தை உண்டு பண்ணியது.

இரண்டு மூன்று தினங்கள் வரையில் இதே துயரத்திலும் சோர்விலும் ஆழ்ந்திருந்த அவன் தன் திருமணக்


கண் கவரும்...
லக்கி பிரின்ஸ்,
போல்டு பிரின்ஸ்
அழகான
ஆடைகளுக்கு:
ஃபின்லே.
ஃபின்லே

காரியங்களிலும் அவ்வளவாக உற்சாகம் காட்டாமல் இருந்து, பிறகு ஒருவாறு மனம் தேறி 'நடப்பது நடக்கட்டும்' என்ற நினைப்புடன் காரியங்களை மேற்கொள்ளலானான்.

திருமணத்துக்கு இன்னும் பத்து நாட்களே இருந்தன. தம்பி, தங்கைகளுடையவும், உற்றார் உறவினருடையவும் 'பகிஷ்கரிப்பு நிலைமை'யில் எவ்வித மாறுதலும் இல்லை. ஆனால் ஒரே ஒரு விஷயம்தான் அவனது உள்ளத்தின் ஓர் ஓரத்தில் இலேசான வலியை ஏற்படுத்தி விட்டிருந்தது.

ஆமாம்; நேற்றைக்கு முன் தினம் மாலை அவன் எங்கோ போய்விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தபோது அசந்தர்ப்பமாக அந்தப் பள்ளிக்கூட பஸ் நிலயத்தில் கருணாவைப் பார்த்து விட்டான். அவளும் அவனை நன்றாகப் பார்த்தாள். எல்லாம் ஒரு விநாடி நேரம்தான். அதற்குள் அவனுடைய ஸ்கூட்டர் வெகு தூரம் போய்விட்டது — இல்லை; அவனே அப்படி வேகமாக ஓட்டிச் சென்று விட்டான்.

கருணா மீது அவனுக்கு அவ்வளவு வெறுப்பா அவள் அப்படித்தான் எண்ணி யிருப்பாள். ஆனால் அவன் தன்னை அவ்வாறு ஏமாற்றிக் கொள்ள முடியாது. காரணம், அவளைப் பார்த்த போதுமட்டுமல்ல; அவளுடைய நினைவு வரும்போதுகூட அவனையுமறியாமல் ஒருவித அச்சமும் அவமானமும், கிளர்ந்து குடைவதை அவனே நன்கு உணர்ந்திருந்தான். அதனாலேயே அன்று அவளைக் கண்டதும் அப்படி அரண்டு மிரண்டு வாயு வேகமாய்ப் பறந்து போய் விட்டான்.

கருணாவுக்கும் அவளுடைய பெற்றோருக்கும் அவன் வந்தனாவைத் திருமணம் செய்து கொள்ளப் போகும் செய்தி தெரியுமோ, தெரியாதோ! அவர்கள் யாருமே அது பற்றி எவரிடமும் எதுவும் கேட்டதாகவோ, சொன்னதாகவோ தகவல் இல்லை. அன்னபூரணியம்மாளுக்கே இது ஆச்சரியமாகத்தான் இருந்தது.

அன்று அச்சகத்திலிருந்து திருமண அழைப்பிதழுக்கான புரூப் வந்தது. அதை வந்தனாவின் தகப்பனாரிடம் காட்டி விட்டுப் பிறகு அச்சடிக்கக் கொடுக்கலாம் என்று தீர்மானித்தவனாய் ஆபீசிலிருந்து அப்படியே புறப்பட்டான் முத்துசிவன்.

கடந்த நான்கு நாட்களாகக் கல்யாணக் காரியங்கள் நிமித்தம் வெளியே அதிகம் அலைய வேண்டி யிருந்ததால் அவன் வந்தனாவைப் பார்க்கப் போக



முடியவில்லை. அதுவே அவனுக்கு ஒரு பெரிய கவலையாகி விட்டிருந்தது. அத ஞல் தன்னை மீறிய துடிப்புடன் — மாலை நேரக் காப்பி டிபனும் பண்ணுமல் — அவசரமாகக் கிளம்பினுன்.

அன்றைய தினம் அவனுடைய ஸ்கூட் டரில் என்னமோ கோளாறு; அதை வீட்டில் விட்டு விட்டு வந்திருந்தான். எனவே ஒரு டாக்சியைப் பிடித்துக் கொண்டு போய்விடலாம் என்று சாலை யில் தவிப்புடன் நின்ருன்.

இந்தச்சமயம் நாற்பதாம் வருஷத்திய போர்டு மாடல் கார் ஒன்று வந்து அவன் அருகில் நின்றது. திரும்பிப் பார்த்தான்.

''ஹலோ மிஸ்டர் முத்துசிவன்!'' என்று அமர்த்தலாகக் குரல் கொடுத் துக் கொண்டே அந்தக் காரிலிருந்து கீழே இறங்கினுன் ரட்சகன்.

வியப்பும் மகிழ்ச்சியுமாக அவனை ஏற இறங்கப் பார்த்த முத்துசிவன், ''அடடே, வாப்பா! என்ன, ஆளையே காண முடிகிறதில்லை?'' என்றவாறு மீண்டும் தலை முதல் கால்வரையில் ஒரு நோட்டம் விட்டான்.

ரட்சகஞ அவன்? பழைய நடிக அலங் காரமெல்லாம்அடியோடு மாறிப்போய்ச் சாதாரண வெள்ளைப் பாண்டும், வெள் ளைச் சட்டையுமாகக் காட்சியளித்தான்.

''ஆமாம், மிஸ்டர்! இப்ப என்னைப் பார்க்கிறது கஷ்டம்தான்; ரொம்ப பிஸி...!''

முத்துசிவனுக்கு ஏற்பட்ட வியப்பு இன்னமும் அடங்கவில்லை. ''இப்ப மட்டும்தாஞ? எப்பவும் நீ பிஸிதானே?'' என்று சிரித்த அவன், ''அது சரி; உன்னுடைய நாகரத்தினம் நாடக மன் றம் எப்படி இருக்குது? புதிசா ஏதாவது நாடகம் ஸ்டேஜ் பண்ணப் போறயா?'' என்று கேலிக் குரலில் கேட்டான்.

''அதை யெல்லாம் இழுத்து . மூடி ரொம்ப நாளாகிப் போச்சு!'' என்ருன் ரட்சகன் அலட்சியமாக.

இதைக் கேட்டு மேலும் வியப்புற் ருன் முத்துசிவன். ''என்னது? உன் நாடக மன்றத்தை மூடி விட்டாயா? ஏன், என்ன ஆச்சு?''

''என்ன ஆச்சுன்னுதான் முதலிலேயே சொல்லி விட்டேனே! ஏன் என்கிறதுக்கு மட்டும் நீங்களே பதில் தேடிக் கொள்ள லாம்; அது உங்களுக்குத் தெரியும்.''

''என்னப்பா, நான் ஒன்று கேட் டால் நீ ஏதேதோ நாடக வசனம் பேசறே?'' என்று சொல்லிச் சிரித்தான் முத்துசிவன்.

''இல்லை மிஸ்டர் சிவன்! அதெல் லாம் எனக்கு மறந்து போச்சு.''

''சும்மா எனக்காகக் கொஞ்சம் ஞாப கப்படுத்திச் சொல்லேன்?''

''என்னத்தைச் சொல்றது? அந்தப் பெண் — அதாவது, உங்க எதிர்கால இல்லத்தரசி வந்தனு — நடிக்க வர மாட்டேன் என்று சொன்னதற்கப்புறம் வேறு இரண்டு குமிசடைகளைப் பிடிச்சு ஹீரோயினுப் போட்டுப் பார்த்தேன். எதுவும் சுகப்படலை. நானே பெண் வேஷம் போட்டுக் கதாநாயகியாக நடிக்க முடிவு பண்ணினேன். அவ்வளவு தான்; அடுத்த நாளே என் நாடக மன்ற அங்கத்தினர்கள் அத்தனை பேரும் பிய்ச்சுக்கிட்டுப் போயிட்டாங்க.''

முத்துசிவனுக்குச் சிரிப்பு வெடித்துக் கொண்டு வந்து விட்டது. ''ஏம்பா அப்படி?'' என்ருன் சிரித்துக்கொண்டே.

''அதையெல்லாம் விரிவாகச் சொன் ஞல்தான் உங்களுக்குப் புரியும். அதுக்கு இப்ப நேரமில்லை. இருந்தாலும் சுருக் கமாச் சொல்றேன்: இந்த மாதிரி அமெச்சூர் நாடகங்களிலே நடிக்க வரு கிறவர்களெல்லாம் ஏதோ நாடகக் கலைமீது அபார மோகம் கொண்ட வங்கன்னு நினைக்கப்படாது. அப்படிச் சிலர் இருக்கலாம். ஆனுல் பெரும் பாலும் பலவிதமான குடும்பக் கவலை களையும் உத்தியோகப் பிரச்னைகளையும் கொஞ்ச நேரமாவது மறந்திருக்கத் தான் இம்மாதிரியான நாடக மன்றங் களிலும், பொழுதுபோக்குச் சங்கங்களி லும் சேருகிருங்க; அல்லது சேர்ந்து ஒரு சபாவையோ, சங்கத்தையோ உரு வாக்குகிருங்க. இதிலே அவங்க எதிர் பார்க்கிறது பணமோ, புகழோ இல்லை; ஓசியிலே கெட்டுப் போகிறதுக்குச் சான்ஸ் கிடைக்கணும். அதாவது, நாலஞ, எட்டஞ சந்தாப் பண' கொடுத்துவிட்டு ஒரு பெண்ணைத் தொட்டுப் பார்த்துடணும். அதுதான் அவங்களுக்கு வேண்டியது. அது இல் லேன்னு நாடகக் கலையாவது, நட்டு வாக்காளியாவதுன்னு வேற வழியைப் பார்த்துக்கிட்டுப் போய் விடுவாங்க.''

ஆச்சரியத்துடன் அவனையே பார்த் துக்கொண்டிருந்த முத்துசிவன், ''அப் படியா? எனக்கு இதைப் பற்றியெல்லாம் ஒன்றும் தெரியாதப்பா! நீ சொல்றது சரியாகவும் இருக்கலாம், இல்லாமலும் போகலாம். உன்னைப் போல் இருக்கிற ஆசாமிகள் இதிலே காலை விட்டு இறங்கு கிறதுதான் பரிதாபம்!'' என்ருன்.

''எப்படியோ, நான் அதை விட்டுக் கரையேறித் தலை முழுகி விட்டேன். இப்ப நான் ரொம்ப ஹாப்பியா இருக்கிறேன்.''

''என்ன பண்ணறே?''

ரட்சகன் சட்டென்று தன் ஜேபியி லிருந்து ஒரு விசிட்டிங் கார்டை எடுத்து அவனிடம் நீட்டினுன். அந்தக்


ஐடெக்ஸ்
அழகு சாதனங்கள்
ஐடெக்ஸ் கண்மை
ஐடெக்ஸ் பிந்தி
குங்கும் சாந்து
ஐடெக்ஸ் குங்கும் பேஸ்ட்
EYETEX
ARAVIND LABORATORIES
P. B. 1415, MADRAS-17


VEENA • VEENA • VEENA • VEENA • VEENA • VEENA • VEENA • VEEN
வீணா
Veena • எம்ப்ராய்டரீஸ்
நவீன டிசைன்கள். கண் நிறைந்த வண்ணங்கள்.
மனதைக் கவரும் சித்திர தையல்
வேலைப்பாடுகள் அமைந்தது.
மற்ற எல்லா சித்திர தையல் துணிகளுக்கும்,
வேலைகளுக்கும் மிகச்
சிறந்தவை.
தயாரிப்பாளர்கள்,
S. S. M. பிரதர்ஸ் (பி) லிட்.
த.பெ.எண்: 8, குமாரபாளையம் போஸ்ட்
(ஈரோடு வழி)
எங்கள் இதர உற்பத்திகள்:
சர்ட்டிங்ஸ், பட்டுத்துணிகள்,
சென்னை நகர
டிஸ்ட்ரிக்ட் ஏஜண்ட்,
அமர்ஜோதி டிரேடர்ஸ்
59, கிடங்கு தெரு, சென்னை-1
VE-103

கார்டிலே 'வசந்தி பார்மஸி' என்று அச்சிடப்பட்டிருந்தது.

''இப்போ நான் ஒரு மருந்துக் கடை வைச்சிருக்கிறேன். எல்லாம் என் மாமனுர் முன் பணம் போட்டு ஏற்பாடு பண்ணிக் கொடுத்தது'' என்ருன் ரட்சகன் பெருமை வழியும் குரலில். ''சரி; எனக்கு நேரமாகிறது. நீங்க எங்கே போகணும்? வீட்டுக்குத்தானே? நம்ம வண்டியிலே ஏறுங்க, கொண்டு போய் இறக்கிடறேன்.''

''வேண்டாம்பா. நான் டாக்சிக்காக நிற்கிறேன்.''

''ஓ,.... வேறு எங்கேயோ போக நீங்கன்னு நினைக்கிறேன். அப்படின்னு என் வீட்டு வரையிலுமாவது கொண்டு போய் விடறேன். அங்கிருந்து நீங்க டாக்சி பிடிச்சுக்கிட்டுப் போகலாம்.''

''சரி'' என்று காரில் ஏறி அமர்ந்து கொண்டான் முத்துசிவன். ''அப்பனே! எனக்கு ரொம்பப் பசியா யிருக்குது. எங்காவது ஓர் ஓட்டலண்டை வண்டியை நிறுத்து.''

''வேண்டாம், மிஸ்டர்! நான் ஓட்டலுக்குப் போவதையெல்லாம் விட்டுட்டேன். ஆனுலும் கவலைப்படாதீங்க. என் வீட்டில் டிபன் பண்ணிக்கலாம்.''

பலவிதமான விசித்திர ஒலிகளுடன் புறப்பட்ட கார் பதினைந்து நிமிடங்களுக்குப் பின் ரட்சகனின் வீட்டை நெருங்கியது. காரின் வேகத்தைக் குறைத்துக் காம்பவுண்ட் வாயிலினுள் செலுத்துவதற்காகத் திருப்பிய அவன் சட்டென்று பிரேக் போட்டுநிறுத்தினுன்.

''இறங்கிக்கிறீங்களா மிஸ்டர் சிவன்! இன்னொரு நாள் சந்திக்கலாம். குட் பை.''

திருதிருவென விழித்தபடியே தெரு வாசலிலேயே இறங்கிக் கொண்டான் முத்துசிவன். அவனைத் திரும்பியும் பார்க்காமல் காரை உள்ளே கொண்டும் போய்விட்டான் ரட்சகன்.

'நம்ம வீட்டில் டிபன் சாப்பிடலாம் என்று சொன்னவன் ஏன் இப்படித் திடீரென்று இங்கேயே இறக்கி விட்டுப் போகிருன்?' என்ற சிந்தனையுடன், பார்வையை நிமிர்த்தினுன் முத்துசிவன்.

அங்கே ரட்சகனின் மனைவி வசந்தி வராந்தாவில் நின்று கொண்டிருந்தாள்.

'தன் மனைவி இருக்கும்போது என்னை வீட்டுக்குள் அழைத்துச் செல்ல வெட்கப் படுகிருனு? அல்லது அவளை அறிமுகப் படுத்த அச்சப்படுகிருனு?'

அவமானத்தால் உடல் குன்றிக் குறுகிய முத்துசிவன் தலை குனிந்தபடி அங்கிருந்து வேகமாகத் திரும்பி நடந்தான்.

வந்தனுவின் வீட்டை அவன் அடைந்த போது இரவு மணி ஏழாகி விட்டது.



நிருபர்: ''வட இந்தியா வெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டு வந்திருக்கிறீர்களே தாஜ்மகாலும் உங்களுடைய புரோக்ராமில் இருந்ததா...?''

நடிகை: ''எனக்கு அதெல்லாம் தெரியாது. டிக்கெட் வாங்கியது எல்லாம் என் செகரட்டரிதான்; ப்ளீஸ் அவரைக் கேட்டுப் பாருங்கள்!''

அந்த வீடு பூட்டிக் கிடந்தது. அங்கு மிங்குமாகப் போய் எட்டிப் பார்த்தான். வீட்டின் எல்லாக் கதவுகளும் சன்னல் களும் சாத்திக் கிடந்தன.

திகைப்புடன் நின்ருன். பக்கத்து வீட்டுக்காரர் அவனைப் பார்த்துவிட்டு முள் வேலியோரம் வந்து, ''யாரைத் தேடறீங்க? அவங்களெல்லாம் கல்யாணத்துக்காகச் சேலத்துக்குப் போய் மூணு நாளாகுதே!'' என்ருர்.

''கல்யாணத்துக்கா? யாருடைய கல்யாணம்?''

''இந்த வீட்டுப் பெண் வந்தனுவுக்குத்தான்! அதிர்ஷ்டக்காரி, பெரிய இடத்தில் மாப்பிள்ளை கிடைத்து விட்டான். பிலிம் புரொடியூஸராம். இன்று காலை கல்யாணம் நடந்து முடிஞ்சுட்டிருக்கும்.''

முத்துசிவனுக்குக் கண்கள் இருண்டு கொண்டு வந்தன. காலுக்குக் கீழே பூமி நழுவிச் செல்வது போன்ற பிரமை, வெகு நேரம் அங்கேயே விக்கித்து நின்றிருந்த அவன், பிறகு எப்படித் தன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான் என்பது அவனுக்கே தெரியாது.

வீட்டில் அவனுடைய அம்மா பூஜை அறையில் முழந்தாளிட்டு உட்கார்ந்து ஏனோ விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள்.

காரணம் புரியாமல் கதவருகிலேயே தயங்கி நின்ருன் முத்துசிவன். அவனைப் பார்த்ததும் அன்னபூரணியம்மாளுக்கு மேலும் அழுகை அடைத்துக்கொண்டு வந்துவிட்டது. 'ஓ'வெனக் கதறி அழுதாள் அவள்.

இவ்வளவு நேரம் வராந்தா மூலையில் ஒதுங்கி நின்று கொண்டிருந்த ஓர் ஆள் மெல்ல உள்ளே வந்து, ''சார்! உங்க சின்னத் தம்பி வலம்புரி காலமாயிட்டாருங்க!'' என்ருன்.

(அடுத்த இதழில் முடியும்)

ஓசைகள் ஓசைகள் ஓசைக

ராஜம் கிருஷ்ணன்

நாற்புறங்களிலும் மலைத் தொடர்கள் சூழ்ந்த அந்தப் பள்ளத்தாக்கில் இருள் பரவ வரும் அந்த நேரத்தில், 'தனிமை' என்ற ஒன்றும் தன் வலையை விரித்துக் கொண்டிருக்கிறது. 'பவர் ஹவுஸ்' என்ற எழுத்துக்களைத் தாங்கிக் கொண்டு எப்போதோ ஒரு முறை அந்தப் பக்கம் தலை நீட்டி விட்டுப் போகும் உதகை பஸ்ஸும் வந்து போய் விட்டது போலும்! நீர்த் தேக்கத்துக்கு வடபுறமுள்ள ஒற்றைக் கடையில் ஆளரவத்தையே காணவில்லை!

வளைந்த சரிவுகளுக்கப்பா விருந்து வரும் சிற்றூரும் அதன் எதிர்க் கரையில் ஒளிக் கண்களாய் நிலவைப் பொழியும் மின் நிலையமும் சம்பத்துக்கு வீட்டிலிருந்தாலே தொலைக் காட்சியாகத் தெரிபவைதாம். அவனுடைய பழக்கப்பட்ட கண்களுக்கு, குழன்ருடிக் களைத்து 'டெய்ல்ரேஸில்' வந்து விழும் நீர்ப் பெருக்கும் கூடத் தெரியும். அந்தக் காட்சிகள் நெருங்கி நெருங்கி வருகின்றன. கம்பளிக் கோட்டுப் பைகளுக்குள் கைகளை நுழைத்துக் கொண்டு அடுத்த மின் நிலையத்துக்கான முன் நீர்த் தேக்கத்தின் கரையோரமாக நடந்து வரும் அவனோடு குளிர் தண்ணென்ற கரங்களைக் கன்னங்களில் வைத்து விளையாட வருகிறது. ஆறுயிரத்துச் சொச்ச அடிகள் உயரம்; நீரோட்டங்களிலும், அணைத் தேக்கங்களிலும், மனிதச் சுவடுகள் குறைந்த கானகப் பகுதிகளிலும் தவழ்ந்து வரும் காற்று, மழை ஓய்ந்து அடுத்த பனி தொடங்கும் நாட்களில் பின் எப்படி இருக்கும்? தேக்கத்தில் சில்லென்ற குளிர்ச்சிக்கேற்ற அமைதி. கண்ணறைக் காவலர்களின் அலுவலகத்தைக் கடக்கையில் பழக்கமான ஓசைகளெல்லாம் செவிகளில் விழுகின்றன. புல் பசைத்த ஒற்றைத் தடத்தில் ஏறி, மின் பொறிக் கூடத்தை எட்டிவிடுகிறான். ஆயிரமாயிரம் கிலோவாட் உக்கிரமுடைய மின்னுற்றலை, அந்தக் கானக மூலையிலிருந்து நீள நெடுகக் கொண்டு சென்று மக்களின் அன்றாட வாழ்வுத் தேவைகளுக்கு ஆபத்தில்லாமல் உதவுபடியாக்க வகை செய்யும் மின்பொறிக் கூடம். பல நூறு வண்டுகள் சேர்ந்து இசைக்கும் பண்ணெனியாய் அதன் இயக்க ஒலி 'ரீ...... ம்..... ரீ..... ம்...' என்று செவிகளை நிறைக்கிறது.

அலெக்ஸாந்தரும் சரவணனும் இரவு பணி முறைக்கு வந்து விட்டார்கள் போலிருக்கிறது. அருணாசலம் வாசலிலேயே கண்ணாக நிற்கிறான்.

''பஸ் போயிட்டதா, பிரதர் ?''

''தெரியலியே? போயிட்டது போலிருக்கு. கடையில் அரவமேயில்லே.''

உள்ளே அடி வைக்குமுன்பே ஓசைகளும், அவற்றின் பரிமாணங்களும் துல்லியங்களாகச் செவிகளில் விழுகின்றன.

ஓங்கி உயர்ந்த அமைப்பும், வழுவழுவென்ற பகுதிகளுமாகத் தோற்றும் கட்டடம் இயற்கையாம் தேவி தன் ஆற்றலாகிய இன்னருளை மனிதக் குழந்தைகளுக்கு மனமுவந்து நல்கும் திருக்கோயில் என்று நினைத்துச் சம்பத்து சிலிர்த்துக் கொள்கிறான். ஐந்து ஜனனிகளில் நான்கு ஓடிக் கொண்டிருக்கின்றன. அவைகளில் எழும் பேரோசை வெள்ளமாய்ச் செவிப்புலன்களை வசமாக்கிக் கொள்கிறது.

பகல் நேர அலுவலாளுல் பகலின் இயக்கங்களில் இந்த மின் நிலையமாகிய பல்லியத்தினின்று எழும் ஓசைகளை முழுமையாக உணர வாய்ப்பில்லாதபடி, பல்வேறு ஓசைச் சிதறுகள் வந்து குழப்பும். அண்மையிலுள்ள பணிக் கூடத்திலிருந்து பலவகைச் சம்மட்டி ஒலிகளும், மனிதக் குரல் ஒலிகளும் குறுக்கே



பாய்ந்து கொண்டிருக்கும்: இந்த ஓசைகளின் சீரான அதிர்வுகளைத் தரம் பிரித்து நுகரும் மனப்பாங்கும் அமையாது.

அவ்வப்போது , நிலைமை அறிவிக்கும் முகப்பில் சிவப்புக் கண்ணும் எந்தப் பகுதியி லும் தொய்வைக் காட்டும் ஒளி எரிய வில்லை. எல்லாம் சீர்; ஓ.கே.

அலெக்ஸாந்தர் ஹாப்ரிகன்ட் எண்ணெய்க் கிண்டியையும் துடைப் பஞ்சையும் எடுத்துக் கொண்டு போகிருன்: சம்பத்து அருண சலத்தைப் பணிப் பொறுப்பிலிருந்து அன் றையப் பொழுதுக்கு விடுவித்து அனுப்ப வாயில்வரையில் வருகிறுன்..

''பனி விழுகிறப்போலக் குளிருது பிரதர், இல்லே?''

''ஆமாம். இன்னும் குளிருமா?''

''பிச்சு உதறிடும். இன்னிக்கு ஏம்பா பஸ் வரவேயில்லே ? நான் அங்க மணியிலேந்து பார்க் கிறேன் ?''

''தெரியலியே?''

அருணசலம் ஒரு சினி மாப் பித்து. அந்தப் பஸ்ஸில் உதகைக்குப் போய்விட்டு, இரவுக் காட்சி பார்த்துவிட்டுக் காலேயில் திரும்புவது அவனுக்கு உகந்த பொழுது போக்கு. திரு மணமானவன் தானும். ஆனல் மனைவி ஊருக்குச் சென்றிருக்கிருளாம். மின்பொறிக் கூடத்தைக் கடந்து குட்டையாக ஓர் உருவம் வருவது தெரி கிறது. யார் அது.....?..

காக்கி உடுப்புக்கள். குஞ்சமில்லாத என். வி. வி. தொப்பி போல்



தலையில் ஒரு தொப்பி. முதுமையின் எல்லைக்குள் வந்துவிட்ட வடிவம்தான். இமைச் சதைகளும், கன்னங்களும் தொங்குகின்றன.

''குட்ஈவினிங் சார்....!'' என்று கட்டைத் தொண்டையை வெளியாக்குகிறான்.

''என்ன நாயுடு? எங்கே இப்படி வந்தாப் பலே ?''

''சும்மாத்தான் சார். சார் புதிசா ?''

''புதிசா? ஒரு மாசமாகப் போகுதய்யா! உன்னை எங்கே கண்ணிலேயே காணோம் ?''

''உடம்பு சரியில்லே சாமி. நேத்துக்குத் தான் எந்திரிச்சு வந்தேன். பேட்டி விட்டுப் போறுப் போவா?''

''ஆமாம். பஸ் வந்துட்டுப் போயிடுச் சாய்யா ?''

''கௌடர் ஷோவாகிட்டே ரிப்பேராம். ராமய்யன் லாரியிலே வந்திறங்கினேன்.''

''அட, கழுதை!'' என்று அலுத்துக் கொள்கிறான் அருணாசலம்.

''ஸாருக்கு.....'' என்று நாயுடு சம்பத்தைப் பார்க்கிறான்.

''....ஆள் ஒண்டிதான். புதி...சா வந்திருக்கிறார். கவனிச்சுக்க...'' என்றபடியே சம்பத்தின் முதுகில் ஒரு ஷொட்டு வைக்கிறான் அருணாசலம்.

''என்னங்க ஸார்! இந்தக் குளிரு காட்டிலே நமக்கு நீங்கள்ளாம்தானே மனிசாளுங்க. ஸாருக்கு மெட்ராஸா ?''

''ஆமாம், இவர் யாருன்னு தெரியலியே?'' என்று கேட்கிறான் சம்பத்து.

''நாயுடு, சொல்லும். அட, நான் வரேன். பஸ் வராப்பலே தெரியுது. ஓ. கே. பாய், 'குட் நைட்'' என்று விடை கொடுத்து விட்டுக் கம்பளிச் சட்டையை இழுத்துக் கொண்டு அருணாசலம் விரைகிறான்.

''ஸாருக்கு வாரம் மூனு சினிமாப் பார்க்கணும்......'' என்று நாயுடு சிரிக்கிறான். ''இந்த இடம் நாலு வருஷங்களுக்கு முன்னே நீங்க பார்க்கணும், சார். ஜே ஜேன்னு திருவிழாக் கும்பல். பணம் ஆத்துத் தண்ணிபோல இறைபடும். டாம் கட்டி, பவர்ஹவுஸ் கட்டி முடிஞ்சிச்சி. ஜிலோன்னு ஆயிடுச்சி. ஸாருக்கு இதுக்கு முன்னே?...''

''நான் போன மேயில்தான் படிப்பு முடிச்சேன். இது முதல்....''

''ஓ. அப்ப.... பட்டணத்துச் சந்தடியில் இருந்தவங்களுக்குப் பொழுது போகக் கஷ்டமாக இருக்குமே? நான் இங்கே முப்பது வருஷங்களாக இருக்கிறவன். ஃபாரஸ்டு சர்வீஸிலிருந்து பின்சின் வாங்கிட்டேன். அதோ தெரியுது பாருங்க, டாமுக்கு மேலே சோலையிலே வீடு. நாயுடுன்னு எல்லாருக்கும் தெரியும். எஸ்டேட் ஆஸ்பத்திரிலே நம்ம பொண்ணு வேலே செய்யுது. வாங்க ஸார், உங்களைப் போல ஃப்ரெண்ட்ஸ்ஞ உயிரு. வீட்டு ஆட வருவாங்க எல்லாரும்.''

''.....ஓ....?''

''ஆமாம். நம்ம பொண்ணு நிறையப் புத்தகங்கள் வச்சிருக்கு. அதுக்கு அது ஒரு பித்து. ஸாருக்குச் சாப்பாடு....?''

''சைவம். மெஸ்ஸிலே ஒரு நேரம், ஒரு நேரம் சமையல் செய்து கொள்கிறேன்.''

''ஒரு பையனை ஏற்பாடு செய்துக்கிடலாமே? வேலே பார்த்துக்கிட்டு அதுவும் செய்வது கஷ்டமாச்சே ? ஓ. கே. அப்ப வரேன் ஸார். நாளைக்குப் பார்க்கலாம் சார். குட் நைட்....!''

அவன் சாலையில் வண்டி வருவதைப் பார்த்துத்தான் அவ்வளவு விரைவாகப் போனான் போலிருக்கிறது. இரவு நேரப் பார்வைக்கு அதிகாரி வருகிறார். அவர் ஒரு முறை என்று ஒரு தடவை வந்து பார்த்து விட்டுப் போவார். ஆறு மணிக்கே வந்தாலும் வருவார்; இரவு ஒன்பது மணிக்கு மேல் வந்தாலும் வருவார்.

''என்ன, பாய்? நாயுடு சிநேகம் பிடிச்சிட்டியா?'' என்று அலுவலக வரம்புக்கு அப்பால் சென்று கேட்கிறார்.

சிநேகம் பிடித்துவிடவில்லை. ஆனால் பிடித்தது சரியா தவறா என்பதை ஊகிக்க முடியவில்லை. ''இப்பத்தான் ஸார், பார்த்தேன்.''

''பார்த்தாயா?.... சரி, நல்ல பையனாக இருக்கிறாய். அதுதான் சொன்னேன். ஓ.கே. குட் நைட் !'' என்று சொல்லி விட்டு வண்டியில் ஏறிக் கொள்கிறார்.

அவனுடைய சகபாடியான சர்மா அநுபவம் பெற்ற ஆசாமி. அநேகமாகக் குறித்த நேரம் சென்றபின்தான் வருவார். வீட்டில் மனைவி ஒரு நோயாளி. திருமணப் பருவத்தில் இரண்டு பெண்கள் இருக்கிறார்கள். இன்னும் இரண்டு பையன்கள் ஊரில் படிப்பதாகக் கேள்வி.

''பாஸ் வந்திட்டுப் போயிட்டாப்பலே இருக்கு!'' என்று அமைதியாகக் கூறிக் கொண்டு உள்ளே நுழைகிறார் சர்மா.

அவருக்குப் பேச்சு பிடிக்காது. சிகரெட் குடிக்கும் இளைஞர், பெரியவர், அதிகாரி எல்லோரிடமும் அவருக்கு வெறுப்பு உண்டு. அருணாசலத்தைக் கண்டாலும் முகம் சுளிப்பார். பிரிட்டோவானாலும் ஒதுங்கிப் போவார். சம்பத்திடம் இந்தக் காரணத்தினால் ஒரு தனியான பரிவு.

''எம்பா, எல்லாம் ஓ. கே.தானா? எங்கோ 'லோட்' அதிகமாயிருக்காப் போலிருக்கு?''


மனிதரின் பதினெட்டு ஆண்டு அநுபவமும் இந்த ஓசைகளில் முழுகி எழுந்து கிடைத்திருப்பதுதான். ஆம். அந்த ரீங்கார இசையின் ஸ்தாயி உயர்ந்து உய்யென்று குதிக்கிறதே ?

உடனே தொலைபேசியைச் சுழற்றி எங்கோ தொண்ணூறு மைல்களுக்கப்பால் ஒரு தொழில் நகரின் எல்லையில் அந்த நகரையே இயக்குவிக்கும் ஆற்றலை விநியோகம் செய்யும் மின்பொறிக் கூடத்தை அழைக்கிறார் அவர்.

''ஹலோ... ஹலோ...! பவர்ஹவுஸ் ஒன் காலிங்..... சிங்கம்பட்டி. ஸப் ஸ்டேஷனா ?'' என்று அவருடைய குரல் அங்கே கேட்கும் ஓசைகளை அமுக்கிக் கொண்டு ஒலிக்கிறது.

எங்கோ ஓர் இடத்தில் மின் ஆற்றலை அதிகமாக இழுத்துக் கொள்கிறார்கள். அந்த இழுப்புக்கு இசைந்து கொடுக்கும் ஓசை.

இந்த இருபத்திரண்டு நாட்களில் இந்த ஓசைகளின் உயர்வில், அதிர்வில், இழுமென்ற கார்வையில், அந்தப் பேரியக்கத்தின் நுட்ப நுட்பமான மாறுதல்களையெல்லாம்கூட உணர்ந்து கொள்ளும் பக்குவம் பெற்று வருவதுதான், எத்தனை மகிழ்ச்சியாக


எடுப்பான தோற்றம்
ஒரே சீரான அமைப்பு
வலுவான கட்டமைப்பு
குறைந்த மின்சாரச் செலவில் அதிகமான காற்று வீச்சு
கேஸல்ஸ் மின்விசிறிகள்
ஆயுட்காலமளவும் அயராத உழைப்பிற்கு
விற்பனைக்கு விடுவோர்:
எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்
heros'-BE-40-A TAM

சிறப்புச் சிறுகதை

இருக்கிறது? புத்தம் புதிய பாடல் ஒன்றைக் கற்கும் பூரிப்பு; கற்றபின் அதையே இசைக்கும் சுவாரசியக் கிளர்ச்சி.

மணிக்கு மணி இயங்கும் ஜனனிகளின் பல்வேறு பகுதிகளின் ஓட்டங்களை, ஒரு வளரும் குழந்தையின் உடலைப் பேணும் தாயாரைப் போல் கண்காணித்துப் பேணும் இந்தப் பணியில் இடையே கிடைக்கும் நேரங்களில் சர்மா ஸ்ரீ ராம ஜயம் எழுதுகிறார்; அலெக்சாந்தரும் ராமன் குட்டியும் சரவணனும் வெளியே சென்று சற்றே புகை குடிக்கிறார்கள்.

சம்பத்தோ இந்த ஓசைகளிலேயே முழுதும் ஒன்றுகிறான். பேரோசைக்குரிய அதிர்வோடு ஆப்பு ஆப்பாய் இணைந்திருக்கும் பஞ்சக் கரங்களிடையே பிரவாகமாக விழும் ஓசை. பரை படங்களில் நீரோட்டத்தைக் காட்ட அடர்த்தியும் நீளமுமாய் நீலம் தீட்டுவார்களே, அப்படி ஓர் ஓசை. இந்த ஓசையை அடி நிலையாகக் கொண்டு கிய்ங்யம் கிய்ங் என்று கதி தவறாமல் ஜனனிகள் சுழலுகின்றன. ஒன்று ஆதாரம்; இன்னொன்று இசை. ஒன்று அடர்ந்த நீரோட்டப் பரப்பு. இன்னொன்று அதில் ஆடி வரும் அன்னப் படகு. ஒன்று இடையறு ஓட்டம்; இன்னொன்று ஆடி அலைந்து மிதக்கும் ஒளிப் பூக்களின் கோவை. ஆதாரமும் ஆடி அசையும் ஜீவனுமாக அருகே வர வர, வண்ண வண்ணப் பூவலைகளாய்.....

ஓ....! யார் இவள்?

அவன் பதினைந்து மாசங்கள் வேலை கிடைக்காமல் வீட்டுக்குள் புழுங்கிக் கிடந்தானே, அந்த நாட்களில் அடுத்த மாடியில் உள்ள சங்கீத வித்யாலயத்தில் மாலை நான்கு மணிக்கு அவர்கள் வீட்டு ஜன்னலுக்கு நேராக ஒரு மங்கையின் முகம் தெரியும். அவளோ என்று கூர்ந்து பார்க்கிறான். அவள் இல்லை இவள். இவள் இரத்தமும் சதையுமான வடிவாகவே தோன்றவில்லை.

இரத்தமும் சதையுமான அழகிய இளம் பெண்ணொருத்தியை வாலிபப் பருவத்துக்குரிய கிளர்ச்சியின் ஆவலோடு நோக்கவே கூடாது என்ற கடுமையான விதியொன்றைப் பழக்கத்தில் தனக்குத் தானே விதித்துக் கொள்ளும் மனத்தின் சமாதானம் தானோ? அவள் மின்னற் பூக்களால் உருவானாற்போல் இருக்கிறாள்.

''நீ யார்? அடுத்த வீட்டு ஜன்னலில் மலரும் பூ முகத்துக்குரியவளா? நீலாவின் எத்தனையோ தோழிகளில் ஒருத்தியா? நிலவிலிருந்து இறங்கி வந்தாயோ? மின்னற் கொடியோ?''

அவள் மாலை போன்று தன் கைகளால் அவனுடைய கழுத்தை அணைவது ஓர் இன்பப் பரவசமாக இருக்கிறது. ஆனால் இதை அவன் திருட்டுத்தனமாக அநுபவித்தாலும் அநுமதிப்பதற்கில்லை.

ஓட்டுக்குள் சுருங்குவதுபோல் சுருங்கிக் கொண்டு அதை விலக்குகிறான்.

''இந்த விளையாட்டெல்லாம் வேண்டாம்; ஆமாம், எட்டிப் போ!''

''ஓ ... மிகவும் கோபிக்கிறீர்களே? நான் வந்தது சந்தோஷமாக இல்லை?''

''அதை எப்படிச் சொல்வது? எனினும், அநுமதிப்பதற்கில்லை.''

நீலா காலையில் எட்டரை மணிக்குப் புறப்பட்டு எங்கோ கடற்கரை நிலையத்துக்கப்பாலுள்ள அலுவலகத்துக்குப் போய் மாலையில் வாடித் துவண்டு வருகிறாள். கமலாவும் அக்காவின் அடிச் சுவட்டில் செல்லத் தயாராகி விட்டு உட்கார்ந்திருக்கிறாள். ராஜுவுக்கு இன்னும் மூன்று வருஷங்கள் காலேஜில் படிக்க வேண்டும். அம்மாவின் கழுத்திலுள்ள முப்பது சவரன் நகைகளும் பாங்கியில் இருக்கின்றன. மாலாவின் கல்யாணத்துக்கு வாங்கிய கடனுக்கு அப்பாவின் எழுபத்தெட்டு ரூபாய்ப் பென்ஷன் போய் விடுகிறது. புரிகிறதா? பதினைந்து மாசங்கள் 'டிவால்யூட் இன்ஜினியர்' என்று வேலை கிடைக்காமல் முடங்கி முடங்கி உற்சாகம் இழந்தபின், நரக வாதனையை அநுபவித்தபின் இந்தத் தனிமைக்கு, குளிருக்கு வந்திருக்கிறேன்.''

அவள் முகத்தைக் கை மலர்களால் மூடிக் கொண்டிருக்கிறாள். எனினும் அந்தக் கண்கள் அவனைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

''அப்படியானால் நான் போகிறேன்.''

''போகக் கூடாது. கோபமா? ஆமாம், நீ யாரென்று சொல்லவே இல்லையே?'' என்று செவியோடு கேட்கிறான்.

''நான்....நான் உங்களுடனேயே இருக்கப் போகிறவள்......''

அவனுடைய கைப் பிடியிலிருந்து நழுவிப் போகிறாள். அவனுடனேயே இருக்கப் போகிறவள். அப்படியானால்....

''டீ ஸார், டீ....!''

ராமன் குட்டி தேநீரைக் கொண்டு வந்திருக்கிறான்.

லூப்ரிகன்ட் என்ஜெயின் வழுக்கிச் செல்லும் இதம்; கம்பளி உடுப்பின் கதகதப்பு; தேநீரின் வெம்மை கூடிய இனிமை. ஸோய் ஸோய் ஸோயென்று சீறிப் பாயும் நீரோசை. அன்னப் படகும் அவளுமாய்ப் பூக்கனவுகள் விரிக்கும் சிங்காரங்கள். அவனுடைய வாழ்வின் தனிமைகளையும் சோர்வுகளையும் கரைக்கும் ஓசைகள்......!

"இந்த இருபத்து மூணு வயசுக்கு நாலு நாட்கள் வேறு வீட்டில் இருந்து பழகியதில்லை; எப்படித்தான் இருக்கப் போகிறானோ? குளிர் வேறு......'' என்று அவனுடைய அம்மா சொல்லாமலே கண்களை அடிக்கடி துடைத்துக் கொண்டாள். நீலா கண்களும் மூக்கும் பழமாய்ச் சிவந்துவிடக் குழந்தை போல் அழுதாள். கமலாவோ தேம்பித் தேம்பி அழுதாள்.

''சம்பத்து, போயிட்டு வரியா? ஜாக்கிரதையாயிரு.... கடுதாசி போடு....'' என்று அப்பாவும் அவன் வண்டியிலேறும் போது விழியோரத்தைத் துடைத்துக் கொண்டார். அவனுக்கும் அழுகை வந்துவிடும் போலிருந்தது.

''பதினஞ்சு மாசமா வேலை இல்லாமல் இருக்கிறானே என்று இருந்தபோது வீட்டில் உட்கார்ந்திருக்கிறானேன்னு பாரமா இருந்தது. இப்ப...'' அம்மாவுக்கு நெஞ்சு அடைத்

தது. நீலகிரி எக்ஸ்பிரஸ் நகர்ந்து விட்டது. திடீரென்று நினைவு வந்தாற் போல் எல்லோரும் கண்ணீருடன் கைகளை ஆட்டினார்கள்.

''இங்கே மிஞ்சி மிஞ்சி நூறு ரூபாய்கூடச் செலவழியாது: எனக்கு வேலை பழகிப் பிடித்திருக்கிறது. மெஸ்ஸில் பகலுணவுச் சாப்பிட்டுக் கொள்கிறேன். இரவுக்கு வீட்டிலேயே செய்து கொள்கிறேன். வசதியாக இருக்கிறது. நீலாவுக்கு வரன் பாருங்கள்...'' என்றெல்லாம் எழுதினான். நான்கு மாதங்களில் அவனே ஆயிரம் ரூபாய் சேர்த்து விடுவான். இந்த ஆண்டு நீலாவுக்கு மணம் முடித்து விட்டால், கமலாவுக்கும் அடுத்த வருஷம் வரன் பார்த்து விடலாம். ராஜாவின் படிப்பு மூன்று வருஷங்களில் முடிந்து போகும். பிறகு.... பிறகு....

''டிர்....: டிர்......'' அவனைத் தேடிப் புதியவராக யாரோ வந்து அழைக்கும் ஒலி என்று அதன் இடைவிடாத் தொடர் அறிவிக்கிறது. பெரிய கும்பிடாகப் போட்டுக் கொண்டு தொங்கும் கன்னங்களும் சுருங்கிய விழிகளுமாக நாயுடு நிற்கிறான்.

''ஓ, வாங்க, வாங்க.....''

வராந்தாவில் ஏறி நிற்கிறான். ''ஸாருக்கு இன்னிக்கு ஆஃப் டியூட்டின்னுங்க. வெயில் அடிக்குது. ஒரு வேளை ஊட்டிக்குப் போயிருப்பீங்களோன்னு நினைச்சேன்......''

''போகலே!''

''அப்ப நான் வந்தது நல்லதாப் போச்சு. வாங்க ஸார், போகலாம். நம்ம வீட்டுப் பக்கம். வெயிலடிக்குது, நம்ம கார்டனிலே உட்கார்ந்து சீட்டாட பிரன்ட்ஸ் வந்திருக்கிறாங்க....''

''சீட்டு நான் ஆடுவதில்லே. புத்தகங்கள் இருக்குன்னு பார்க்கலாம்....''

''ஓ, நிறைய இருக்குது ஸார்....''

முழுக் கை ஸ்வெட்டரை மாட்டிக் கொண்டு சம்பத்து கதவைப் பூட்டிக் கொண்டு கிளம்புகிறான். ஒருகால் காக வைத்துச் சீட்டாட அழைப்பானோ? வேறு ஏதேனும்... சை....அவனுக்கு ஏன் இன்னமும் தாய்க்கு அடங்கிய பாப்பாவைப்போல் ஒரு தயக்கம் போகவில்லை? பொறுப்புள்ள வேலைக்காரன், சம்பாதித்துக் குடும்பத்தைத் தாங்கக் கூடிய தலைமைப் பதவிக்கு வந்து விட்ட ஆண்மகன்; இதற்கெல்லாமா பயங்கள், தயக்கங்கள் ?

நீர்த் தேக்கத்தைக் கடந்து தேயிலைச் செடிகளிடையே புகுந்து சரிவில் அவர்கள் ஏறுகிறார்கள். அதற்கும் அப்பால் ஸில்வர் ஓக் மரங்கள் நிறைந்ததொரு சூழலில் ஒரு சிறிய ஓட்டு வில்லை வீடு. வாசலில் பூக்காததொரு செடி பெரிய பெரிய இலைகளுடன் விளங்குகிறது. வஸந்தத்தில்தான் பூக்கும் என்று நாயுடு கூறுகிறான். வேறு பூஞ்செடிகளையே அந்தத் தோட்டத்தில் காணவில்லை. புல் தரையில் சிகரெட் பெட்டிகளும், துண்டுகளுமாகக் குப்பை சேர்ந்திருக்கிறது. கண்ணாடி ஜன்னல்களுக்குள் மூடிய இத்தடி அகல வராந்தாவில் ஒரு கோஷ்டி சீட்டாடிக் கொண்டிருக்கிறது. கறுப்பு டைட் சராய்களும், கம்பளி ஸ்வெட்டர்களும் அணிந்த இளைஞர்கள். 'க்ளாட் டுமீட் யூ!'' என்று எல்லோரும் ஏதோ சடங்குபோல் கையைக் குலுக்கிவிட்டு ஆட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

''க்ளாட் டு மீட்!'' என்று வாரி வீசும் மணங்களோடு ஒரு மெல்லொலி அவனைத் திரும்பிப் பார்க்கச் செய்கிறது.

''நம்ம பொண்ணு ஸார். சரஸ்வதின்னு தான் பேர் வச்சது. ஆனால் ரோஸின்னுதான் இங்கே எல்லோருக்கும் தெரியும்'' என்று சுருங்கிய கண்களில் ஒளி துலங்கச் சிரிக்கிறான் நாயுடு.

சதைப்பிடிப்பான மாநிற மேனி. உருண்ட முகம். கன்னங்கள் துலங்கும் இடங்கள் அந்த இடத்தில் கிடைக்கும் ஒரு வகை பீச் கனிகளைப் போல் கருஞ் சிவப்பாகச் சிவந்திருக்கின்றன. மலைவாழ் மங்கையருக்கே உரித்தான கன்னச் சிவப்பா அல்லது சாயமா என்று அவனால் இனம் காண முடியவில்லை. கூந்தல் அலைபோல் முன்புறம் உயர்ந்து தோள்களில் சரிந்து விழுகின்றது. செவியருகில் கருஞ்சிவப்பில் வெல்வெட்டைப் போல் தோன்றும் ஒரு ரோஜாவைப் பறித்த இலையுடன் செருகிக் கொண்டிருக்கிறாள். கையில்லாத கச்சுக்குக் கீழ், மொழுமொழுவென்று உருட்சியான கைகள் கிளர்ச்சியூட்டக் கூடியதாக இருக்கின்றன. பிளாஸ்டிக் சரிகைக் கொடிகள் ஓடும் ரோஜா நிற நைலான் சேலை, அடக்கமற்ற வண்ணமாகக் கவருகிறது. வராந்தாவில் உள்ள சிறு மேசை மீது ஒரு ரிகார்டு பிளேயரும் இசை நாடாச் சுருள்களும் இருக்கின்றன.

''ஸாருக்குப் புத்தகங்கள்தான் பிடிக்குமாம், ரோஸி! சீட்டு ஆடமாட்டாராம்!'' என்று நாயுடு விள்ளுகிறான்.

''ஓ....? அப்ப என்னைப் போல. உட்காருங்க ஸார். உங்களுக்கு பீட்டில்ஸ் மியூஸிக் பிடிக்குமா?...''

சாயம் தோய்ந்த இதழ்கள் அவள் பேசும் போது தேவைக்கதிகமாக வளைந்து, அகன்று கவர்ச்சியைக் கொட்டுகின்றன.

பழைய மர நாற்காலிகள், உட்காரும் மெத்தையில் 'பீ ஹாப்பி' என்ற பூநூல் எழுத்துக்கள்.

''உட்காருங்க ஸார்...''

ஜவ்வு மிட்டாய் பார்வைக்கு இனிப்பூட்டுவது போலிருந்தாலும், வாயில் வைத்த கணமே வெறும் ஜவ்வு என்று ரப்பராக இழுத்தாலும் அதைத் துப்பிவிடத் தோன்றுகிறதா?

அவன் உட்காருகிறான். ''...தென் என்ஜாய் யுவர்ஸெல்வ்ஸ்'' என்று சொல்லிவிட்டு நாயுடு உள்ளே செல்கிறான்.

ரோஸி ஏதோ ஒரு நாடாச் சுருளை இணைத்துச் சுழல விடுகிறாள். ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் இரண்டு மூன்று குரல்கள் கத்துகின்றன. பின்னணியில் சில விசித்திரமான ஒலிகள். இந்த ஒலிகளுக்கு எல்லோரும் கைகளையும் கால்களையும் உடலையும் அசைத்துத்தானாக வேண்டும் போலிருக்கிறது!

''எனக்கு இந்த ம்யூஸிக்னு உயிர்....'' என்று மீண்டுமொரு முறை சொல்லிவிட்டு ரோஸி உட்கார்ந்தவாறு உடலை அசையத் தாளம் போடுகிறாள்.

''சம்பத்து...! ஜாக்கிரதையா இருப்பா'' என்ற அப்பாவின் குரல் அந்த டொர டொர இசைக்கு மேல் நினைவில் ஒலிக்கிறது.

சில மாதங்களுக்கு முன் பெரியப்பா மகன் ரங்கமணி அமெரிக்காவுக்குப் போய்விட்டு, டேப் ரிகார்டர் போன்ற வரிசைகள் எல்லா வற்றுடன் அவர்கள வீட்டில் வந்து தங்கி யிருந்தான். அப்போது வீட்டில் ஏரே கூட் டம். அத்தை மகள் சகுந்தலாவின் குழந்தை களான நான்கு வால்கள், கீச்சுக் குரலில் வாச் வாச்சென்று சண்டை போடும் அவன் தங்கை பானு. குறட்டை மன்னரான பெரி யப்பா எல்லோரும் வந்திருந்தது போதா தென்று கோடை விடுமுறை வேறு வந்திருந் தது. ரங்கமணி யாயா சாசா, காகா என்று வரிசை சொல்லிக் கொண்டு ஒருவருக்கும் புரியாத ஓசைகளைப் 'பாப்' மியூஸிக் என்று நான் முழுதும் ரஸித்து, ரஸிக்க வைத்துத் தான் மறு வேலை பார்ப்பது என்று தலை நோவைச் சுற்றிச் சுற்றி அழைத்துக்கொண் டிருந்தான். ஒரு நாள் அவன் எதற்கோ வெளியில் சென்றிருந்தபோது சம்பத்து ஒரு வேலை செய்தான்.

''டேய், ரங்கமணி! என் பிரண்டுகிட் டேந்து வாங்கி வந்தேன். மிக மிக லேடஸ்ட் பாப் மியூஸிக்'' என்று ஒரு நாடாச் சுருளைப் பொருத்தினான். ''இதில் என்னென்ன இசைக் கருவிகள், யாரார் குரல்கள் என்று கண்டுபிடி பார்க்கலாம்?''

ரங்கமணி உற்று உற்றுக் கேட்டான்.. ''ட்ரம்... சிதார்... அட.... சிதார் கூடவா?'' என்று துள்ளிக் குதித்தான். சம்பத்துக்குப் பழக்கமில்லாத, வாயில் நுழையாத பெயர் களை யெல்லாம் சொல்லிப் பட்டியலை நீட்டி னான். ''வொண்டர்ஃபுல், இதை என் கலெக் ஷனில் சேர்த்துக் கொள்ள வேண்டுமே?'' என்றான்.

''பேஷாகச் சேர்த்துக் கொள். ஒரு பத்து டாலர் ரூபாயைத் தள்ளிவிட்டு. இது நம் வீட்டுப் பிற்பகல் ஒலிகள்'' என்று இடி இடியென்று சிரித்தான் சம்பத்து.

''டேய், உனக்கு அபாரமான சங்கீத ஞானம்டா. நீ அதை வாழ்க்கையில் அப்ளை பண் ணாமல், வறட்டுப்படிப்புப்படிச்சிருக்கியேன்னு அநுதாபப்படறேண்டா'' என்று வருந்தினான்.

அந்த ஒலிக் கதம்பம் நினைவுக்கு வருகிறது.

ரோனி அவனுடைய பொருந்தாமையைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

''உள்ளே வந்து 'புக்ஸ்' பார்க்கிறீங்களா நிறையச் சேர்த்து வச்சிருக்கேன். எனக்கு அது ஹாபி...''

சீட்டாடுவதாகவே சொல்லி யிருக்க லாமோ என்று தோன்றுகிறது. உள்ளே கத கதவென்று ஓர் அறை. ஓர் இரட்டை சோபா வையும், குட்டை வட்டமேஜையையும் தவிர ஒரு கண்ணாடி பீரோ நிறையப் புத்த கங்கள் தெரிகின்றன. அலமாரிக்கேற்ற 'டைஜெஸ்ட்' புத்தகங்களல்ல. பழுப்பேறிய பாக்கெட் புத்தக வரிசைகள். மலிவுப் புத்தகங்கள். 'செக்ஸ், கிரைம்'... பிரிண்ட் பட்டவைகளோ எல்லாம் என்று புரிந்து கொள்ள அவனுக்கு அதிக நேரமாகவில்லை.

''உட்காருங்க ஸார்'' என்று அவனை அந்தச் சோபாவில் அமர்த்துகிறான் ரோனி. அலமாரி யிலிருந்து ரோஜா நிறச் சாய விரல் நுனிகள் படிய, எழெட்டுப் புத்தகங்களை அடுக்காக எடுத்து அவனிடம் கொடுக்கிறான்.



''அப்பா! வட துருவம் - தென் துரு வம் என்பதைப் பற்றி இரண்டு கட் டுரைகள் எழுதிண்டு வரச்சொன் னார்கள். நீயும் அம்மாவும் ஒவ்வொரு கட்டுரை எழுதிக் கொடுங்கோ!''

சம்பத்துக்கு வழிதப்பிவிட்ட குழந்தை போல் பயம் ஒரு புறம்; அதை மீறி எழும் எதிர்ப்பு ஒரு புறம். புத்தகங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்க்கிறான். எல்லாம்...எல்லாம்...

அவனுக்கு எழுத்துக்களே புலப்படவில்லை.

''எப்படி இருக்கு ஸார்? எல்லாம் அப் ஸார்பிங்கா இருக்கும்...'' என்று ஒவ்வொன் றாகப் புரட்டி வைக்கிறான்.

எப்போதுமே நாவல் படிக்க அவன் பொருந்தியதில்லை. தினத் தாள்களிலும் பெரிய செய்திகளையும், விளையாட்டுப் பகுதி யையுமேதான் படிப்பான்.

ரோனி அந்த இசைநாடாவை நிறுத்த வில்லைபோலும்! ஒன்றுக்கொன்று இணையாது தாவித் தாவிக் குதிக்கும் சுர ஒலிகள்தான் செவிகளை நிறைக்கின்றன. மூளையில் கருண்ட உணர்வுகளைக் கண்டி எழுப்பும் ஒலிகள்.

''சம்பத்து ஜாக்கிரதையடா...'' என்று அப்பா எதற்குச் சொன்னார்? டக்கென்று புத்தகங்களை விலக்கி விட்டு அவன் எழுந் திருக்கிறான்.

''என்ன ஸார்? தோட்டப் பக்கம் போக லாமா?...'' அவன் வெளியே வரும்போது அவனும் ஒட்டிக் கொண்டு வருகிறான்.

''...நாயுடு எங்கே?...''

''ஹஹ்ஹ....'' என்று அவன் ஒரு சிரிப் பைக் கலகலத்துக் கொட்டுகிறான். ''அப்பா இப்படித்தான் இருந்தாப் போல் இருந்து சுத் தப் போயிடுவார். நாம் எங்கே போகலாம்?''

''இல்லே... தபாலில் ஒரு கடிதம் போடணும்... நான் வந்து...'' என்று சம் பத்து தடுமாறுகிறான்.

''என்ன ஸார், கொஞ்சம் பிளஸண்டாப் போது போகும்னு நெனச்சேன்.... ஏன் ஸார், இங்கே உங்களுக்குப் பிடிக்கலியா?''

''ஓ, அதெல்லாம் இல்லே... வந்து, கட்டுப் போயிட்டா, தபால் போட முடியாதே?...''

''எனக்கு வருத்தமா யிருக்குது. அப்ப நாளைக்கு வர்றீங்களா ஸார்?''

''நாளைக்கா?''

''ஆமாம் ஸார். நாளைக்குத்தான். நாளைக்கு அப்பா இவங்க கூட 'ஷிகார்' போயிடுவார். நீங்க வராட்டி எனக்கு 'போர'டிக்கும். நிச்சயமா வரணும்.''

''...ஹ...... நாளைக்கில்லே.... நாளைக்கு வேலை இருக்கு... நான் வரேன்...''

மலரில் சுருக்கென்று ஊசி தைத்தாற் போன்ற உணர்வுடன் ரோசத்தில் விரைவாக நடக்கிறான்.

''ஹே... நீயும் ஓர் ஆண்மகன்!''

ரோஸி மேட்டின் மேல் நின்று இன்னும் அவனைப் பார்த்துச் சிரிக்கிறாள். மலை முகடுக ளெல்லாம் கூடச் சிரிக்கின்றன. எதிரே அதிகாரியின் வண்டி வருவது கூட எச்சரிக்கை கொடுத்த பின்னரே தெரிகிறது. சட்டென்று ஓரமாக ஒதுங்கிக் கொள்ளுகிறான். அவர் அவனையே உற்றுப் பார்த்தாற்போ லிருக்கிறது.

''நாயுடு சிநேகம் பிடிச்சிட்டியா?'' என்று கேட்டாரே? அவர் என்ன நினைத்திருப்பார்?

அன்றெல்லாம் அவன் வீட்டுக்குள் முடங் கிக்கொண்டாலும் ரோஸியின் சிரிப்பு அவ னுடைய ஒருமையைக் குலைக்கிறது. கம் பளிப் போர்வைக்குள் குளிர்ச் சரங்களாக நிறைந்து அவனை உலுக்கி உலுக்கித் ''தனி மையா?'' என்று கேட்டுச் சிரிக்கிறது. அந்தச் சிரிப்பில் சாயம் தீட்டிய இதழ்கள் வளைந்து அகன்று குவிந்து, அவனுடைய உறக்கத்தை விரட்டியடிக்கின்றன.

விடியற்காலையில்தான் அவன் உறங்குகிறான்.

விழிப்பு வரும்போது 'டிர்ர்ர்...' ரென்று அழைப்பு மணி தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக்கிறது.

நிகிலின் திரியாய், நாயுடுவின் நினைவுதான் சிந்தையில் ஏறுகிறது. காலையில் துரத்திக் கொண்டு வந்து விட்டானா?

சம்பத்து அசையவில்லை. ஆனால் மணி யொலியோடு கண்ணாடிக் கதவும் ஓசைப் படுகிறது. கைகளைக் கட்டிக் கொண்டு மெள்ள எழுந்து வந்து கண்ணாடி வழியே குனிந்து எட்டிப் பார்க்கிறான். அருணாசலம்!

''என்ன பிரதர்! உடம்பு சரியில்லையா? டெலிபோனிலே கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பார்த் தேன். எடுக்கவேயில்லை. சரி நேரே வந்து பார்ப்போம்னு வந்தால் பத்து நிமிஷமா அடிக் கிறேன் பிரதர்... என்ன சமாசாரம்?...''

''ஓ... ஒன்னுமில்லே உள்ளே வாங்க பிரதர். எனக்கே தெரியாமல் தூங்கிப் போயிருக்கிறேன்...''

''நல்ல தூக்கம்பா! மணி என்ன தெரி யுமா? பத்தரை. சும்மாத்தான் தூங்கினியா ஏன் பிரதர்?''

''...சும்மாத்தான்... ட்யூட்டி சாயங் காலம்தானேன்னு நினைப்பு...''

''சம்பத்து, ஒரு சின்ன ஃபேவர் செய் யணுமே?...''

''சொல்லுங்க பிரதர்.''

''நம்ம வீட்டிலே இன்னிக்கு வராங்க. நான் 'மீட்' பண்ண ஊட்டிக்குப் போயிட்டே இருக்கிறேன். நாலு மணி வரை பிரிட்டோவே இருக்கிறேன்னாரு. நீ கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கிறயா பிரதர்?''

''ஓ... நிச்சயமா...''

அருணாசலம் விரைகிறான்.

ஓங்கி உயர்ந்த மின் நிலையக் கட்டிடம் காப்பிடமாகத் தோன்றுகிறது. அந்த ஓசை களில் அவன் எல்லாவற்றையும் மறந்துவிட இயலும். நினைக்கும்போதே ஓர் ஆறுதல்.

நீர்த்தேக்கத்தின் கரையில் நடக்கும் போது, அவனையும் அறியாமல், தேயிலைச் சரிவுக்கப்பால் கேட்டைத் திரும்பிப் பார்த்து விடுகிறான். மின்பொறிக் கூடத்தின் பழக்க மான ஒலிகளுக்குப் பதில் அவளுடைய சிரிப்பு அவன் செவிகளில் விழுகிறது. செஞ்சாய இதழ்கள் அகல, ஒரு விரலை மடித்துக் கடிக் கும் பாவனையில்...

குத்துப் பட்டாற்போல் ஓர் அசாதாரண விரைவுடன் மின் நிலைய வாயிலை வந்து அடைகிறான்.

ஜூரப்ரிகென்ட் எண்ணெய்... துடைப்பஞ்சு ஓ...சைகள்!

முகப்பில் விளங்கும் பதிவுகளைப் பார்க் கிறான். ''நான் கொதிக்கிறேன். வெம்மை. உருகுகிறேன்...'' என்று ஒரு கண் பளிச் சென்று சிவப்பொளி காட்டுகிறது. எல்லாம் ஓ.கே. இல்லை. பேரோசைகளை வகையாக்கிக் குவித்துக் கொண்டு கிய்ங் கிய்ங்கென்று ஒலி எழுப்பச் சுழலும் ஜனனியின் கருவறையின் வெளியே பயபக்தியுடன் நின்று பார்வை யிடுகிறான்.

எண்ணெய்க் கிண்டியுடன் உதவியாளனாக நிற்கும் சரவணன் சூடு பற்றிய இடத்துக்குப் பதமான எண்ணெயிட்டு நலம் செய்கிறான். அதிகாரி வந்து போகிறார். சர்மா வழக்கம் போல் தாமதமாக வருகிறார். மெஸ்ஸி லிருந்து ராமன்குட்டியைத் தோசை வாங்கி வரச் சொல்லி, சம்பத்து இரவுப்பாட்டை அங்கேயே முடித்துக் கொள்கிறான்.

சர்மா ஸ்ரீராமஜெயம் எழுதும்போது, சம் பத்து கற்பனை அரங்கை விரித்துக்கொண்டு அந்த ஓசைகளின் லயத்தில் 'அவளை'க் காணத் தவம் கிடக்கிறான்.

ஆனால் மேசையில் தலையைச் சாய்த்துக் கண் களை மூடும் அவன் முன் அவளா வருகிறாள்?

அந்தச் சிரிப்பொலி; செஞ்சாய இதழ்கள்; உருட்சியான வெற்றுக் கைகள். சை, சை சை!

அவன் தலையைத் தூக்கி முகத்தை உலுக் கிக்கொள்கிறான். ஆனால் அவளுடைய ஏள னச் சிரிப்பொலி விடாமல் கேட்கிறது.

...ஐயோ...இந்தச் சிரிப்பு...

அவன் செவிகளை மூடிக் கொள்கிறான்.

'திடும் திடும் திடும்' என்று பாலத்தில் எக்ஸ்பிரஸ் வண்டி போகும்போது பாலத்தின் அடியில் நிற்பது போல் ஆட்டம்.

''ம, ஸார்... என்ன ஸார்? தலை நோவா?'' என்று கேட்கிறான் ராமன்குட்டி.

அவனுக்கு மறுமொழி கூறாமல் உடலை முறித்துச் சம்பத்து கொட்டாவி விடுகிறான்.

''ஏனய்யா? பணியில் நன்னஞ்சியா? புதிக. கவனமா யிருக்கணும்'' என்று சர்மா ஸ்ரீ ராம ஜயத்தை நிறுத்திவிட்டுக் கேட்கிறார்.

''இல்லே ஸார்...''

''முகம்தான் சொல்கிறதே? நீ போய் ஓய்வெடுத்துக்கொள். நான் பார்த்துக்கிடறேன், ஏதானும் அவசியம்னு கூப்பிடறேன். போய்யா.''

''அதெல்லாம் இல்லே ஸார்...''

''நீ இன்னிக்கு மூணு மணிக்கே ட்யூட்டிக்கு வந்திட்டாப்போல. இப்பல்லாம்.... விட்டாமினு எங்கே இருக்கு?'' சர்மா அவனே இரும்புக் குழாய் ஏணிப் படிகளில் ஏற்றி மேல் தளத்து மூலையில் உள்ள இளைப்பாறும் அறையில் படுக்க வைத்து விட்டுத்தான் மறு வேலை பார்க்கிறார்.

ஒரு ஸ்பிரிங் தடுப்பு, இரண்டு பெஞ்சுகள். தலையணியும் ஒரு கம்பளியும் இருக்கின்றன. ஒரு மின் கணப்பு வெம்மை பரப்புகிறது.

தலையைச் சாய்த்தாலும் தனிமையில் ஓசைகள் மறைகின்றனவா? ஓசைகளின் அதிர்வுகளில்... ரோஸி... பீச் கனியைப் போன்று சிவந்த சிவப்பு செயற்கையோ?

'...ஏ சனியனே! எட்டிப் போ!' — கம்பளியைத் தள்ளிக் கொண்டு விருட்டென்று எழுந்து உட்காருகிறான். மூலையில் கொட்டை எழுத்துச் செய்தியுடன் ஒரு பழைய தாள் கிடக்கிறது. — பத்திரிகைத்தாள். சிந்தனையை வேறு எதிலேனும் செலுத்தும் எண்ணத்துடன் அதை எடுத்துப் பார்க்கிறான்.

''மின் நிலையத்தின் ஆழ் குளத்தில் யானை சிக்கிய பரிதாபம்!'' — வேறு ஒரு மின் நிலையக் குளத்தில் நிகழ்ந்த பழைய செய்தி. யானை விழுந்த சர்ஜ் குளம்; அதை மீட்கப் பலப்பல உருக்கு வடங்களைத் தொங்க விட்டுக்கொண்டு கிரேன்கள் செயலாற்றுகின்றன. இந்த நிகழ்ச்சியைக் கற்பனையில் சித்திரித்துக் கொண்டு கண்களை மூடுகிறான்.

இரண்டு கிரேன்கள். ஓங்கி உயர்ந்த 'பூம்'கள். அவற்றின் இயக்கங்கள். யானை பிளிறும் ஓசை. மெல்ல மெல்ல மேலே ஏறி வருகிறது. எங்கேயோ ஏதோ தவறு நிகழ்ந்து விடுகிறது. மளாரென்று பேரோசையுடன் அது நழுவி விழுந்து விடுகிறது. யாரது? யாரய்யா? என்ன ஆச்சு? விழுந்த யானையை மீண்டும் ஏற்ற முடியுமா என்று எட்டிப் பார்க்கிறான். சரேலென்று பூமி நழுவி விட்டாற் போல் தோன்றுகிறது. அவள்... அவளல்லவா அது? அன்னப் படகிலேறி மின்னற் கொடியாக வந்தாளே, அவள்! அவளை இந்தக் கசத்தில் யாரே தள்ளினார்கள்?

இப்படி அவன் எண்ணியதுதான் தாமதம். அந்தச் சிரிப்பொலி கேட்கிறது. ரோஸியின் சிரிப்பா? நாடி நரம்புகளைப் பிளித்தெடுக்கும் பயங்கர ஒலி. அந்த ஒலியில் அந்தப் பெஞ்சுகள் அதிர்கின்றன. சரேலென்று அவள் ஸர்ஜ் குளத்தில் விழுந்த நிலையோடு பொறுப்பின் நினைவு வந்து விடுகிறது.

''ஸ்விட்சை நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்.. நிறுத்த வேண்டுமே!'' என்று துள்ளி எழுந்து தலைகுப்புறக் கவிழும் வேகத்தில் படிகளில் இறங்கி வருகிறான்.

''என்ன, என்னய்யா சம்பத்து? ஏன் இப்படி மிரண்டு போயிருக்கிறாய்?''

''ஸார்... ஓசை...''

''சரியாகத்தானிருக்கய்யா, பார், எல்லாம் ஓ.கே....''



'' எங்க வீட்டுப் பூனை தன் பெயரைக் கூடச் சொல்லுமே!''
'' ஆச்சரியமா இருக்கே! அதன் பெயர் என்னடா ?''
'' மியாவ் !''

சிவப்பு ஒளியே இல்லை. நீர் பாயும் ஓசை; ஜெனரேட்டர்கள் சுழலும் ஒலிகள்; எல்லாவற்றுக்கும் மேலாக அந்தச் சிரிப்பொலியும்....

''மணி என்ன ஸார்?''

''இரண்டு. நீ படுக்கப் போய்க் கால் மணி தானாகிறது...''

''இந்தச் சத்தத்தில் இளைப்பாறுவது எப்படி ஸார்? தலை நோகிறது...''


''அதுதான் ஒரு தொந்தரவு. இது கேட்டுப் பழகும்வரையிலும் எப்படி எப்படியோ இருக்கும். காதிலே கொஞ்சம் பஞ்சை அடைச்சுக்கிட்டுக் கண்ணை மூடிப் பாரு. சரியாகிப் போகும். போய்யா. ஏதானும் சொப்பனம் கண்டியாண்ண?...''

அவன் எதைச் சொல்வான்?

''அந்தக் காலத்திலே முத முதல்லே, நான் பவர்ஹவுஸ் ஆபரேஷனுக்கு வந்தப்ப இப்படித்தான். இப்பப் போல எல்லாம் ஆட்டோமாடிக்கா அப்ப? ரொம்பச் சன்னே. வீட்டுக்குப் போனாலும் அந்தச் சத்தம் விடாது. பிரமையாக இருக்கும். பேசாமல் அடுத்த மாசமே ஊருக்குப் போய், கலியாணம் செய்துகொண்டு வந்தேன். கொஞ்சம் ஒரு மாதிரியாச்சு...''

சர்மாவின் முகத்தில் ஒரு வெற்றிப் புன்னகை மின்னல் போல் மின்னி மறைகிறது. சம்பத்து திரும்பப் படுக்கைக்குச் செல்லவில்லை. கண்களை மூடிக் கொண்டு ஊருக்கு எழுத வேண்டிய சில வரிகளைப் பற்றி யோசனை செய்கிறான்.

''இங்கே மெஸ் சாப்பாடு சரியில்லை. வயிற்று வலி. நல்ல ஓட்டல் இல்லே. பேசாமல் ஒரு கலியாணத்தைச் செய்து கொண்டுவிடு என்று எல்லோரும் இங்கே சொல்கிறார்கள். எனக்கும் நல்ல பெண்ணாக வந்தால்...''



Criterion - ICT 2135A

விசித்திரப் பணக்காரர்

உலகத்திலேயே பெரும் பணக்காரர் யார்?

நாம் நினைக்கிறபடி ராக்பெல்லரோ, ஒரு ஸிஸோ அல்ல. அமெரிக்க நாட்டின் டெக்ஸாஸ் மாநிலத்தைச் சேர்ந்த எழுபது வயதுக் கிழவரான எச். எல். ஹண்ட் என்பவர்தான் அந்தப் பெருமைக் குரியவர். அவருடைய பணத்தைப் பற்றி அமெரிக்கக் கோடீசுவரர்கள் பேசும்போதெல்லாம் ஒரு சுவையான நிகழ்ச்சியையும் சொல்வார்கள்.

இரண்டாவது உலகப் பெரும் போருக்குப் பிறகு அமெரிக்காவைச் சேர்ந்த எண்ணெய்க் கம்பெனி ஒன்று அயல்நாடுகளில் எண்ணெய்க் கிணறுகளைக் குத்தகை எடுக்க முனைந்தபோது, எந்த நாட்டுக்குப் போனாலும் அங்கே இந்த ஹண்ட் ஏற்கனவே எண்ணெய்க் கிணறுகளைக் குத்தகை எடுத்திருப்பது தெரிய வந்தது. அமெரிக்கக் கம்பெனிக்கோ குத்தகைகளை இலேசில் விட்டுவிட மனமில்லை. எனவே, ஒரு முடிவுக்கு வந்தது. அதாவது, எச். எல். ஹண்டின் கிணறுகளையே மொத்தமாக விலை பேசி வாங்கிவிடுவது என்று! ஹண்டிடம் இந்த விருப்பம் தெரிவிக்கப்பட்ட போது, "தாராளமாகச் செய்யுங்கள்!" என்று அனுமதி வழங்கினார் அவர்.

எண்ணெய்க் கம்பெனிக்காரர்கள் ஹண்ட்டின் உதவியாளர்களுடன் கலந்து பேசி, ஹண்டின் சொத்துப் பட்டியல் ஒன்று தயாரித்தார்கள். பிரமிக்க வைக்கும்படியாக இருந்தது அது. அதைப் பார்வையிட்ட அந்தக் கம்பெனியின் தலைவர் ஹண்ட்டுக்குப் போன் செய்து, "உங்களை நான் வாங்குவதென்பது நடக்காத காரியம் என்று தோன்றுகிறது. ஒன்று செய்யுங்களேன்: எங்கள் கம்பெனியை நீங்கள் ஒரு விலை பேசி வாங்கிக் கொள்ளுங்களேன்!" என்றார்.

ஹண்ட் அப்படியே செய்தாராம்.

தனிநபரைப் பொறுத்த வரையில் உலகில் மிகப் பெரும் பணக்காரராக விளங்கும் ஹண்டின் சொத்து மதிப்பு: மூன்று பில்லியன் டாலர்கள்.

எண்ணெய்க் கிணறுகள் தவிர, உணவுப் பொருள் பதமிடும் தொழிற்சாலைகள், பெரிய எஸ்டேட்டுகள், பஞ்சாலைகள், மருந்துத் தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கும் உரிமையாளரான ஹண்டுக்குத் தொழிலில் கூட்டாளிகள் என்று யாருமே கிடையாது. அத்தனை சொத்துக்களும் அவர் ஒருவருக்கே சொந்தமானவை.

இவ்வளவு பெரிய பணக்காரர், பணத்தில் மிதப்பார், அநாயாசமாகச் செலவழிப்பார் என்று எண்ணினோமானால் ஏமாந்தவர்களாவோம். ஆடம்பரமற்ற வாழ்க்கை நடத்தும் ஹண்ட், தம்முடைய பர்ஸிலிருந்து ஒரு செண்ட் நாணயம் கீழே விழுந்து ஓடினாலும் அதைத் துரத்திக் கொண்டு ஓடுவாராம். அது மட்டுமல்ல; அவர் ஹோட்டல்களில் சாப்பிடுவதுகூடக் கிடையாது. தம்முடைய பகலுணவைக் கூட வீட்டிலேயே தயார் செய்து, காகிதப் பைக்குள் போட்டு அலுவலகத்துக்குக் கொண்டு வந்து விடுவாராம். "அந்தக் காகிதப் பைகளைக்கூட அவர் வீணாக்குவதில்லை. திரும்பவும் உபயோகிப்பதற்காகப் பத்திரமாக வீட்டுக்குக் கொண்டு வந்துவிடுவார்!" என்கிறார் ஹண்டின் மகன்.

ஏழைக் குடும்பத்தில் பிறந்து, பள்ளிப் படிப்புப் படிக்காமலே வளர்ந்தவர் ஹண்ட். பண்ணைகளில் வேலை பார்த்துச் சேமித்த பணத்தைக் கொண்டு எண்ணெய் வளம் நிறைந்த வயல்களை வாங்க ஆரம்பித்ததும், அதிர்ஷ்ட தேவதையின் பார்வையும் அவர் பக்கம் திரும்பியது. அவருடைய அயரா உழைப்பும் தன்னம்பிக்கையும்தான் அவரை முன்னுக்குக் கொண்டு வந்தன.

மற்ற அமெரிக்கப் பணக்காரர்களைப்போல் கால்ஃப் ஆடுவதிலேயோ, மீன் பிடிப்பதிலேயோ, படகு விடுவதிலேயோ விருப்பமில்லாத ஹண்டுக்குப் பணம் பண்ணுவதைத் தவிர பிடித்தமான இரண்டு விஷயங்கள் உண்டு. அவை: ஒன்று அரசியல்; மற்றொன்று எழுத்து.

ஹண்டின் புதல்வர் லாமர் என்பவருக்குக் கால் பந்தாட்டம் என்றால் பைத்தியம். தாமே கால்பந்து குழு ஒன்று நிறுவி அதற்குக் கணக்கு வழக்கில்லாமல் அவர் பணத்தை வாரி இறைத்துக்கொண்டிருப்பார். இதைப் பற்றி ஹண்டிடம் ஒருவர் கேட்ட போது, "செய்துவிட்டுப் போகட்டுமே! இந்த ரீதியில் போனால் இன்னும் 250 வருடங்களில் ஓட்டாண்டியாகி விட்டுப் போகிறான்!" என்றாராம் ஹண்ட் பொறுமையுடன்!

தம் குடும்பத்தில் மிகுந்த பற்றுக் கொண்டுள்ள ஹண்ட்டுக்குத் தம் வீட்டில் நண்பர்களுடன் உட்கார்ந்து கொண்டு பாட்டுப் பாடுவதென்றால் மிகவும் பிடிக்கும். அதிலும் குறிப்பாக அவருக்குப் பிடித்த ஒரு பாட்டு இப்படி ஆரம்பமாகிறது.

"எங்களிடம் பீப்பாய் பீப்பாயாகப் பணம் இடையாது!"

ஆதாரம்: 'காரனெட்'
நகலல்: **எஸ். தேவகி**



சினிமாக் கொட்டகையில் இடைவேளை வருவதற்குப் பத்து நிமிடங்களுக்கு முன்பே சோடா, கலர் விற்றுக்கொண்டு வருவதன்



நோக்கம் என்ன, தெரியுமா உங்களுக்கு?

தூங்கிக்கொண்டிருப்பவர்களை எழுப்பத்தான்!

- தாமரைமன்னன்.

○ **அதிக விலையுள்ள கையெழுத்துப் பிரதி:** இ. எம். பாரஸ்டர் எழுதிய இந்தியாவுக்கு ஒரு வழி (A Passage to India) என்ற நாவலின் கையெழுத்துப் பிரதியை 91,000 ரூபாய் கொடுத்து, 1960ல் நியூயார்க்கில் அரிய புத்தகங்களைச் சேர்க்கும் கடைக்காரர் ஒருவர் வாங்கினர்.

○ **அழுவது எப்போது?** குழந்தை பிறந்து ஏறத்தாழ ஐந்து வாரங்கள் ஆன

விலை

அலை

மதலை



பிறகுதான் சரிவர அழ முடியும். ஏனெனில் கண்ணீரைச் சுரக்கும் சுரப்பிகள் ஐந்து வாரங்களுக்குப் பிறகே குழந்தையின் கண்களில் உருவாகின்றன.

○ **அலையின் உயரம்:** கடலில் எவ்வளவு புயலடித்தாலும் கடலின் அலை நீர் 11 அடிக்கும் மேலாக எழுவதில்லை.

தகவல்: பி. வி. கிரி

மிதக்கும் குண்டூசி!

குண்டூசி ஒன்றை நீரில் மிதக்கச் செய்வது இயலவே இயலாது என்று உங்கள் நண்பர்கள் கூறுவார்கள். முடியும் என்று நீங்கள் கூறினால், உங்கள் நண்பர்கள் சின்ன பிளாஸ்டிக் வாளியின் முக்கால் அளவுக்குத் தண்ணீரை நிரப்பிக் கொண்டு வந்து உங்கள் முன்னிலையில் வைப்பார்கள். அதில் ஒரு குண்டூசியைப் போடுவார்கள். அது மிதக்காமல் வாளியின் அடிப்பாகத்தில் போய் உட்கார்ந்து விடும். நீங்கள் அவர வேண்டாம்! செய்து காட்டுகிறேன் என்று கூறிச் சவாலை ஏற்றுக் கொண்டு பின்வருமாறு செய்யுங்கள். பிளாஸ்டிக் வாளியின் நீர்ப் பரப்பின் மீது பிளாட்டிங் பேப்பர் ஒன்றை வைத்து, பிறகு முற்றிலும் உலர்ந்ததான குண்டூசியை அதன் மேல் வைக்கவும். மற்றொரு ஊசியை எடுத்துக்கொண்டு நிதானமாகத் தாளின் நடுப் பகுதிக்கு அதைக் கொணர்ந்து, பிளாட்டிங் தாளைப் பைய நீருள் அமிழ்த்தவும். அவசரப் படக் கூடாது. பிளாட்டிங் பேப்பரானதால் விரைவில் நனைந்துவிடும். நனைந்தபின் அது அமிழ்ந்துவிடும். ஆனால் ஊசிமட்டும் தொடர்ந்து மிதந்து கொண்டிருக்கும்! நீர் மட்டத்தின் மேல் ஒரு காந்தத்தை அசைத்து மிதக்கும் குண்டூசியைச் சுழலும்படியாகவும் செய்யலாம்! உங்கள் நண்பர்கள் மூக்கின் மேல் விரலை வைப்பார்கள்!

-- சுதாகரன்



நீதிபதி: (கோபமாக) சைலன்ஸ்! எவன் இனி சந்தடி செய்கிறானோ அவனை உடனே கோர்ட்டை விட்டுத் துரத்திவிடுவேன்!

கைதி: (கூண்டுக் கம்பியைப் பலமாக உதைத்து) ஜட்ஜ் மகாப் பிரபுவுக்கு ஜே! ஜே!

தகவல்: ரமணன் ஆதாரம்: 'கோட்'

இருபத்தாறு ஆண்டுகள் உறக்கம்!

ஒரு மனிதன் 70 ஆண்டுகள் வாழ்வதாக வைத்துக் கொண்டோமானால் அவனுடைய வாழ்வு கீழ்க்கண்ட விதத்தில் கழிகிறது.

26 ஆண்டுகள் உறக்கம்.
11 ஆண்டுகள் மட்டிலும் உழைப்பு.
11 ஆண்டுகள் பேச்சிலேயே கழிகிறது.
6 ஆண்டுகள் உணவு கொள்ளும் நேரம்.
3 ஆண்டுகள் உடை மாற்றும் நேரம்.
2 ஆண்டுகள் தீய எண்ணங்களில் கழிகிறது.
17 மாதங்கள் நல்ல பொழுதுபோக்கு.
13 மாதங்கள் புத்தகம், செய்தித் தாள் வாசித்தல்.
8 மாதங்கள் திரைப்படம் பார்த்தலில் செலவிடுதல்.

மிகுதியுள்ள காலம் அவரவர்கள் கொண்டுள்ள விருப்பப்படி நல்ல வழிகளிலோ, தீய வழிகளிலோ செலவாகிறது.

எடுத்தது: "தமிழ் மலர்"
விடுத்தது: சா. சண்முகவேல்.



அப்பாவுக்கு சஷ்டியப்த பூர்த்தி. அறுபதாம் கல்யாணம். அறுபது வயது முடிவுக்குச் சம்பிரதாயமாகத் திருமாங்கல்யம் முடிந்து கல்யாணம் என்று ஏன் வற்புறுத்தினார்கள் என்றோ கணவனும் மனைவியும் உயிருடன் இருக்கும் போதுதான் சஷ்டியப்தபூர்த்தி நடத்த வேண்டும் என்ற முடிவுக்கு ஏன் வந்தார்கள் என்றோ எனக்குத் தெரியாது. எங்கள் அப்பாவுக்கு சஷ்டியப்த பூர்த்தி. அம்மாவுக்கோ அது மங்களமான நாள் முடிந்து கொள்ளும் வைபவம். அதைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். அது தான் எனக்குத் தெரியும்.

டில்லியிலிருந்து பெரிய அண்ணா கணேஷ் எனக்குப் பதில் எழுதி விட்டான். அப்பாவின் அறுபதாம் கல்யாணம் நடத்துவதில் அவனுக்கும் ரொம்ப மகிழ்ச்சிதானாம். ஆனால் அப்பாவும் அம்மாவும் சம்மதிக்கிறார்களா என்று கேட்டு எழுதியிருந்தான்.

''வேண்டாம், அனு! இதெல்லாம் அவசியமே இல்லை. வீண் செலவு!'' என்கிறாள் அம்மா அவன் கடிதத்தைப் படித்து விட்டு.



''நீ சும்மா இரும்மா. குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் முதல் திருமணம் செய்விப்பதில்லையா? நல்ல இடமாகத் தேடி எத்தனை கஷ்டப்படுகிறார்கள்! பெற்றோர்களுடைய இந்த இரண்டாம் திருமணத்தைக் குழந்தைகள் செய்து வைக்க வேண்டியது கடமை. இதில் செலவு மட்டும்தானே!''

மேல் போக்கில்தான் நான் இப்படிச் சொன்னேன். அம்மாவுக்கு இது உரைத்திருக்க வேண்டும். அவள் விசித்து விசித்துக் கண்ணீர் பெருக்க ஆரம்பித்து விட்டாள். எனக்கும் மனத்துக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. அம்மாவை அணைத்துக் கொண்டு நான் சமாதானம் செய்தேன்.

''அவரவர் தலைவிதிப்படிதானேம்மா எல்லாம் நடக்கும்? நானே கவலைப்படாத போது நீ எதற்கு வருத்தப்படுகிறாய்? என்னையும் உன்னையும் நீ சம்பந்தப்படுத்திக் கொள்ளாதே. இது நாங்கள் உனக்குச் செய்து வைக்கும் கல்யாணம். ஆண்டவன் இதையாவது வெற்றிகரமாகச் செய்து வைக்கும்படி அருளட்டும்.''

வெகு நேரம் கழித்துத்தான் அம்மாவின் கண்ணீர் அடங்கியது.

அம்மா அழுததற்காக நான் கலங்கிவிடவில்லை. அம்மாவின் இந்தக் கல்யாணத்தை நன்றாக நடத்த நான்தான் தீவிரமாக இருந்தேன். மூன்று பிள்ளைகளுக்கும் இரண்டு பெண்களுக்கும் தாயாக இருந்தாலும் அம்மா என்னிடம் அதிகம் பற்றுடையவள். அது இப்போது இரக்கத்தின் அடிப்படையில் ஏற்பட்டதா? அல்லது எப்போதுமே அம்மாவுக்கு இந்த அன்பு உண்டா என்பது எனக்குத் தெரியாது. எனக்கு நினைவு தெரிந்த நாளாக நான் இதைக் கண்டு கொண்டிருக்கிறேன்.

அப்பாவுக்கு அலட்சியப் போக்கு உண்டு. அண்ணா கணேஷின் கல்யாணத்துக்கு வந்த எத்தனையோ நல்ல வரன்களைத் தட்டிக் கழித்தவர் அவர்தான். கடைசியில் அண்ணா டில்லிக்குப் போனதும் சாப்பாட்டுக்கு ரொம்பவும் கஷ்டமாகி விடவே தானே 'மாட்ரிமோனியல்' பகுதியில் விளம்பரம் கொடுத்தான். வரனை நிச்சயித்துக்கொண்டு விட்டான். அப்பா முதலில் குதித்தார். பிள்ளை கல்யாணமாயிற்றே. அப்பாவை ஒரு பைசாவுக்குக்கூட எதிர்பார்க்காமல் அண்ணா விவாகத்தை முடித்துக் கொண்டு விடுவான். அதனால் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள நாம்தான் மௌனமாக இருக்க வேண்டும் என அம்மா எடுத்துக் கூறிய பிறகுதான் அப்பாவுக்குப் புரிந்தது. பிறகு கோபத்தை அடக்கிக் கொண்டார்.

மன்னி, ஜெயா நல்ல பெண்ணாக அமைந்து விட்டதால் அண்ணாவுடன் உறவு நீடித்துத்தான் நிற்கிறது. இரண்டாவது அண்ணா ரமேஷின் விவாகத்தை ஜெயாவே ஏற்பாடு செய்து முடித்து விட்டாள். சின்ன மன்னி விஜயாவும் ஒட்டி ஒட்டிப் பழகுகிறாள். ரமேஷ் வராவிட்டாலும் வருடம் ஒரு முறை பம்பாயிலிருந்து எங்களைப் பார்க்க வந்து விடுவாள். இரு அண்ணாக்களின் குழந்தைகளும் வாரம் தவறாமல் கடிதம் போடுவதோடு ஒவ்வொரு லீவுக்கும் வந்து விடுகின்றனர்.

மன்னிகள் இருவரும் குடும்ப அங்கத்தினர்களானதும் அப்பா தம் அதிகாரத்தைக் காட்டத் துணியும் போது சில முறை தோல்விக்கு அவர் இலக்காகத்தான் வேண்டி வந்தது. அப்படித்தான், என் தங்கை ராஜி, கல்லூரிப் படிப்போடு காதல் படிப்பையும் நடத்திக் கொண்டு விட்டபோது, வீட்டில் பெரிய வாக்குவாதம், சச்சரவு. ராஜியின் காதலன் சேகர் ஜாதி குலம் எல்லாவற்றிலும் எங்களைச் சேர்ந்தவன்தான். ஆனால் செல்வ மதிப்பில் மிக மிகத் தாழ்ந்தவன். அப்பா இதைத் தீவிரமாக எதிர்த்தார். இரு அண்ணாக்களுக்கும் எழுதினார். அவர்கள் இதில் தலையிட்டுக் கொள்ளவில்லை. ஆனால் மன்னிகள் இருவரும் நேரிலேயே வந்தனர். விவரம் கேட்டனர். சேகரின் குண நலன்களைப் பற்றிச் சுற்றுப்புறத்தில் விசாரித்தனர். தங்களுடைய முழு ஆதரவில் எளிய முறையில் விவாகத்தையும் முடித்து விட்டனர். பணச் செலவும் இல்லை.

அதன் பிறகு தம்பி சுரேஷுக்கு வரன் வந்தபோது அப்பாவுக்குப் பதில் அம்மா குறுக்கிட்டாள். சுரேஷுக்கும் விருப்பமில்லை. ''அனுவை என் பாதுகாப்பில் ஏற்றிருக்கிறேன். அவளுடைய அவல நிலை என் விவாகத்தினால் மேலும் மோசமாகி விடும்'' என்றான். அவன் சொன்னது எனக்குப் புரிந்தது. நான், அம்மா, அப்பா மூவருமே அவன் வரும்படியில்தான் அடைக்கலமாயிருந்தோம். அப்பா ரிடையராகி விட்டார். பென்ஷன் கிடையாது. பிராவிடெண்ட் நிதியெல்லாம் சகோதரர்களின் படிப்புக்கும், மற்றும் எதிர்பாராத வகைகளுக்கும் கரைந்து விட்டது. டில்லியிலும் பம்பாயிலுமாக வந்து இருக்கும்படி மன்னிகள் கூப்பிட்டார்கள். ஆனால் இங்கிருந்தால்தான் எனக்கு விடிவு காலம் பிறக்க வழியுண்டு என்று சொல்லிக் கொண்டு இந்த ஊரை விட்டு நகரவில்லை.

''சுரேஷ்! நீ கவலைப்படாதே. இனி நான் ஒருத்தருக்கும் பாரமாக இருக்க வேண்டாம் என்ற முடிவுக்கு வந்து விட்டேன். எனக்குப் படிப்பு இருக்கிறது. உன்னைப் போல் பணி புரிந்து சம்பாதிக்க முடியுமே!'' என்றேன் நான்.

அவனுக்கு அது உறுத்தியிருக்க வேண்டும். ''என்ன அனு! இப்படிப் பேசிவிட்டாய்? நீ எனக்குப் பாரமாக இருக்கிறாய் என்று நான் சொல்லவேயில்லையே! நீயும் ஏன் சம்பாதிக்கக் கூடாது என்று நான் கேட்டதில்லையே!''

'' நீ சொன்னாய் என்று நானும் சொல்லவில்லையே. எனக்கு அதுதான் எதிர்காலத்துக்கான வழி.''

''வேறு வழி கிடையாதாக்கும்!''

அறுபதாம் விவாகம்

எஸ். ரங்கநாயகி





"நான் உன்னிடம் முகம் கொடுத்துப் பேசறதில்லேன்னு அடிக்கடி குறைப்பட்டுக்கிறியே - ஏன்னு எனக்குப் புரியவேயில்லே!"

"வேறு வழியா? நானே கணவனைத் தேடிக் கொண்டு ஓட வேண்டும் என்று சொல்கிறாயா? இன்னும் எனக்கு அப்படிப்பட்ட எண்ணம் தோன்றவேயில்லையே!"

"அப்படி உனக்குத் தோன்றவில்லையே என்றுதான் நான் குறைப்படுகிறேன்."

சுரேஷ் இப்படிக் கூறிவிட்டான். எனக்குத் துணிவுப் பாடம் கற்றுத் தர முயலுகிறான். நான் இப்படி நிற்பதற்குப் பெற்றோர்கள்தான் காரணம் என்று எல்லோரையும் போல்தான் அவனும் நினைத்தான். அப்பாவுக்குப் பிடிவாதம், அதை மீற முடியாத அம்மாவின் கோழைத்தனம் என்கிறார்கள். ஆனால் தங்கள் வரையில் துணிவைக் காட்டிப் புக முடியவில்லை. அதற்குக் காரணம், நான் பெற்றோர்களின் அனுமதியைத்தான் நாடுவேன் என்பது அவர்களுக்குத் தெரியும்.

"உன் கணவனே உன்னைத் தேடி வருவான் எனக் கோட்டை கட்டிக் கொண்டிரு!" எனக் கூறிவிட்டு சுரேஷ் நகர்ந்தான்.

அவன் சினம் கொண்டது எனக்குச் சிரிப்பைத் தந்தது. என் கணவர் எங்கிருப்பார்? நான் அவரை நினைப்பது போலவே அவரும் என்னை நினைத்துக் கொண்டிருப்பாரா? அது ஆண்டவனுக்குத்தான் தெரியும். எனக்குள் நானே கேட்டுக் கொண்ட கேள்வியோடு மனத்திலே ஒரு நைப்பாசையும் எழுகிறது. என் கணவரே என்னைத் தேடி வரக்கூடாதா? அப்படி என் வாழ்வில் ஒரு திருப்பம் ஏற்படுமா? என் தோழி புவனாவை அவனே தானே தேடி வந்தான்! அவளை விட நான் பலவிதங்களில் உயர்ந்தவள் என்றாலும் எனக்கு அந்தப் பாக்கியம் கிட்டவேயில்லையே?

நான் வேலை தேடிக் கொண்டு விட்டேன். சுரேஷுக்கு விவாகமாகி விட்டது. அவனுடைய மாமனார் அவனுக்கு உயர்ந்த வேறு வேலை வாங்கித் தந்துவிட்டார். அதனால் அவனும் இந்த ஊரை விட்டுப் புறப்பட்டுப் போய்விட்டான். அவன் மனைவி இந்து தங்கமான பெண். ஆயினும் அவள் எவ்வளவு வற்புறுத்தியும்கூட நாங்கள் இந்த ஊரை விட்டுப் போகவில்லை.

என் வாழ்வு அப்படியேதான் சென்று கொண்டிருந்தது. அப்பாவோ முயற்சி எடுத்து எடுத்துக் களைத்துவிட்டார். ஆனால் ஊரார் பேச்சுகளுக்கு பாவம், அவர்தான் அதிகமாக இலக்காகிக் கொண்டிருந்தார். "பெண் சம்பாதிக்கிறாள். சுகமாகக் காலம் தள்ள முடிகிறதே. இனிமேல் பெண்ணின் நல்வாழ்வுக்கு அவர் ஏன் முயற்சி எடுக்கப் போகிறார்!" என அப்பாவை நோக்கிக் கூறியதோடு, "ஏண்டி, நீதான் துணிச்சலா ஒரு வழியில் முன்னேறக் கூடாதோ!" என்று அம்மாவிடமும் கேள்விகள் பிறந்தன.

ஊரார் இப்படிக் கேட்கும்போது எனக்குப் பெற்றோர்கள் மீது இரக்கம்தான் உண்டாகும். ஓரிரு முயற்சிகளில் அப்பா தடை போட்டது உண்மைதான். ஆனால் அதற்காக முழுக் குற்றத்தையும் அவர் மீது சுமத்துவது எனக்கு விருப்பமில்லை. காலம் மேலே ஏற ஏற முயற்சிகள்கூடப் பலிதமாகாதோ என்ற அச்சம். நான் என் விதியைத்தான் நொந்து கொண்டேன்.

■ இத்தனைக்கும் நடுவே அப்பாவின் சஷ்டியப்த பூர்த்தி வந்துவிட்டது. நான் இப்படி நிற்கிறேனும். அதனால் இதைக் கொண்டாட முடியுமா என்கிறார்கள் உடன் பிறந்தவர்கள். நானே வேதனைக்கு விடை சொல்லிக்கொண்டிருக்கும்போது ஏன் இவர்கள் வேதனையைப் பிடித்து இழுத்து வந்து என் மனவீட்டுக்குள் தள்ளுகிறார்கள் என்றுதான் எனக்குப் புரியவில்லை.

அறுபதாம் கல்யாண விழாவுக்கு ஊரிலிருந்து எல்லோரும் வந்து விட்டார்கள். ஏற்பாடுகள் ஆரம்பித்து விட்டன.

ஜவுளிக்கடை ஒன்று பாக்கியில்லாமல் ஏறி இறங்கியாகி விட்டது. அம்மாவுக்குப் பிறந்த வீட்டார் இப்போது ஒருத்தருமில்லையாதலால் நாங்களே திருமாங்கல்யம் செய்து கூறைப் புடவையும் வாங்க வேண்டும்.

வந்தவர்களுக்கெல்லாம் ஜவுளி வகைகளைக் காட்டியபோது, 'இது கணேஷ் குடும்பம்', 'இது ரமேஷ் குடும்பம்', 'அது சுரேஷ் ஃபாமிலி', 'இங்கே ராஜி வீட்டுது' என செட்டாக எடுத்துக் காட்டினார்கள். ஜவுளி வகைகளே ஒவ்வொரு குடும்பத்தினரின் அங்கத்தினர்களைக் காட்டிக் கொண்டிருந்தன. எனக்கு எடுக்கப்பட்ட ஜவுளி மட்டும் என்னைப் போலவே தன்னந் தனியாக அமர்ந்து கொண்டிருந்தது. ஜவுளி வகைகளைப் பார்த்த என் தூரத்து உறவினர் ஒருத்தர் சொல்லியே விட்டார், 'பாவம், இந்தப் புடவை மட்டும் ஜோடி இல்லாமல் இருக்கிறது.''

அம்மாவுக்கு வேதனை சூழ்ந்தது. உடனே எல்லாவற்றையும் கலைத்தான். புடவைகளை எல்லாம் ஒன்றாக்கி விட்டு வேஷ்டிகளைத் தனித்து வைத்து விட்டான். நான் சிரித்துக் கொண்டேன். என் கணவர் இப்போது இங்கிருந்தால் வேஷ்டி சாதாரணமாக இருந்தால் போதும் என்று சொல்லி இருப்பாரா?

அல்லது பட்டை ஜரிகை வேஷ்டி வேண்டி யிருக்குமோ! ஆனால் நான் அவரிடம் 'வேஷ்டியே வேண்டாம், பாண்ட் துணியும், டெரிலின் ஸ்லாக்கும் வாங்கிக்கொள்ளுங்கள்' எனக் கூறியிருப்பேன்.

அறுபதாம் கல்யாண முகூர்த்த நாள். ஒரு ஹோமம் பாக்கியில்லாமல் நடக்கிறது. கூப்பிட்டவர்கள் அனைவரும் வந்துவிட்டனர். சிலர் கூப்பிடாமலே வந்தனர். அறுபதாம் கல்யாணத் தம்பதிகளைப் பார்த்தாலே புண்ணியமாம்! அதன் பொருளை யெல்லாம் அலசிப் பார்க்க நான் முனையவில்லை.

அம்மா மணையில் அமர்ந்திருக்கிறாள். பக்கத்தில் அப்பா. இருவர் முகத்திலும் களிப்பு தெரிந்தது. இருவரும் அனுபவித்து மகிழ்ச்சியுடன் நடத்திக்கொள்ளும் விவாகம். இத்தனை காலமாக ஒருத்தரை யொருத்தர் புரிந்து கொண்டு இனி ஒருத்தரை யொருத்தர் கைவிடவே மாட்டோம் என்ற உறுதியோடு கலந்து கொண்டுவிடும் விவாகம். ஆண் பெண் சிருஷ்டியின் முதல் ஏடு முடிந்து இனி ஆத்மார்த்த ஐக்கியப்பாட்டுடன் கடமை முடிந்துவிட்ட திருப்தியோடு ஆண்டவனுக்காகவே இனி வாழ்வை அர்ப்பணிக்கப் போகும் ஆரம்ப நாள்.

அம்மா அப்பாவுக்குப் பிறந்த செல்வங்களான நாங்களும் இந்தக் குடும்பத்தில் புகுந்து ஒன்றி விட்ட மாட்டுப்பெண்களும் ராஜியின் கணவனும் முழு ஒத்துழைப்போடு இந்த விவாகத்தை நடத்தி நிறைவு கண்டு கொண்டிருந்தோம்.

''பாவம், இந்தப் பெண் இப்படி நிற்கும் போது அறுபதாம் கல்யாணத்துக்கு மணையில் உட்கார எப்படித்தான் மனம் வந்ததோ!'' எனச் சொன்னவர்களின் பேச்சை அம்மாவின் காதில் விழாமல் நான்தான் பார்த்துக் கொண்டேன்.

''அனு, அம்மாவின் முகத்தைப் பாரேன், எவ்வளவு பொலிவுடன் இருக்கிறது!'' என்றாள் ராஜி.

''பின்னே இருக்காதா? சுற்றி அத்தனை பேரக் குழந்தைகளாயிற்றே!'' என்றான் ரமேஷ்.

''பேரக் குழந்தைகள் என்றும் தாத்தா பாட்டிக்குத் தனி இன்பம் இருக்கலாமாக்கும்! அந்த இன்பம் தன் குழந்தைகள் புடைசூழும்போது இருக்காதா என்ன?''— சுரேஷ் கேட்கிறான்.

''அடேய், அது இப்போ உனக்குப் புரியாதுடா. உன் அறுபதாம் கல்யாணத்தில் உன்னைச் சுற்றி உன் பேரன், பேத்திகள் கொம்மாளம் போடும்போதுதான்டா புரியும்!''

''அதானே, அப்போ ஃபேமிலி பிளானிங் குடும்பக் கட்டுப்பாடு அதெல்லாம் கூட மறந்து விடும்!''

''அப்படியா? அப்போ அன்று எனக்கு முன்னடி உன் அறுபதாம் விவாகம் முடிந்து விடுமே, அப்போ உன்னுடைய அனுபவத்தை உன் முகத்திலிருந்தே தெரிந்து கொள்ளப் போகிறேன்.''

அவரவர் தங்கள் அறுபதாம் கல்யாண விழாவின் கற்பனையில் ஈடுபட்டுவிட்டபோது

நானும் அந்தக் கற்பனையில் ஈடுபட முயன்றேன்... என் அறுபதாம் கல்யாணம்... பேரனோ பேத்தியோ... ஓ! அந்தத் தொந்தரவெல்லாம் ஒன்றும் இருக்காது!

திருவிழாவாகப்பெற்றோர்களின் அறுபதாம் கல்யாணம் நடந்து விட்டது. விருந்தினர்கள் உடன் பிறந்தவர்கள் அனைவரும் விடை பெற்றுச் சென்றுவிட்டனர். பழையபடி அந்த வீட்டில் நான் அம்மா அப்பா மூவரும் மட்டுமே மிகுதியாகத் தங்கினோம்.

அம்மா நிதானமாகக் குளித்து விட்டு உள்ளே வந்தாள். அம்மாவையே நான் பார்த்துக் கொண்டிருந்தேன். இரு மங்கலச் சரடுகளில் மஞ்சளைத் தேய்த்துத் தேய்த்துப் பளிச்சென ஆக்கி விட்டிருந்தாள். நான் என் கழுத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டேன். அங்கு...

பதினெட்டாவது வயதிலிருந்து வசந்தத்தின் மலர்ச் சோலை என்ற பூங்காவில் புகுந்து திருமணக் கோலக் கற்பனையில் ஈடுபட்டு, எனக்கெனக் கண்டிப்பாக ஒரு கணவர் பிறந்திருப்பார் என்ற பெரியோர்களின் அறிவுரைக்குச் செவி கொடுத்து என்னைப் பார்க்க வரும் ஒவ்வொருத்தனையும் 'கணவன்' எனச் சிறிது கற்பித்து, பிறகு அப்பாவின் 'இதை விட நல்ல உயர்ந்த பையன் கிடைப்பான்' என்ற சொல்லோடும் சீரும் வரதட்சிணையும் அதிகம் வேண்டும் என மற்றவர்களின் சொல்லோடும் அந்தக் 'கணவரு'க்கு மனத்தோடு விடை கொடுத்துவிட்டு, இன்றுவரை 'என் கணவன்' என்று காணாத ஒரு புருஷனுக்கு மதிப்புக் கொடுத்து, வசந்தத்தின் நறுமணம் மெள்ள மெள்ளக் காலத்தின் காற்றோடு கலந்து மறைந்து கொண்டு போக முப்பத்தைந்து வயதைத் தாண்டி விட்டேன். இன்னமும் 'கணவர்' என்ற ஒரு புருஷனை வரவேற்கக் காத்திருக்கிறேன் என்றால் அதற்கு ஒரே காரணம், எப்படியும் தன் சஷ்டியப்த பூர்த்தியில் அறுபதாம் கல்யாணத்தை நடத்திக்கொள்ளவாவது ஒருத்தர் என்னைத் தன் மனைவியாக்கிக் கொள்ள முன்வர மாட்டாரா என்ற நம்பிக்கைதான்.

டிவிஎஸ்
வினியோகிக்கும் உறுப்புகள்
நம்பகமானவை



டிவிஎஸ் வினியோகிக்கும்
உறுப்புகளை உற்பத்தி
செய்வோரில் பெரும்பாலோர்
தங்கள் தங்கள் துறைகளில்
தலைசிறந்தவர். அவை
நீண்ட நாள் உழைக்கும்
என்பதில் ஐயமில்லை.

**உங்கள் நம்பிக்கைக்கு
உரியது டிவிஎஸ்**

**டி வி சுந்தரம்
அய்யங்கார் & சன்ஸ்
பிரைவேட் லிமிடெட்**
மதுரை-திருச்சி-திருநெல்வேலி-
புதுக்கோட்டை-
சேலம்-கோயமுத்தூர்-
திருவனந்தபுரம்

**சுந்தரம் மோட்டார்ஸ்
பிரைவேட் லிமிடெட்,**
மதராஸ்-பெங்களூர்;
செகந்திராபாத்
விசாகபட்டினம்

**மதராஸ் ஆட்டோ சர்வீஸ்
பிரைவேட் லிமிடெட்**
மதராஸ்-பெங்களூர்-விஜயவாடா

அண்ணலின் வாழ்விலே



எழுப்பியது யார்?

''**பா**பூ! இன்று பிரார்த்தனைக்குக் கொஞ்சம் நேரமாகி விட்டது போலிருக்கிறதே!'' 1948ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ந் தேதி மாலைப் பிரார்த்தனைக்கு வந்து கொண்டிருந்த காந்தியடிகளைக் கோட்ஸே கேட்ட கேள்வி இது.

''ஆம்!''—நேரம் தவருத காந்தியடிகளுக்கு மனத்தில் எத்தனை தாபம் ஏற்பட்டிருக்கும்?

இதே நிலை காந்தியடிகளுக்கு இதற்கு முன்பும் ஒரு சமயம் ஏற்பட்டது. அப்பொழுது அவர் கதர் யாத்திரையில் ஈடுபட்டிருந்தார்.

ஆந்திரப் பிரதேசத்தில் சிகாகோல் கதருக்குப் புகழ் வாய்ந்திருந்தது. அங்குள்ள கதர் நூற்பு நிலையத்தை மாலை ஏழு மணிக்குக் காந்தியடிகள் பார்வையிடுவதா யிருந்தது.

ஆனல் பிரயாணத்தில் இடையூறு காரணமாக இரவு பத்து மணிக்குத்தான் காந்தியடிகளின் கோஷ்டி அவ்வூரை அடைந்தது.

மூன்று மணிக்கு மேலாகச் சகோதரிகள் காந்தியடிகளின் வருகையை எதிர்பார்த்து நூற்பு யக்ஞம் நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். இந்த நினைவு வரவே, காந்தியடிகள் அவர்களை மேலும் காக்க வைப்பது உசிதமில்லை என்று வந்ததும் வராததுமாக நேராக நூற்பு யக்ஞம் நடந்து கொண்டிருந்த இடத்துக்குச் சென்று விட்டார்.

காந்தியடிகளின் கோஷ்டியில் இருந்த மகாதேவதேசாய், ஆசாரிய காகா காலேல்கர் போன்றவர்கள், களைப்பு காரணமாக முகாமுக்குச் சென்றுவிட்டார்கள். அது மட்டும் அல்ல; களைப்பு மேலிட்டால் போனதும் படுக்கையை விரித்துத் தூங்கியும் விட்டனர்.

விடியற்காலை நான்கு மணிக்கு எழுந்து எல்லோரும் காலைப் பிரார்த்தனைக்குக் கூடினர். மகாதேவ் தேசாயைப் பார்த்து, ''மகாதேவ்! நேற்று இரவு பிரார்த்தனை என்ன ஆயிற்று?'' என்று கேட்டார் காந்தியடிகள்.

மகாதேவ் தேசாய்க்குப் பேசவே நா எழவில்லை. காலேல்கர் மனம் திக்கென்றாலும், துணிவை வரவழைத்துக் கொண்டு, ''நான் வந்ததும் தூங்கிப் போய்விட்டேன், பாபுஜி! பிரார்த்தனை செய்வதையே மறந்துவிட்டேன்!'' என்றார்.

காகா காலேல்கரின் பதில் துணிவைக் கொடுக்கவே, மகாதேவ் தேசாய், ''நானும் மறந்து விட்டேன்! ஒரு தூக்கம் போட்டு விழித்ததும்தான் சட்டென்று தவறு நினைவுக்கு வந்தது. படுக்கையில் எழுந்து உட்கார்ந்து மனத்துக்குள்ளாகவே வழிபாட்டை நிகழ்த்தினேன். பிறகு மறு தூக்கம் போட்டேன். காகாவை எழுப்பவில்லை'' என்றார்.

காந்தியடிகள் முறுவலோடு, ''நானும் நேற்று இரவு பிரார்த்தனை செய்ய மறந்து விட்டேன். களைப்பு மேலிட்டிருல் அடித்துப் போட்டாற் போலத் தூங்கி விட்டேன்! மூன்று மணிக்கு விழிப்புக் கொடுத்ததும் நினைவுக்கு வந்தது. 'அடடா! என்ன அபசாரம் செய்துவிட்டோம்' என்று! அதுமுதல் உடம்பை நடுக்குகிறது. உள்ளத்தை என்னவோ செய்கிறது'' என்றார்.

அதோடு பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு அன்றையப் பிரார்த்தனையை நடத்தினார். அப்புறம் அவரவர்கள் தங்கள் தங்கள் வேலையில் ஈடுபட்டார்கள்.

காந்தியடிகளுக்கு அவகாசம் ஏது? 'வேலை; வேலையை விட்டால் வழிபாடு; வழிபாட்டை விட்டால் வேலை'; இப்படியே தம் நேரம் முழுவதையும் வாழ்க்கையாக்கிக் கொண்டு விட்டவராயிற்றே! ஆயினும் அன்று உணவருந்த வந்தபொழுது காந்தியடிகளிடம் காகா காலேல்கர் கூறினர்: ''பாபூஜி! இப்பொழுது நான் ஒன்று கூறலாமா?''

''தாராளமாகச் சொல்லேன்!'' காந்தியடிகள் புன்முறுவலோடு தமக்குக் கேட்கும் அவகாசம் இருப்பது போலக் கூறினர்.

காகா காலேல்கர் ஒரு கதையே கூறினர்:

ஓர் இஸ்லாமியத் துறவி இருந்தார். அவர் ஆண்டவனின் பெரும் பக்தர். நாள் ஒன்றுக்கு ஐந்து முறை தவருமல் வழிபாடு செய்வார். ஒரு நாள் அவரும் நம்மைப் போல் மிகவும் களைத்துவிட்டார். அதனுல் தூங்கிப் போய் விட்டார். வழிபாட்டு நேரம் வரவே, யாரோ அவரைத் தட்டி எழுப்பினர்கள். 'எழுந்திரு! வழிபாட்டுக்கு நேர மாகிவிட்டது!' என்று நினைவுபடுத்தினர்கள்.

துறவி எழுந்து உட்கார்ந்தார். தம்மைத் தட்டி எழுப்பியவருக்கு நன்றி கூறி, ''அன்பரே! உங்கள் இந்த உதவிக்கு என்ன கைம்மாறு செய்தாலும் பற்ருது. என் வழிபாட்டு நேரம் தவறியிருந்தால் என்ன ஆகியிருக்கும்?—ஆமாம், தாங்கள் பெயர்?'' என்று கேட்டார்.

''என் பெயரா? இப்லீஸ்'' என்றார் தட்டி எழுப்பியவர். இப்லீஸ் என்றல் சாத்தான்—துர்த்தேவதை என்று பொருள்.

துறவிக்கு ஒரே வியப்பாகிவிட்டது. ''அட, சாத்தானு நீ? வழிபாடு செய்பவர்களைத் தடுப்பதல்லவா உன் வேலை? நற்காரியங்களுக்கு இடையூறு செய்வதும், தீங்கு புரிவதும்தானே உன் தொழில்? அப்படி இருக்கும் பொழுது என்னை வழிபாட்டுக்கு



எழுப்பினாயே! உனக்கு எப்படி இந்த நல்ல குணம் வந்தது?'' என்று கேட்டார்.

சாத்தான் பதில் இறுத்தான்: ''இதிலும் என் குணம் மாறவில்லை. என் குறிக்கோளை நான் மறக்கவில்லை. உங்களை எழுப்பியதனால் எனக்கு நல்ல பயனே! முன்னம் ஒரு தடவை இதே போலத்தான் தாங்கள் தூங்கிவிட்டீர்கள். வழிபாட்டு நேரம் தாண்டிவிட்டது. என் மகிழ்ச்சியும் எல்லை தாண்டிவிட்டது! நன்றாக வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன். ஆனால் நீங்கள் விழித்து எழுந்ததும், மிகவும் வருத்தப்பட்டீர்கள். அழுதீர்கள், புலம்பினீர்கள்; தலையில் அடித்துக்கொண்டீர்கள். ஆண்டவனுக்கு என்ன தவறு செய்துவிட்டோம் என்று ஒரே நினைவாக இருந்தீர்கள். பலன், ஆண்டவனுக்கு இன்னும் பிடித்தமானவராகி விட்டீர்கள். எனவே தான் நான் மிகவும் யோசனைக்குப் பின் உங்களை எழுப்பினேன். நீங்கள் தூங்கி, அதனால் வருந்தி, ஆண்டவனின் பிரியத்துக்கு இன்னும் அதிகப் பாத்திரமாகி விடக்கூடாது. பாருங்கள்! அதனால் நேரத்துக்கு எழுப்பி உங்களைப் பிரார்த்தனை புரிய வைத்து விட்டால், ஆண்டவனின் அன்பு அளவுக்கு அதிகமாகக் கிட்டாது அல்லவா?''

காகா காலேல்கர் கதையை முடித்தார் ''கருத்து மிகுந்த கதை. தன் தவறுக்காக அந்தரங்க சுத்தியுடன் ஒருவன் வருத்தம் தெரிவித்தால், ஆண்டவனின் அன்புக்கு அதிகப் பாத்திரமாகிறான் என்றாகிறது.. அதற்காக மீண்டும் மீண்டும் நாம் அதே தவற்றைச் செய்யவும் கூடாது!'' என்று முடித்தார் காந்தியடிகள்.

காந்தியடிகளை 1914-ம் ஆண்டிலிருந்து 1948-ம் ஆண்டு அவர் தலைசாயும்வரை அணுக்கமாக இருந்து கவனித்து வந்தவர் காகா காலேல்கர். 'இறுதி நாளன்று, காந்தியடிகள் பிரார்த்தனைக்குச் சற்று நேரம் கழித்து வந்தது பொறுக்காமல்தான், கோட்ஸே உருவத்தில் சாத்தான் வந்து கொன்று விட்டானோ?'

''கோட்ஸே காந்தியைத்தான் கொன்றான். ஆனால் இன்றைய மக்கள் காந்தியத்தையே அல்லவா கொன்றுவிட்டார்கள்'' என்று காகா காலேல்கரோடு சேர்ந்து வருந்துகிறார் ஜெர்மானியப் பேராசிரியர் ஸ்ரீ ஹேமன். -ரா.வீ.

வட்டமேஜை

இலங்கைப் பிரதம அமைச்சர் கௌரவ டட்லி சேனநாயகா அவர்களுக்கு நான் எழுதியுள்ள கடிதத்தின் நகலை இத்துடன் அனுப்புகிறேன். பிரசுரிக்க வேண்டுகிறேன்.

இந்தக் கடிதம்தான் நான் உங்களுக்கு நேரே உங்கள் சொந்த முகவரிக்குத் தமிழில் எழுதும் கடிதமாகும். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் உங்களுக்கு நேராக எழுதிய முதலாவது தமிழ்க் கடிதம் இதுவாகத்தான் இருக்கும் என்று எண்ணுகிறேன்.

நீங்கள் பாராளுமன்றத்தில் 23—3—67 அன்று பேசும்பொழுது ஆங்கிலம் தெரிந்த நான் உங்களுக்குத் தனித் தமிழில் கடிதம் எழுதுவதாகவும் நீங்கள் எனக்குத் தனிச் சிங்களத்திற் கடிதம் எழுதுவதாகவும் குறிப்பிட்டீர்கள். நீங்கள் இவ்வாறு பேசும்பொழுது நான் சபையில் இருக்கவில்லை. இருந்திருந்தால் உங்கள் கூற்று பிழையான கூற்று என உடனே சுட்டிக் காட்டியிருப்பேன். நான் பிரதம அமைச்சர் என்று முகவரியிட்டுத் தமிழில் கடிதங்கள் அனுப்பியிருக்கிறேன்.. நீங்கள் அவற்றுக்குச் சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் மறுமொழி அனுப்பியிருக்கிறீர்கள். இதனை 28—9—67ல் பாராளுமன்றத்தில் நான் நிகழ்த்திய உரையிற் சுட்டிக் காட்டியுள்ளேன். எனவே, இக்கடிதம்தான் நான் உங்களுக்கு நேரே தமிழில் எழுதும் முதற் கடிதமாகும்.

இதனைத் தமிழ் தெரியாத உங்களுக்கு எழுதுவதன் நோக்கத்தை முதலிற் கூறுகிறேன். தமிழ் தெரியாத நீங்கள் தமிழிற் கடிதத்தைப் பெற்றால் முதலில் என்ன உணர்ச்சி அடைவீர்கள், இக்கடிதத்தில் உள்ளது என்ன என்பதை அறிய எவ்வாறு முயல்வீர்கள்? ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் நீங்கள் பெறும் கடிதமும் உங்களுக்குத் தெரியாத மொழியிற் பெறும் கடிதமும் எத்தகைய வேறுபட்ட உணர்ச்சிகளை உங்களிடத்தில் உண்டாக்கும்? நீங்கள் அநுபவத்திற் காண்பதற்கு இத் தமிழ்க் கடிதம் வாய்ப்பளிக்கிறது.

நீங்கள் விரும்பியவுடன் இக்கடிதத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பையோ சிங்கள மொழிபெயர்ப்பையோ செய்து தருவதற்கு உங்கள் அலுவலகத்தில் பணியாளர் உளர். ஆனால் இந்த வாய்ப்பு பாராளுமன்ற உறுப்பினராகிய எனக்கோ, தமிழ்க் கமக்காரருக்கோ, தமிழ்த் தொழிலாளருக்கோ இல்லை. இவர்களுக்கு இன்னும் உங்கள் அரசாங்கம் தொடர்ந்து சிங்களத்தில் கடிதங்களையும் அறிக்கைகளையும் படிவங்களையும் அனுப்பிக் கொண்டு வந்தால் இம்மக்களின் வெறுப்பும் வேதனையும் எவ்வாறு இருக்கும் என்பதனை எண்ணிப் பாருங்கள். இதனுடன் எனக்குத் தனிச் சிங்களத்தில் அனுப்பப்பட்ட கடிதங்கள், அறிவித்தல்கள், பற்றுச் சீட்டுகள் முதலியவற்றை உங்கள் பார்வைக்கு அனுப்பி வைக்கிறேன். இதனை உங்களுக்குப் பன்முறை சுட்டிக் காட்டியபொழுது, பொறுங்கள் பொறுங்கள், சிறிது காலத்தில் உங்கள் குறைகள் அனைத்தும் களையப்பட்டுவிடும் என்றீர்கள். நான்கு ஆண்டுகள் பொறுத்திருந்த தமிழ் மக்கள் பொறுமை இழந்துவிட்டார்கள். இவர்களுக்குத் தெரியாத மொழியில் அரசாங்கம் எவற்றையும் அனுப்பாமல், தெரிந்த தாய்மொழியில் எல்லாவற்றையும் அனுப்புவதற்கு உடனே நடவடிக்கை எடுங்கள்.


கிளிநொச்சி — கா. பொ. இரத்தினம்
19-3-69 — பாராளுமன்ற உறுப்பினர்

குறிப்பு: திரு கா. பொ. இரத்தினம் பிரதமரவர்களுக்கு எழுதிய கடிதத்தில் ஒரு பகுதி இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது. -ஆசிரியர் கல்கி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor : T. Sadasivam

GRASIM

STAPLE FIBRE A SUPPLEMENT TO COTTON AND OTHER FIBRES



Among Indian technological achievements Gwalior Rayon's success in producing Rayon Grade Pulp from indigenous raw materials without any foreign aid or collaboration has, perhaps, been the most remarkable. The staple fibre produced from the pulp has been a boon to the hard-pressed textile industry which was deprived of valuable raw materials when vast areas of cotton-growing land were lost to Pakistan as a result of Partition.

Grasim Staple Fibre is unique in many respects, and is, in effect, a supplement to all natural fibres including cotton, wool, silk, jute, as well as to synthetic fibres. When blended or mixed with other fibres, it increases the usefulness of the resultant fabrics, making them cooler, softer, and more comfortable while at the same time helping to lower costs.

Today Gwalior Rayon contributes substantially to the national economy. It keeps hundreds of textile mills busy, gives employment to thousands of people, helps clothe lakhs more, saves crores of rupees in foreign exchange, contributes handsomely and in ever-increasing amounts to the national exchequer—these are just a few of the calculable benefits.

Besides Rayon Grade Pulp and Staple Fibre, Gwalior Rayon also produces high quality fabrics and fabricates its own machinery and equipment.

As the needs of the nation for the basic necessities of life are constantly growing, Gwalior Rayon, conscious of its responsibilities, has already made plans to expand its production. It is the constant endeavour of the Company to serve the country to its utmost ability.

THE GWALIOR RAYON SILK MANUFACTURING (WVG.) CO. LTD.

Birlagram, Nagda.

SAS-GR 26 A

Registered No. M 4392
Registered as a Newspaper in Ceylon